Sep. 1925

பால பாரதி

1. ?? கூ. 1 பங்குனி

1925

JL
ன211, N2488
N25.1.6
160203

ஓம்

பாலபாரதி

புஸ்தகம் க | பங்குனி, கலியப்தம் ருOஉகூ | பகுதி கூ

OFFICE OF THE REGISTRAR ... MADRAS
18 SEP 1925

சிங்கரின் வீரமுழக்கம்!

(*)

(சுத்தானந்த பாரதியார் பாடியது)

உதாரி யந்த மாக்கி யில் வுலகின் றந்தை யாகிடும்
அகாலி வீரர் தாமெலாம் அரும் பெருந் துணைவரே!
விகாத மின்றி வாழுவோம், விரும்பிய நினைப்புடன்,
நிகாதர் அந்த உத்தமர் நினைத்து நம்மை வாழ்த்தவே!

எவன் நிறைவதெங்குமோ, எலாம் படைத் தமைத்திடும்,
அவன் இருப்பதெம்மனம்; அறம் அவன் விதித்ததே;
உவந் ததைப் பிடித்துமே யுலகெலாம் பரப்புவோம்;
அவன் படைப் பினங்களுக்கே யன்பு செய்வதெம் மதம்!

தன்னயம் பொறாமை வஞ்சத் தன்மை யாம் பிசாசுகள்,
வன்மை யற்று வீழவே வலிபடை மனத்துடன்,
சொன்மனஞ் செயல்கள் சுத்த மாய்த் துயர்களற்று நாம்
நன்மை செய்ய வாழுவோம் நலஞ் சிறக்க வெங்கினும்!

சிங்க மெங்கள் நெஞ்சமே! சிலை யெமது தோள்களே!
துங்க மெங்கள் செய்கையே! துணி வெம துணர்ச்சியே!
தங்கு முண்மை நாவதே! தகை யெமது செல்வமே!
அங்க மெங்கும் ஆண்மையே! அமர வாழ்வு மெம்மதே!

ஏங்கு நின்ற கால மேறி பேடு போல் அழுந்தனம்;
தூங்கு கின்ற நாட்டினைத் துணி வினில் எழுப்பியே,
பாங்குறப் பணி செயப் பணித்திருள் பறந்திட,
வீங்கு வெற்றி பெற்றெலோரும் வீர வாழ்வு வாழுவாம்!

(பாரத சக்தி)

ஸம்ராட் அசோகன்

(ஸ்ரீமான் மஹேசகுமார சர்மா எழுதுவது)

ஆறாம் அத்தியாயம்

ஆரியாவர்த்தத்தின் பிரதம சக்கரவர்த்தி

பிரதான மந்திரி இராதாகுப்தனும் கலிங்க நாட்டு யுத்தத்தில் திரண்டிருந்த எல்லாச் சிற்றரசர்களும் அன்று தர்பாரில் வந்து கூடினர். ஸம்புஷ்டாசாரியன் அங்கு குழுமியிருந்த வீரரையும் சிற்றரசரையும், விசேஷித்து மந்திரி இராதாகுப்தனையும் இகழ்ச்சிக் குறிப்புடன் நோக்கிவிட்டு ஒரு பொழுது இராஜமாதாவுடனும், ஒரு சமயம் பிரமீளையுடனும் இரகசியம் பேசிக்கொண்டு வீற்றிருந்தான். இளங்கோ வீதசோகனும் தன் ஆசனத்தில் அமர்ந்திருந்தான். அப்பொழுது படமாளிகையின் வாயிலிலிருந்து கட்டியங் கூறும் ஓர் இராஜ தூதன்— "மௌரியகுல ரவி மகதாதிபதி ஸம்ராட் அசோகப் பெருமானுக்கு ஜய ஜய!" என்று முழங்கினான். உடனே அசோகபூபதி பிரவேசிக்க, சிற்றரசர் அனைவரும் எழுந்து நின்று இராஜ தூதன் முழங்கிய மொழிகளையே தழுவி—"மகதாதிபதி ஸம்ராட் அசோக பெருமானுக்கு ஜய ஜய!" என்று ஜயகோஷம் செய்து அரசனை வரவேற்றனர். இராஜமாதாவும் ஸம்புஷ்டாசாரியனும்கூடச் சமயோசிதமாய் மிகுந்த மிடுக்குடன் ஆசி கூறி வாழ்த்தினர். ஆனால் இதுவரையில் இளங்கோ வீதசோகனாவது அமைச்சன் இராதாகுப்தனாவது அசோகனது வரவேற்பு விஷயமாய் ஒரு வார்த்தையேனும் உச்சரிக்கவில்லை. இராஜதேஜசுடன் ஜொலிக்கும் தன் மாற்றாந் சகோதரனது அழகிய வடிவத்தையும், அவனது புன் முறுவல் தவழ்ந்த முகமண்டலத்தையும், இராஜதேஜஸோடு காம்பீரியத்தையும் தூய்மையையும் கூட்டி ஒளிசெய்யும் அவனது கவர்ச்சியும் சாமானியமுமான ஆடையையும் வீதசோகன் வியப்புடன் கண் கொட்டாது பார்த்தவண்ணமாய் மௌன முற்றிருந்தான். அத்தகைய மகாநுபாவனுக்கு ஔபசாரிகமாகிய வரவேற்பு அவசியமென்றே அவனுக்குத் தோன்றவில்லை. ஆனால் அவனுடைய பிரகிருதிக்கு இராஜமாதா வேறு பொருள் கற்பித்து, அதை மிகுந்த ஆவலுடன் கடைக் கண்ணால் நோக்கிக் கொண்டிருக்கும் ஸம்புஷ்டாசாரியன் செவியில்—"கடைசியாக இளங்கோவின் உள்ளத்தில் பகைமை புகுந்துவிட்டது," என்று ஓத, ஆசாரியனும் புன்னகை பூத்துத் தன் அங்கீகாரத்தை உணர்த்தினான்.

ஆனால் அமைச்சன் இராதாகுப்தன் இதுகாறும் அசோகனுக்கு நல் வரவு வன் ஆற்றவில்லையென்பதைப் பற்றித்தான் எல்லோருக்கும் மிக்க ஆச்சரிய முண்டாயிற்று. அசோகன் படமாளிகையில் அடியெடுத்து வைக்கும்போதே இராதாகுப்தன் எழுந்து நின்றான். அவன் ஏதோ சந்தோஷகரமாகிய செய்தியைக் குறித்துத் தனக்குள்ளே யோசனை செய்து கொண்டிருப்பது போல் தோற்றியது. அவனுடைய சர்வாங்கத்திலும் உரோமம் சிலிர்த்தது. அவனது வலியற்ற கிழவுடல் ஆவேசத்தினால் நடுங்கலுற்றது. ஆனால் ஆநந்த மேலீட்டினால் அவன் வாய் திறந்து ஒரு வார்த்தையும் பேசக் கூடவில்லை. இப்பொழுது மந்திரியார் என்ன சொல்லப் போகிறார் என்றறிய சகல இராஜபக்த நேத்திரங்களும் பிரேமையோடும், அராஜக நேத்திரங்கள் கலக்கத்தோடும் ஆவலாய் எதிர்நோக்கியிருந்தன. ஸம்ராட் அசோகன் தனக்கென்றே அலங்கரிக்கப்பட்டிருந்த ஆசனத்தின் அருகே வந்து அதில் அமரப் போகையில், இராதாகுப்தன் வணக்கமாய்— "பொறுக்க வேணும், பெரும! சற்றுப் பொறுத்தருள வேணும்," என்று விண்ணப்பித்தான். அசோகன் ஆச்சரியத்தால் திகைத்து அவ்விடத்திலேயே வெருண்டுவிட்டான். எல்லோருடைய கண்களும் மந்திரியார் பக்கல் திரும்பின.

அப்பொழுது இராதாகுப்தன் தழுதழுத்த குரலில் பேசலுற்றான்:—"பொறுக்க வேணும், பெரும! சற்று நான் சொல்வதைக் கேட்டருள வேண்டும். விருத்தனாகிய இராதாகுப்தன் தங்களை உள்ளங்கொண்டு வாழ்த்துகிறான்; அதை மனமுவந்து ஏற்றுக்கொள்ள வேணும். 'மகதாதிபதி ஸம்ராட்' என்ற பட்டத்தை வழங்கி நான் இன்று தங்களை அவமதிக்க ஒருப்படேன். இன்று கலிங்கநாடு வீழ்ச்சியுற்றது. கலிங்கத்தைத் தவிர்த்து ஆரியாவர்த்தத்தின் மற்றெல்லா நாடுகளையும் தாங்கள் முற்கெனவே வென்றுவிட்டீர்கள். இதுவரையில் தாராளமாய் மூச்சுவிட்டுக்கொண்டிருந்த கலிங்க தேசமும் இன்று அரசர் பெருமானைச் சரண் அடைந்துவிட்டது! அதன் பயனாக இன்று வலிமை கொண்ட கலிங்க முள்ளிட்ட அகில ஆரியாவர்த்தத்தின் அரசர் அனைவரும் அடி பணிந்து தம்தம் மௌலிகளில் மிளிரும் மகுடங்களின் இரத்தின காந்தியினால் அரசர் பெருமானது அம்புயத்தாளிணையைப் பிரகாசிக்கச் செய்து கொண்டிருக்கின்றனர். பெரும! இன்று தொட்டுத் தேவரீரது வாழ்க்கையின் அத்தியந்த உஜ்ஜ்வலமான உத்தர பாகம் தொடங்கி விட்டது. ஆரியாவர்த்தத்தில் இன்று வரை பெரு வாழ்வு வாழ்ந்த புகழ் படைத்த பார்த்திபர்களுக்குள்ளே ஒருவரும் பெற்றிராத மிகமிக உயரியதும் தூய்மையுடையதுமாகிய பதம் தேவரீருக்கு எய்தியிருக்கிறது. எதுவரையில் மக்களின் உறைவிடமாக இம் மண்ணுலகம் விளங்குமோ, எதுவரையில் எங்கணும் அரசின்மை பரவாதிருக்குமோ, அதுவரையில், பெரும! தேவரீர் எல்லா நரபதிகளுக்குள்ளும் நடுநாயகமாய் மேருகிரி போல் மகோந்நத ஸ்தானம் வகித்து விளங்குவீர்கள். தேவரீரது ஜயகோஷம் சிருஷ்டியின் இறுதிகாறும் ஏக சுவரத்துடன் முழங்கிக் கொண்டிருக்கும். இன்று தேவரீர் தமது மௌரிய வம்சத்தை மிகமிக உச்சமாகிய பதத்தில் ஏற்றிவிட்டீர்கள். ஆரியாவர்த்தத்தின் சக்கரவர்த்தியாய் விளங்கும் சௌபாக்கிய கௌரவத்தை முதன் முதல் தேவரீரே அடைந்திருக்கிறீர்கள். வைதிக தர்மத்தின்படி மோக்ஷபதமானது; அல்லது தேவரீர் பின்பற்றும் தருமத்தின்படி நிர்வாண பதமானது, எவ்வாறு மக்கள் வாழ்க்கையின் இறுதியான லக்ஷ்யமாயிருக்கிறதோ, அவ்வாறே' பெரும! தேவரீரைப் போன்ற நரபதிகளுக்கு இறுதியாகிய லக்ஷ்யம் சக்கரவர்த்தி பதமே யாகும். அவ் இறுதியான லக்ஷ்யம் இப்பொழுது அரசர் பெருமானுக்குப் பிராப்தமாய்விட்டது. கலிங்க தேசத்தை வென்றதனால் தேவரீருக்குச் சக்கரவர்த்தி பதம் கிடைத்துவிட்டது. ஆகையால் அடியேன் அருள் நிறைந்த என் பிரியமாகிய அசோகப் பெருமானுக்கு ஆரியாவர்த்தத்தின் பிரதம சக்கரவர்த்தி என்னும் கௌரவம் பொருந்திய திருநாமம் சாத்தி நல்வரவு உபசாரம் ஆற்றுகின்றேன். அன்றியும் அரசர் பெருமானுக்குக் கிடைத்த இந்த உச்ச பதத்தை முன்னிட்டு அவரை என் உள்ளங்கொள்ள வாழ்த்துகின்றேன்."

பிரதான மந்திரி இவ்வாறு ஆவேசத்தோடு பேசிக்கொண்டிருக்கையில், அசோகனுடைய

முகமண்டலத்தை ஏற்கெனவே கவிந்திருந்த கம்பீரத் தன்மை பன் மடங்கு அதிகமாயிற்று. எல்லாச் சிற்றரசர்களுடைய செவிகளும் மந்திரியின் சொற்பொழிவை மடுப்பதில் இலயித்திருந்த போதிலும், அவர்களுடைய பார்வை—அன்பு நிறைந்த பார்வை—ராஜ பக்தி ததும்பும் கோமளமாகிய பார்வை—அசோகனிடத்தே ஒருங்கு திரண்டிருந்தது. இளகிய நெஞ்சினனாகிய வீதசோகனுடைய விழிகளிலிருந்தோ அன்பு நீர் ஊற்றெடுத்துப் பெருகியது. பிரமீலே கூட இது புத்த தேவனுடைய பவ்விய வடிவமோ என்று பாவித்து அசோகனது காட்சியில் ஈடுபட்டிருந்தாள். ஆனால் மந்திரி புரிந்த பிரஸங்கம் ஸம்புஷ்டாசாரியன் மனத்திலும் இராஜமாதாவின் மனத்திலும் எவ்வளவு விபரீதமான பயனை விளைத்தது! அவர்களுடைய முகங்கள் வரண்டு அட்டைக் கரியாய் மாறின. மாற்சரியத்தின் பூரண வடிவமும், பேராசைக்குப் பிறப்பகமும், பகைமையின் தீவிர மூர்த்தியும் ஆகிய இராஜமாதாவுக்கு மந்திரி வெகு நேரம் பேசுவதைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. அவள் பல முறையும் தன் செவிகளுக்கு, 'அசோகனுடைய இந்தக் கௌரவ ஸ்தோத்திர பாடம் கேட்பதாகிய விருதா காலக்ஷேபத்தை இதோடு நிறுத்துங்கள்," என்று கட்டளையிட்டும், அவளுடைய சுவாதந்திரிய விருப்பமுடைய செவிப் புலன்கள் அவளைச் சிறிதும் சட்டை செய்யவில்லை. அதன் மேல் இராஜமாதா மந்திரியின் பிரஸங்கத்தில் குறுக்கிட்டு—"மந்திரியாரே, இது என்ன, வீணே பிதற்றிக்கொண்டிருக்கிறீர்! இன்னமும் இங்கே நமக்கு நடத்த வேண்டிய முக்கியமான பலகாரியங்கள் இருக்கின்றன வென்பதன் நினைவாவது உமக்கு இருக்கிறதா?"என்றாள்.

இராதாகுப்தன் சற்று ஆவேசத்துடன் சொன்னான்—"இப்படி என் பிரசங்கத்தில் குறுக்கிட வேண்டாம். அரசர் பெருமானுக்கு வாழ்த்துக் கூறவேண்டுவது மிகமிக முக்கியமான காரியமாகும். மாற்சரியமுடைய கண்களைக் கொண்டு பார்க்கிறவர்களுக்கு என் பேச்சு வீணென்றே புலப்படும். அராஜகமென்னும் விஷ முட்டைப் பெற்ற செவியினர்க்கு என் பேச்சு வெறும் சொல்லாடம்பரமென்றே தோன்றும். இதைத் தவிர்க்கும் உபாயம் என்னிடத்தில் இல்லை. ஆனால் நான் சொல்வதெல்லாம் என் நெஞ்சின் அடியிலிருந்து சொல்லுகிறேனென்றும், சந்தர்ப்பத்தை அனுசரித்தே சொல்லுகிறேனென்றும் நம்புகிறேன். அரசர்களே, அசோகனைப் போன்ற அருங்குணம் வாய்ந்த அரச சக்கரவர்த்தி நமக்குக் கிடைத்திருப்பதைப் பற்றி நாம் பெருமை பாராட்ட வேண்டும். அரசர் பெருமானை "ஆரியாவர்த்தத்தின் பிரதமசக்கரவர்த்தி" என்று திருநாமஞ் சாத்தி நான் வாழ்த்தியவாறே நீங்களும் அவரை வாழ்த்துவதற்கு ஆவல் கொண்டிருப்பீர்கள். ஆகையால் என் பிரஸங்கத்தைச் சுருக்கிவிடுகிறேன். எனக்கு உண்டாயிருக்கும் ஆநந்தம் செப்பத்தரமன்று. அக் காரணத்தைக் கொண்டே அதைச் சாரமற்ற சாமானியமாகிய சொற்களால் வெளிப்படுத்துவது முடியாது. இது நிற்க, கட்டியக்காரர்களே, நீங்கள் முழங்கும் ஜயகோஷத்தில் சிறிது திருத்தம் செய்யவேண்டும். அரசர் பெருமானுடைய சக்கரவர்த்தி பதம் தொனிக்கும்படி ஜயகோஷமிடுங்கோள். நீங்கள் மட்டுமேயன்று, பாத கண்டத்திலே இப்பொழுது உள்ளவர்களும், இனி உண்டாகப் போகிறவர்களும் சிருஷ்டியின் பிரளய காலம் வரையில் உற்பத்தியாகப் போகின்றவர்களும் ஆகிய மக்களனைவரும், நாவன்மையை இழக்காதவர் ஒவ்வொருவரும், மிகுந்த பெருமையோடு தம் தம் பாஷைகளிலே ஆரியா வர்த்தத்து இந்த ஆதி சக்கரவர்த்தியின் ஜய கோஷத்தை முழங்கக் கடவராக."

இவ்வாறு பேசிவிட்டு மந்திரி தன் ஸ்தானத்தில் அமரவும், எல்லாச் சிற்றரசர்களும் "ஆரியாவர்த்தத்தின் ஆதி சக்கரவர்த்தி மஹா ராஜன் அசோகன் வெல்க!" என்று வாழ்த்தி எல்லோர் செவிகளும் செவிடுபடும்படி ஜயகோஷம் செய்தனர். அந்த மங்கல வாழ்த்தோடு கூடிய வெற்றியார்ப்பின் இடையே அசோகன் அரியணை ஏறினான். ஸம்புஷ்டாசாரியனும் இராஜமாதாவும் அசோகனுக்கு இப்பொழுது உண்டாயிருப்பதும் இனி உண்டாகப் போவதும் ஆகிய பெருங் கௌரவத்துக்குத் தாமே காரணபூதர்களென்று பாவித்துக் கொண்டு அதைக்குறித்து உள்ளுக்குள்ளேயே தம்மை நொந்து கொள்ளலாயினர். அவர்களுடைய மலர்ந்த முகங்கள் வாடிப்போய் விட்டன. பிரசண்டமாகிய ஜயகோஷத்தினின்றும் உண்டான எதிரொலி அமர்ந்த உடனே அசோகபூபதி எல்லோரையும் உட்காருமாறு சங்கேதம் செய்தான்.

அப்பொழுது அசோகன் பேசலுற்றான், "ஆசாரிய ஸ்வாமிகளே, அன்னையாரே, தாங்கள் இருவரும் தங்களுடைய யுக்தியாலும் கௌசலத்தாலும், இளங்கோ வீதசோகன் தனது வீரிய சௌரியங்களினாலும், கலிங்க நாட்டின் மேல் வெற்றி பெற்றுவிட்டீர்கள். அது பற்றி மகத நாட்டின் அரசபதம் தங்களிடத்தில் நன்றி பாராட்டுகிறது. இந்திரபுரத்தில் பிரவேசிக்கும் பொருட்டுத் தாம் என்ன யுக்தியைப் பிரயோகித்தீர்கள், இளங்கோ எத்தகைய சௌரியம் காட்டினான், இவற்றின் ஆதியோடந்தமான வர்ணனையை நான் கேட்கவேண்டியிருக்கிறது. அதைப் பின்னர் ஒரு நாளைக்கு வைத்துக்கொள்ளலாம். இப்பொழுது கலிங்கநாட்டின் அரசியல் சம்பந்தமாய் ஏற்பாடு செய்துவிட்டுப் பாடலிபுத்திரத்திற்குத் திரும்பிப்போக விரும்புகிறேன். மிருகேந்திர மன்னன் எங்கே இருக்கிறார்? அவர் சந்தி செய்துகொள்ளச் சித்தமாய் இருக்கிறார் அல்லவா?"

பிரமீலா—"மிருகேந்திர மன்னனை நேற்றிரவு எவனோ கொன்று விட்டான்."

அசோகன்—"என்ன சொன்னீர்? மிருகேந்திர மன்னன் கொலையுண்டாரா? மகா ஆச்சரியமாய் இருக்கிறதே!"

ஸம்புஷ்டாசாரியனும் ஆச்சரியத்தை வெளியிட்டுக் கூறினான்—"அன்றியும் இந்தக் கொலை அரசமாளிகையிலே மிருகேந்திர மன்னனுடைய பள்ளியறையின் பக்கத்திலேயே நடந்திருக்கிறது. அது மாத்திரமல்ல, அக் கொலை செய்ததும் அவருடைய நம்பிக்கைக்குரிய ஒரு மனிதனே."

"இவ் விதமும் நடக்குமோ! அப்படியானால் இதை உள்ளுற ஆராய்ந்து மூல காரணத்தை அவசியம் அறிய வேண்டும். மிருகேந்திர மன்னனைப்போன்ற சூரனாகிய எதிராளி எனக்கு இது வரையிலும் நேர்ந்ததில்லை. அவருடைய சௌரியத்தை மெச்சி இன்று நான் விரிவான வாழ்த்துரை கூறுவதாயிருந்தேன். நல்லது. நடந்தது நடந்துவிட்டது. அரசனுடைய சவம் எங்கே இருக்கிறது?"

பிரமீலா—"டோராவுக்கு வெளியே வைக்கப் பட்டிருக்கிறது."

"கொலை எவ்விதம் செய்யப்பட்டது?"

"வாளினால் கழுத்து அறுப்புண்டிருக்கிறது."

"வாள் அகப்பட்டதா?"

"ஆஹா, பிணம் காணப்பட்ட இடத்திலேயே வாளும் விழுந்து கிடந்தது. இதோ இருக்கிறது."

"கொலை புரிந்தது யார்? கொலையாளி பிடிக்கப் பட்டானா?"

"ஆம், மஹா ராஜா; மிருகேந்திரனைப் பிடிக்க அங்கே போகும்போது அவன் ஏற்கனவே கொலை செய்துவிட்டு அரசனுடைய படுக்கையின் பக்கமாய் நின்றிருந்தான். அவன் பிடிக்கப்பட்டு இங்கே கொண்டுவரப் பட்டிருக்கிறான்."

"எங்கே பார்ப்போம்; அப்படிப்பட்ட நராதமன் யார்?" அவனை என் முன் கொண்டுவந்து நிறுத்துங்கள். கூடிய விரைவில் அந்தத் துஷ்டனைத் தண்டிக்கவேண்டும்."

பிரமீலை தன் பக்கத்தில் நின்ற சேவகனுக்குச் சைகை காட்டினாள். அவன் சிதாநந்த ஸ்வாமிகளைக் கொண்டுவரச் சென்றான்.

அசோகன் பிரமீலையை நோக்கி—"நீர் யார்?" என்று கேட்டான். பிரமீலை அசோகனுடைய கேள்விக்குத் தக்கபடி விடை கூறக்கூடாதவளாய் இருப்பாளெனக்கருதி ஸம்புஷ்டசாரியன் இடையிற் புகுந்து இயம்பினான்—"இவர் கலிங்க தேசத்து மந்திரி விசாகனுடைய பத்தினி. இவர் பெயர் பிரமீலா."

"இந்திர பவன குகையில் நடந்த கூட்டத்துக்கு முகமூடி யிட்டுத் தங்களுடன் இவர் தாமோ வந்திருந்தது?"

"ஆம், மஹாராஜா," என்று ஸம்புஷ்டாசாரியன் மென்று விழுங்கிக் கொண்டே விடையளிக்கத் தொடங்கி—"கலிங்கதேசத்தைவெற்றி கொள்வதில் பிரமீலாதேவி நமக்குப் பேருபகாரம் செய்திருக்கிறார்," என்றான்.

"நீர் இவர்களுக்கு எப்படி உதவி செய்தீர்? உமது கணவனையே வஞ்சித்து, உம்முடைய ராஜ்யத்தையும் எதிர்த்து அக்கிரமமாய்க் கலகம் செய்துதானே இவர்களுக்குச் சகாயம் பண்ணினீர்?"

இவ் விஷயம் இவ் வளவில் நின்றுவிட்டது.

ஏனெனில் அப்பொழுதே பிரமீலையின் சேவகன் சிதாநந்த ஸ்வாமிகளை இட்டுக்கொண்டு வந்தான். ஸ்வாமிகளின் முகத்தைப் பார்த்துக் கொண்டே அசோகன் பிரமீலையை வினவினான்:

"இவரைத் தானே மிருகேந்திரமன்னனைக் கொன்றவரென்று நீர் சொல்வது?"

"ஆம், மஹாராஜா."

"நன்றாய்ப் பார்த்துச் சொல்லும்; தீர்க்கமாய் ஆலோசித்துச் சொல்லும். இந்த சந்நியாசி கோலம் பூண்டவரும் இந்த சம்சாரபராமுகருமாகிய யதியோ மிருகேந்திரனைக் கொன்றது?"

"ஆம், மஹாராஜா."

அசோகன் சிதாநந்தனரை நோக்கி—"அடிகாள், ஸ்வாமிகளின் நாமதேயம் என்ன?"

"இந்தச் சடலத்தைச் சிதாநந்தன் என்று சொல்லுவார்கள்," என்று ஸ்வாமிகள் கம்பீரமாய் விடையளித்தார்.

ஹரித்வாரத்துச் சிதாநந்தஸ்வாமிகள் தேவரீர் தாமோ?"

"ஆம் சிஷ்யர்கள் சகிதமாய் நான் ஹரித்வாரத்தில் இருந்து வருகிறேன்."

அசோகன் பிரமீலையை மீண்டும் எச்சரித்துக் கூறினான்—"பிரமீலாதேவி, கவனித்துக்கேளும்: ஹரித்வாரத்து இந்தச் சிதாநந்தஸ்வாமிகள் மிருகேந்திர மன்னனுடைய குருவாவர்; தம் சிஷ்யனைக் காப்பாற்றுவதை விட்டு அவனை இவர் கொலை செய்வாரோ? இவர் தாமா அவ்வரசனைக் கொன்றது? இன்னும் நீர் அப்படியே சொல்லுகிறீரா?"

பிரமீலை மகா சத்தியவதியைப் போல்நடித்து,

"பெருமை, நான் எதை ஒரு முறை சொல்லி விட்டேனோ அதை நன்றாய் ஆலோசித்து எனக்கு முழு நம்பிக்கை உண்டான பிறகே சொல்லியிருக்கிறேன்."

ஸம்ராட் அசோகன் வியப்பினால் திகைத்துப் போய்ச் சற்றுநேரம் ஸ்தம்பித்து உட்கார்ந்திருந்தான்.

பிறகு சகஜஸ்திதியடைந்து— "அடிகாள், தேவரீர்மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றத்தைத் தேவரீர் ஏற்கனவே கேட்டீர்களல்லவா? இது சம்பந்தமாய்த் தேவரீர் ஏதேனும் சொல்லிக் கொள்ள விரும்புகிறீர்களா?" என்று வினவினான்.

சிதாநந்தனர் சாந்தமாய் விடையளித்தார்—"மிருகேந்திர மன்னன் கொல்லப் படவில்லை என்பது தான் நான் சொல்லும் சமாதானம்."

"கலிங்காதிபதியாய் இருந்த மிருகேந்திர மன்னன் இன்னும் பிழைத்திருக்கிறாரா?"

"ஆம்; அவர் எங்கேயோ ஓரிடத்தில் உயிரோடிருக்கிறார்."

"மிருகேந்திரனுடைய பிரேதத்தைக்கொண்டு வாருங்கள்," என்று அசோகன் உடனே கட்டளையிட்டான்.

பிரேதம் கொண்டுவரப்பட்டதும், அதை எல்லோரும் பார்க்கிறார்கள்; ஆனால் தலை இல்லை, உடல் மட்டுமே இருக்கிறது.

அசோகன் கேட்டான்—"பிரமீலாதேவி, இது தலையற்றதாய் இருக்கிறதே! தலை எங்கே?

"என்னை விட இந்தக் கேள்விக்கு விடை இந்தச் சாமியார் மிக ஸ்பஷ்டமாய் அளிக்கக் கூடியவர்."

அசோகன்—"சிதாநந்தரே, இந்தத் தலையற்ற சரீரம் யாருடையது?"

சிதாநந்தனர்— "இது மிருகேந்திரமன்னனுடைய சரீரமல்ல."

"எப்படி?"

"மிருகேந்திர மன்னன் உயிரோடிருப்பதினாலேயே."

"பிரமீலாதேவி, இந்தப் பிரேதம் மிருகேந்திர மன்னனுடையதே என்று நீர் எப்படிச் சொல்லுகிறீர்?"

அசோகன் வெகு நேரம் வரையில் சிந்தையில் ஆழ்ந்த வண்ணமாய் உட்கார்ந்திருந்தான். அவனுக்குச் சிதாநந்தனரின் அருமை பெருமைகளைப் பற்றிய செய்தி தெரிந்திருந்தது. மிருகேந்திரன் மீது சிதாநந்தனருக்கு அளவு கடந்த அன்பு உண்டென்றும் அவன் கேள்வியுற்றிருந்தான். ஆகவே இந்தக் கொடுஞ் செய்கையைச் சிதாநந்தனர் செய்திருக்கமாட்டார் என்று அவன் புத்தியிற் பட்டது. ஆனால் மிருகேந்திரன் ஜீவித்திருந்தால் அவன் எங்கே இருக்கிறான் என்றகேள்விக்குச் சிதாநந்தனர் ஒன்றும் விடை அளிக்கவில்லை. இதனால் அசோகனுக்கு இன்னது செய்வதென்று தோற்றமல் பெருந் தடுமாற்றம் உண்டாய்விட்டது. சிறிது நேரம் சிந்தித்துப் பிறகு அவன் மந்திரி இராதாகுப்தனிடம் சொன்னான்—

"ஐவர் யோக்கியர் அடங்கிய குழுவினைக் கொண்டு இந்தச் சரீரத்தைப் பரிசோதிப்பியுங்கோள். பரிசோதித்து, இந்தச் சரீரத்தின் சம்பூர்ண விவரணம் எழுதுவியுங்கோள். மேலும் மிருகேந்திரமன்னனுடைய பிரேதத்தின் தகன ஸம்ஸ்காரம் எவ்வளவு சம்மானத்துடன் நடைபெறவேண்டுமோ அவ்வளவு சிறப்பாய் அவ

ருடைய சமயாசாரத்தின்படி இந்தச்சவத்துக்குத் தகன கிரியை நடத்துவியுங்கோள். பிரமீளா தேவியையும் இந்த அபியோக சம்பந்தமான செய்திகளை அறிந்திருக்கும் சகலமானவர்களையும் இன்று முதல் சரியாய் ஒரு மாசம் கழிந்தவுடன் பாடலிபுத்திரத்தில் எமது தருமாதிகாரத்துக்கு வந்து சேரும்படி கட்டளை இடுங்கோள். அன்றியும் இந்தச் சவத்தின் மீதுள்ள தனி வாள் முதலிய என்னென்ன பிற தடையங்கள் உண்டோ அவற்றையெல்லாம் பாடலிபுத்திரத்துக்கு அனுப்புவியுங்கோள். மிருகேந்திர மன்னனது கொலை நடந்திருந்தால், அதை நன்றாய் ஆராய்ந்து உண்மையை வெளிப்படுத்த வேண்டியதாகிய காரியத்தை நாம் எல்லோரும் உற்சாகத்துடன் செய்தல் வேண்டும்."

மந்திரி இராதாகுப்தன் சிறிது தலை குனிந்து—"சக்ரவர்த்தியாரின் ஆஞ்ஞைப்படியே," என்றான்.

அசோகன் சிதாநந்தனரை விளித்துக் கூறினன்—"அடிகாள், தேவரீரும் எம்முடன் எமது இராஜதானிக்கு எழுந்தருளுங்கள். தேவரீருடைய ஸ்நாந அநுஷ்டானங்களுக்கும் பூஜை பாராயணம் முதலியவற்றுக்கும் வேண்டியவொழுங்குகள் தேவரீருடைய வேஷத்துக்கும் விருத்திக்கும் தக்கபடியே செய்யப்படும். மந்திரியாரே, இது விஷயத்தில் இவருடைய தரும கிரியைகளில் யாதொரு தடையும் உண்டாகாதிருக்கும் வண்ணம் தக்க ஏற்பாடுகள் செய்விப்பீராக. இவருடைய ஸ்நாநஸந்திகள், இவருடைய ஜப தபங்கள், இவருடைய அன்னபானங்கள், இவருடைய நியமநிஷ்டைகள் முதலிய பிறகாரியக் கிரமங்களும் இவருடைய திருவுள்ளத்தின்படியே நடைபெறுதல் வேண்டும்."

அப்பொழுது ஸம்புஷ்டாசாரியனது மாற்சரியம் நிறைந்த வாய் திறந்து—"பெரும, இவையெல்லாம் இராஜநீதிக்கு விபரீதமானவையாகும். கொலையைப்போன்ற மிகக்கொடிய குற்றத்தைச் செய்தவனும், மிக மிக இழிந்த கைதியைப் போல் நடத்தப் படுவதற்குரியவனும் உள்ளவனை இவ்வாறு அன்பும்ஆதரமும் காட்டிப் பெருமைப்படுத்துவது எவ்வளவுமட்டில் இராஜ நீதிக்குப் பொருந்தியதென்பதை யோசித்துப் பார்க்கவும்," என்று கூறியது.

"ஆசாரிய ஸ்வாமிகளே, இராஜ நீதியென்பது அரசரின் பொருட்டும் அவர்களது இல்லறக்குடி மக்களின் பொருட்டுமே ஏற்பட்டதாகும். தாம் போலியாகிய ஸம்சாரவிரக்தரானவர்களுக்கு இன்று முதல் இத்தகைய விவகாரங்களில் தலையிடாமலிருப்பதே சால்புடைத்தாம். சிதாநந்த ஸ்வாமிகளின் இற்றை நாள் வரைத்தாகிய மாசற்ற ஒழுக்கத்தை உற்றுநோக்கியும், அவரது வேடத்தையும் விருத்தியையும் உன்னியும், மிருகேந்திர மன்னனுடன் அவருக்கிருந்த தொடர்பைக் கருதியும் பார்க்குமளவில், அவர் முற்றிலும் குற்றமற்றவரென்றே எனக்குத் தோற்றுகிறது."

அசோகன் இவ்வாறு பேசிக்கொண்டே இருந்தான். ஆனால் பிரமீளையும் இராஜமாதாவும் ஸம்புஷ்டாசாரியனும் ஆகிய இவர்களின் செவிகளில் 'அவர் முற்றிலும் குற்றமற்றவரே' என்ற வார்த்தைகள் விழுந்தவுடனே, தம்மையும் அறியாமல் அவர்களின் வாய்களிலிருந்து—

"சிதாநந்தன் குற்றமற்றவனென்று சொல்லுகிறீர்கள்?" என்ற கேள்வி வெளிப்பட்டது.

"இதுவே என் உள்ளக்கிடக்கை. இவ்வளவு அவசரப்பட்டுக் கத்தாதேயுங்கள். இவ்வளவு ஆத்திரப் படாதேயுங்கள். உங்களுடைய சத்துருவை நான் இன்று விடுதலை செய்து விடவில்லையே. சிதாநந்தனர் குற்றவாளியென்று

நிரூபணமாகிவிட்டால், இத்தகைய புனித வேடத்தைப் பொய்க்கோலமாக்கிக் கொலையையொத்த கோரகருமத்தைச் செய்தவனுக்கு, குருப்பிரேமை என்னும் போலியன்பு நடித்துத் தன் பரமப் பிரிய சிஷ்யனைக் கொலைசெய்த பாதகனுக்கு, மிகமிகக் கடுமையான தண்டனையை, காண்போரும் கேட்போரும் நெஞ்சம் நடுக்கிடும்படியான தண்டனையை, விதிப்பதில் நான் சிறிதும் முன்பின் பார்க்கமாட்டேன். ஆனால் ஸ்வாமிகளின் மீது இந்த அபியோகம் கேவலம் துவேஷபுத்தியினாலோ, மத விரோதத்தினாலோ, அல்லது மாற்சரியம் காரணமாகவோ கொண்டுவரப்பட்டதென்று தெரியவருமாயின், அப்பொழுது, பிரமீளாதேவி இத்தகைய சந்நியாசியின் மீது, இத்தகைய மஹாபுருஷன் மீது, வீண்குற்றஞ் சுமத்தி அவரை அவமானம் பண்ணியதற்காகவும் அவ்வளவே கொடூரமான தண்டனையை எதிர்பார்த்திருக்க வேண்டுமென்பதையும் அறிந்துகொள்ளுங்கள்."

கோர கிருத்தியங்களைச் செய்திறவளாகிய பிரமீளைக்குக் கூட அசோகனுடைய இந்தப் பேச்சைக் கேட்ட மாத்திரத்தில் பயமுண்டாயிற்று. ஆனால் தன்னுடைய நெஞ்சம் நடுக்கிட்டதை எவரும் அறியும்படி அவள் காட்டிக் கொள்ளவில்லை. தன் கையிலிருந்த வாளோடு வேடிக்கையாய் விளையாடியவண்ணமாய் அவள் —"விரைவிலேயே உண்மை வெளிப் பட்டு விடும்," என்றாள்.

அதன்பின் ஒருவரும் ஒன்றும்பேசவில்லை. சிதாநந்தனருக்குத் திரும்பிச் செல்ல அனுமதி கிடைத்தது. அவர் பிரமீளையின் சூழ்ச்சியிலிருந்து மீட்சி பெற்றவராய், மாதர்களின் தன்மை உள்ளபடியே மிக மர்மமானதென்னும் உலக சித்தாந்தத்தின், வனங்களிலும் புதர்களிலும் மான் பேடை மயிற்பேடைகளுள்ளுங் கூடக் கிடைக்கப் பெறாத இந்தச் சித்தாந்தத்தின் மெய்ம்மையை அனுபவித்துக்கொண்டே போய்விட்டார். இத்தகைய அநுபவம் அவருடைய வாழ்க்கையில் அவருக்கு இப்பொழுதே முதன் முறையாக உண்டானது.

சிதாநந்தனர் புறப்பட்டுச் சென்ற பின்பு தர்பார் நெடுநேரம் நடக்கவில்லை. ஸம்புஷ்டாசாரியன் கலிங்க நாட்டின் சிம்மாசனத்தை இராஜமாதாவின் சகாயத்தைக் கொண்டு விசாகாநந்தனுக்குக் கிடைக்குமாறு செய்வித்தான். ஆனால் இதன் பொருட்டு விருத்தன் விசாகாநந்தனும் மற்றும் கலிங்கநாடு முழுதும் பௌத்த தர்மத்தில் நிலைபெறக் கடமைப்பட வேண்டியதாயிற்று. இப்பொழுது கலிங்க நாடு மகத தேசத்தின் பாக்கியசாலியான சக்கரவர்த்தியாகிய அசோகனது குடையின் கீழ் வந்து விடவே வைதிக தர்மத்தின் பிரதான பீடமாகிய இந்திரபுரத்தின் பெருமை தங்கிய பெயர் வெறும் பெயராகவே நின்றுவிட்டது. பிரமீளை கலிங்க நாட்டின் இராணியாய்விட்டாள். அவளுடைய பிரதிஞ்ஞை நிறைவேறிவிட்டது. அவளை இளமைப் பருவத்தில் அன்புடன் ஆதரித்து வளர்த்த மிருகேந்திரனும் அவனுடைய வம்சமும் அழிந்து பட்டனர். ஆனால் இவ் ஆனந்தாநுபவ காலத்திற்கூட பிரமீளையின் முகம் மிகவும் வாடி ஒளி குன்றியே இருந்தது.

கலிங்க நாட்டின் அரசியல் நிர்வாக சம்பந்தமாய் ஸம்புஷ்டாசாரியனும் இராஜமாதாவும் செய்த ஏற்பாடுகளையெல்லாம் அசோகன் அங்கீகரித்தான். ஆனால் ஒரு நிபந்தனை மட்டும் ஏற்படுத்தினான். அது யாதெனில், மிருகேந்திர மன்னன் ஜீவனோடு திரும்பி வந்தால், அல்லது அவனது புதல்வன் உபேந்திரன் பௌத்த தர்மத்தை ஏற்று பௌத்த தர்மத்தையே ராஷ்டிர தர்மமாக்க ஒப்புக்கொண்டால் அப்பொழுது கலிங்கநாட்

டின் சிம்மாசனத்தைத் தகப்பனுக்காவது தனய னுக்கேயாவது கொடுக்க வேண்டியதாகும் என் பதேயாம். இந்த நிபந்தனைக்குட்பட்டே விசாகா நந்தன் தன் பத்தினியின் உதவியால் கிடைத்த சிம்மாசனத்தில் ஏறினான். இந்த நிபந்தனைக்குட் பட்டே பிரமீளை கலிங்கநாட்டின் இராணியானாள். அவளுடைய குடிலச் சூழ்ச்சி முற்றிலும் பலித்து விட்டது; இதிலிருந்து அவளுடைய மனோரதம் ஒருகால் நிறைவேறிய போதிலும், அவளுக்குச் சித்த சமாதானமாவது சந்தோஷமாவது சிறி தேனும் உண்டாகவில்லை.

இளங்கோ ஜிதேந்திரன் வைதிக சமயத்தின் வீராபிமானியாகவும் சித்தாநந்தனின் பரம சிஷ்யனாகவும் மிருகேந்திரனுடைய உக்கிரத் தன்மை, ஆண்மை, ஜீவசக்தி இவை யவ்வளவும் ஒருங்கேயமையப் பெற்றவனாயும் விளங்கினான். அவன் ஒருகாலும் பௌத்த தருமத்தை ஏற்பவ னல்லன் என்பது பிரமீளையின் திடமான நம்பிக்கை. அன்றியும் மிருகேந்திரன் கொல் லப்பட்டானென்று அவள் வலியுறுத்திவந்தாள். அப்படியிருக்க, பிரமீளைக்கு இவ்வளவு சிந்தையை உண்டாக்கக்கூடியதாக அசோகனுடைய அந்த நிபந்தனைக்கு என்ன ஆற்றல் இருந்தது? யாதொரு நிபந்தனையும் இன்றியே கலிங்க நாட்டின் அரசு கிடைத்துவிட வேண்டுமென்பது பிரமீளையின் பேராசையாய் இருந்தது. ஆனால் அந்தப் பேராசை பூர்த்தியாகவில்லை. மிருகேந் திரன கொலையுண்டிருந்தானென்றும், ஜிதேந் திரன் பௌத்த மதத்தை ஏற்கமாட்டானென் றும் இராஜமாதாவும் ஸர்புஷ்டர்சாரியனும் எண்ணியபடியால், அசோகன் ஏற்படுத்திய நிபந்தனை வெறும்லோகாசாரத்தின்பொருட்டே யென்று அவர்களுக்குத் தோற்றியது. பிர மீளையோ அதைக் கேட்ட மாத்திரத்திலேயே மூர்ச்சையற்றவள்போல் ஆனாள். இந்த நிபந்தனையை ஏற்படுத்த வேண்டியதில்லையென்று அசோக னிடம் சொல்ல அவளுக்குச் சாகசம் உண்டாக வில்லை. தன்னுடைய சம்பூர்ண சுகத்தை நப் பாதிப்பாயிருக்கிற இந்த நிபந்தனையை எப்படி அகற்றுவதென்று அவளுடைய பாதக நெஞ்சம் இப்பொழுது சிந்திக்கத் தொடங்கியது. இந்த நிபந்தனை நீக்கப்படா விட்டால், அதை ஏற் புறுத்துகிறவனையே இவ்வுலகத்திலிருந்து ஒழித்துவிடுகிறதென்ற எண்ணங்கூட இறுதியில் அவளுடைய நீசமாகிய மனதில் உண்டாயிற்று. தேஜஸ்வியாகிய அசோகன் இதுவரையில் சிம்மா சனத்தில் உட்கார்ந்திருந்தான். அவனுடைய உஜ்ஜ்வலமாகிய நோக்கைப் பிரமீளை ஒரு பயங்கர மான விழிவிழித்தாள். அப்பொழுது அவளு டைய நீசமும் அசத்தியமுமான விசாரபரம்பரை யின் எல்லையானது, 'நிபந்தனை விதிக்கிறவனையே இவ்வுலகத்திலிருந்து தொலைத்து விட்டாலோ,' என்கிறமட்டும் போய் எட்டிவிட்டது. இந்த வார்த்தைகளை அவள் உள்ளுக்குள்ளேயே சொல் லிக்கொண்டு மறுபடியும் அசோகன் முகத்தை நோக்கினாள். அவளுடைய பயங்கரமான முகத் தைப் பார்த்து அசோகன் சொன்னான்—"பிர மீளாதேவி, எம்முடைய நிபந்தனை உம்முடைய மனோரதத்தைப் பெரிதும் பாதிப்பதாகத் தோற்றுகிறது. ஆனால் அதைத் தவிர்க்க உபா யமில்லை. அதை வற்புறுத்தாமல் தீராது. மிரு கேந்திரன் ஜீவித்திருந்தால் நிபந்தனை இல்லாம லேயும், இளங்கோ ஜிதேந்திரன் விஷயத்தில் அவன் பௌத்த மதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்னும் நிபந்தனைக்குட்பட்டும், அவர் களுக்கு அவர்களுடைய ராஜ்யத்தைத்திருப்பிக் கொடுத்தே யாகவேண்டும். இனி பிரணயினியின் செய்திதான் நிர்மானமாக வேண்டியிருக்கிறது."

இராஜமாதா—"மிருகேந்திரன் மகள் பிரணயி னியைப் பற்றி இப்பொழுது யோசிக்க வேண்டிய அவசியமில்லை. மிருகேந்திரனுடைய வம்சம் இப்பொழுது இராஜ்யத்திலிருந்து வேருசாய்

நழுவியே போய்விட்டது. ஆகவே பிரண யினியை வீதசோகனுக்கு விவாகம் செய்து கொள்ளும் விஷயத்தில் நமது பிரதிஷ்டை, மானம், மரியாதை இவைகளைப் பற்றிய கேள்வி பிறக்கும். ஆதலால், பிரணயினியின் பேச்சு அந்த மட்டிலேயே இருக்கட்டும். அவளால் இப் பொழுது நமக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை."

இந்த சம்பாஷணையுடன் பச்சைக் கூடாரத்திற் கூடிய தர்ப்பார் முடிந்து விட்டது. கூட்டத்தின் காரியம் முடிகிறசமயத்தில், இராஜமாதா அந்த அவசரத்தையும் 'தடபுடலை'யும் பயன்படுத்திக் கொண்டு அசோகனிடமிருந்து ஜிதேந்திரனைப் பிடிப்பதற்குக் கட்டளை பெற்றுக்கொண்டாள்.

ஆரியாவர்த்தத்தின் பிரதம சக்கரவர்த்தி தன் சக்ராதிபத்தியத்தின் முதல் தர்பாரைச் சமாப்தி செய்து துவாரபாலகர்களின் ஜயகோ ஷத்தினிடையே வெளியே செல்லலானான். அவனை நோக்கித் தீப்பொறி பறக்கும் பயங்கர மானவிழிவிழித்துப் பற்களை நறநறவென்றுகடித் துப் பிரமீளை இவ்வாறு வாழ்த்துரைவழங்கினாள்.

"நிபந்தனை நீங்காவிட்டால், நிபந்தனை விதித்த வனையே இவ்வுலகத்திலிருந்து ஒழித்துவிடமாட் டேனா!!!"

ஜார துஷ்டிரன்

(ஸ்ரீ சுத்தானந்தபாரதியார் எழுதுவது)

க

"ஜகதீசா! ஏ அஹுரமஜ்தனே! நீ என்னைப் பதி னைந்து வயது வரையில் வளர்த்தாய்! என் வாழ்வின் செடிக்கு நல்லறிவு ஊற்றினாய்! என்னை ஏன் இப்போது அகன்றாய்! பேயைத் தொழுது என் நல்வாழ்வு பிடிக் காத என் பெற்றோர்கள் என்னை மாயக்காரி யென் றெண்ணி விரட்டி யடித்துவிட்டனர்! என்னைச் சுற்றி லும் உள்ள உலகு அஹ்றிமானுடைய (சாத்தான்) ஆளு கையில் அல்லற் படுகிறது! பில்லி சூனியமும், மாயமும், ஜாலமும் சதியாலோசனையும், பேராசையும், பொறு மையும், கொலையும், களவும், அசுரத்தன்மைகளும், உலகை நரக இருளில் ஆழ்த்தின! என் நாட்டுச் சகோதரர் ஒற் றுமை யற்று அன்பை மறந்து ஒருவருக்கொருவர் வாத மிட்டு மடிகின்றனர்! அந்தோ உன்னை மறந்தனர்! பிசாசு களைத் தொழுகின்றனர்! ஆரியரின் சீரிய ஒழுக்கங்களின் மேல் காரிருள் மூடியது! இந்தியாவிலுள்ள எனது ஆரிய சகோதரர் மட்டும், யோகானம் செய்துகொண் டும் அத்யாத்ம வாழ்வில் உயர்ந்தும் வரும்போது, ஈரானிலுள்ள ஆரியர்மட்டும் தம் பழைய செந் தன்மைகளை மறந்திருப்பது உன் திருவுளமோ! ஏ தீன ரக்ஷகா! உன் பாதமே எமது துணை! எனக்கு வேறு பற் றில்லை! சுற்றத்தார் என்னை வெறுத்தனர்! குணத்திற் சிறந்த ஸ்பைடாமர் வசிக்கும் இந்த நகரில் நான் வந் ததும் உன் எண்ணத்தினாலேயே. ஏ அஹுரா! என் துணைவா, என் மனக் கவலையை மாற்றுவாய்! அதனி னும் பெரிய எனது நாட்டின் கவலையை மாற்றுவாய்!" என்று புலம்பிக்கொண்டு துந்தோவா என்னும் இந்தப் பெண்மணி சோர்வுற்றாள். திடீரென ஒரு ஒளி தென் பட்டது. "ஒழுக்கத்திற் சிறந்த துக்தோவா, நீ அஞ் சாதே! அஹுரான் உன் வயிற்றிற்குள் தன் தூதனின் சோதியை வைத்திருக்கிறான்! உனக்கொரு தெய்வீக மைந்தன் பிறப்பான். அவனால் உலகெலாம் இன்புறும். ஏ கன்னியே, நீ உடனே பௌருஷாஸ்பனை மணம் புரி வாயாக!" என்று தேவதூதர்கள் சொல்லி மறைந்தனர். துந்தோவா துயர் நீங்கினாள். பக்தியில் வீங்கினாள்.

பௌருஷாசுவன் என்ற புனிதன் இக் கர்ப்பிணியை மணந்தான். சில ஆண்டுகளுக்கு முன்னே 'இம்' என்னும் ஈரானிய அரசன் கனவில் கண்ட இரக்ஷகனே தமக்குப் பிறக்கப் போகிறான் என்ற நினைப்புடன் அவர்கள் வாழ்ந்து வந்தனர்.

௨

கலி ௨௪௪௨-ம் ஆண்டில் (கி.மு.௬௬௦) ஒரு நாள் இயற்கைத்தாய் என்றுமில்லாத வனப் பெய்தி மகிழ்ந்தாள். ஒரு பெருங் கவலை நீங்கியது போல பூமிதேவி களி துள்ளினாள். நல்லவர்கள் தமது குறைகள் அற்றது போல் உணர்ந்தனர். தீயோர் நெஞ்சம் திகிற்பட்டது. வானம் புன்னகை புரிவது போல் ஒரு புதிய மீனைக் காட்டிற்று. அதோடு துக்தோவாவின் வயிற்றில் தவங்கிடந்த தேவதூதனும், மண் மகிழ உதித்தான். குழந்தையின் மேனி ஒளி பிறங்கிற்று. பல ஆச்சரியக்குறிகள் அவனிடம் காணப்பட்டன. பிறந்தவுடன் இக் குழந்தை இடி இடி யென்று உலகைப் பார்த்துச் சிரித்தது. இதன் மூளை விரைவாகத் துடித்தது. நற்குணங்க ளெல்லாம் தேவ வுருக்கொண்டு அக் குழந்தையைப் பணிந்தன. பெரியோர்க ளெல்லாம் இதை வணங்கினர். இக் குழந்தையைத்தான் ஜாரதுஷ்டிரன் என்று அழைத்தனர். தனக்குப் பின்னால் உலகைக் காக்க உதிக்கப் போகும் புத்தர், ஏசுநாதர், முகம்மதுநபி முதலிய தெய்வ தூதரின் சக்தியையும், தேசையும் ஒன்றாய்ச் சேர்த்து முன்னேயே காட்டுவது போலவே ஜாரதுஷ்டிரன் விளங்கினான். அன்பும், இரக்கமும், பொறுமை முதலிய நற்குணங்கள், உடல் வனப்புடனேயே மனத்திற்கும் வனப்பளித்து வளர்ந்தன. அளவற்ற இரக்கத்துடன் ஆரியர் வாழ்வினை ஆதரித்து அறத்தை காட்ட வந்த ஜாரதுஷ்டிரன், ஐந்து வயதையடைந்தான். உலகின் துயர்களை நன்கு அறிந்தான். தன்னைப் படிப்பித்த புர்ஜின்குருஷ் என்ற பெரியோனிடம் அடிக்கடி உலகின் இருள்நிலையைப் பற்றிப் பேசி அதைத் தீர்க்கும் வழிகளை வினவுவான். பேயை வணங்குவோரையும், மாந்திரிகரையும் துணிந்து வாதம் செய்து திடுக்கிடச் செய்வான். தன்னைச்சுற்றி உலகமாயை தலைவிரித்து ஆடுவதைக் கண்டு,உலகை வெறுக்கலானான். சீனத்துமஹானாகிய லாவோத்ஸேபோல மௌனமாகத் தன் புலன்களை அடக்கி, முதலில் தன்னை வெல்ல முயற்சி செய்தான். தன்னைச் சுற்றிக் குழுமிய மாயைப் பிசாசுகளுக்குத் தான் அடிமையாகாது மனதை அஹுரானின் மலரடியில் அன்பினால் இறுகக் கட்டினான். தொழிலில் தேர்ந்த வியாபாரி வெளியில் காட்டாது பொருளைக் குவிப்பதுபோல் தான் தெரிந்துவரும் அறிவை ஜாரதுஷ்டிரன் மனதின் இரகசிய அறைக்குள் சேர்த்து வைத்துக்கொண்டே வந்தான். பதினைந்து வயதிலேயே உலகப் பற்றை நீத்தான். மத ஆராய்ச்சியிலேயே தன் காலத்தைக் கழித்தான். தன் ஆரிய நாமத்தை ஆராய்ந்து அறிந்தான். அதைத் தான் பயில மனமுவந்தான். ஐரோப்பாவிற்கும், இந்தியாவிற்கும் பிரிந்து செல்லு முன்னர் தன் ஆரிய சகோதரர் மத்திய ஆசியாவில் ஒரே கடவுளைத் தொழுது, ஒரே ஒழுக்கம் பூண்டு இனிது வாழ்ந்ததை எண்ணினான். அவர்கள் தொழுத அசுர வருணனையே (அஹுரமஜ்தனை) இடைவிடாது எண்ணினான். வைதிக ஆரியரான மாகிகளைப் போலவே பூணூலையும், மாஞ்சியையும் (குஸ்தி) பூண்டான்.

௩

நமது ஜாரதுஷ்டிரனுக்கு இப்போது வயது இருபது. உலகிலுள்ள துன்பங்களை எண்ணி புத்தரைப்போன்று வருந்துவான். தன் நாடு இருள், அடிமை, என்னும் அரக்கர் கையில் அகப்பட்டுவருந்துவதை எண்ணி நொந்தான். அதை விடுவிக்க உறுதிபூண்டான்; பிறவெல்லாம் வெறுத்தான். அவன் மனம் ஒரு மருந்தைத் தேடிப் பரபரத்தது. வீட்டில் இருக்க முடியவில்லை. வீட்டைத் துறந்தான். காடு மலைகளில் சுற்றினான். பசியும், பிணியும், வெயிலும், மழையும் இவன் பொறுமையை வெல்ல முடியவில்லை. அரவமற்ற நடுக்காட்டில் வசித்துத் தன் தேகத்தையும் புலன்களையும் தன் வசப்படுத்தினான். தியானத்திலும் ஆத்யாத்ம முயற்சிகளிலும் தன் வாழ்க்கையைச் செலுத்தினான். இப்படிப் பத்து ஆண்டுகள் சென்றன. ஞானக்கண் திறந்தது. அஹுரான் தன் அன்பினை ஆற்ற உருச் வைத்தான். சபாலன் மலை மீது தவக்குகையில் ஜாரதுஷ்டிரனின் பரிசுத்தமான கண்களுக்குத் தெய்வீக காட்சிகள் புலப்பட்டன. ஒரு நாள் தாயிதி என்னும் நதிக்கரையில்

ஜாரதுஷ்டிரன் அஹுரானிடம் தன் எண்ணத்தைச் சேர்த்து இருந்தான். அப்போது நல்லெண்ணத்திற்கு அதிதேவதையான வஹுமானன் முன்னால் தோன்றி அவனுக்குத் தேவசரீரத்தைத் தந்து சமாதியில் ஆழ்த்தினான். ஜாரதுஷ்டிரன் தன் சமாதி நிலையில் தன்னைத் தேவலோகத்தில் அஹுரான் சமீபத்தில் கண்டான். அஹுரான் தன் தூதனை அன்புடன் ஏற்று அரியணைக் கருகே இருத்தி ஆரிய தர்மத்தை உபதேசித்தான். ஜாரதுஷ்டிரனும் தன் சந்தேகங்களை யெல்லாம் கடவுளிடமே கேட்டுத் தெளிந்தான். மனச்சாட்சியின் கட்டளைப்படி நடப்பதும், மன மொழி மெய்களில் தூய்மையடைவதும், தூயவாழ்வும், தன்னையடைந்து நித்தியானந்தம் பெறும் வழியென்று ஆண்டவன் மொழிந்தான். மனிதனுடைய மனதில் நல்ல எண்ணங்களும் தீய எண்ணங்களும் உதிக்கின்றன. நல்லவை ஈசனால் தரப்பட்டவை. தீயவை அஹ்ரிமானனால் தரப்பட்டவை. இவன் தூதனை ஆங்கிரமானியனை வரவொட்டாது மன உறுதியால் ஆண்டவனை எண்ணினால் மனிதன் சாந்தமாயிருப்பான் என்று சொல்லி, அவஸ்த ஜெந்த வேதத்தை ஜாரதுஷ்டிரனுக்கு அஹுரான் உபதேசித்தான். தூய சொல், தூய செய்கை, தூய நினைப்பு என்னும் சுவர்க்கத்தைக் காட்டினான். வஹுமானன், ஆரமதி, ஹுராவதி, ஆரியமானன், தேனு முதலியவர்கள் சூழ அஹுரமஜ்தன் கொலு வீற்றிருக்கும் தெய்வலோகக் காட்சிகளைக்கண்டு களித்து ஜாரதுஷ்டிரன் தியானங் கலைந்தான், உண்மை தெளிந்து எழுந்தான்.

௪

தான் கண்ட உண்மையைச் சென்ற விடமெல்லாம் சொல்லிக்கொண்டே ஜாரதுஷ்டிரன் சுற்றினான். உலகின் காது முற்றிலும் செவிடாகவே யிருந்தது. தன் நலத்திற்குச் சொல்லும் மொழிகளை உலகம் மதித்து ஏற்றுக்கொள்ளவில்லை. பேயைக் கும்பிடுவோர் இவன் பித்தனென்றனர். பொல்லார் இம் மஹான் மீது கட்சி கட்டினர். அன்புருவான கிறிஸ்து நாதரைச் சிலுவையிலிட்டுத் துன்புறுத்திய உலகன்றோ இது! நாய்வால் போன்ற இவ்வுலகை நோக்க முயன்ற மஹான்களை அப்ப! இது என்ன பாடு படுத்தியிருக்கிறது! அதே மாதிரிதான் ஜாரதுஷ்டிரனையும் ஆங்கிரமானியனால் தூண்டப்பட்ட உலகு செய்தது.

ஜாரதுஷ்டிரன் பிறந்தது முதல் பிசாசைத் தொழும் பேய்க்குணத்தார் அந்த நற்குணக்குன்றைக் கொல்லுவதற்கு சதியாலோசனை செய்தனர். அவர் பேரைக் கேட்கும்பொழுதே பல்லை நெரு நெருத்தனர். பிசாசைத் தொழுவோரில் முதன்மையான தூரானிய மன்னன் இந்த் தெய்வ மைந்தனைக் கொல்லக் கொலையாளிகளையும், பேய்களையும், சூனியகாரரையும் ஏவினான். அஹுரானின் அருளால் ஐயன் அபாயமின்றித் தப்பினான்.

தன் மதக் கொள்கைகளைச் செவிட்டுக் காதுகளில் உரைத்து உரைத்து அலுத்துப்போய் ஜாரதுஷ்டிரன் ஒரு பிரபுவினிடம் சென்று தன் மதத்தை உபதேசித்து அதைப் பரப்ப ஆட்களின் உதவியும், பொருளுதவியும் வேண்டுமென்று கேட்டான். மமதையால் மூடுண்ட மனத்தனான அந்தப் பணக்காரன் கண்கள் சிவக்கக் கோபித்து, நன்றாகத் திட்டி, கடவுளையும் தூதனையும் கண்டபடி தூஷித்து, கடுமையாக நடத்தி விரட்டிவிட்டான். மஹான் மனம் நொந்தான். அஹுரான் அவனைச் சமாதானப்படுத்தினான். ஜாரதுஷ்டிரன் தன்னை இன்னும் பக்குவப்படுத்திக்கொள்ள ௪௦-வயது வரையில் இந்தியா, சீனம் முதலியவிடங்களில் பிரயாணம் செய்து தன் அறிவைப் பெருக்கிக்கொண்டான். தான் அறிந்தவற்றையும் பிறருக்கு உரைத்தான். ஆனால் இன்னும் உலகு விழித்துத் தன் ரக்ஷகனை அறியவில்லை. ஜாரதுஷ்டிரன் மனந்தளர்ந்தான்.

௫

கடவுளுக்குப் பேரன்பு பிறந்தது. தன் தூதனுக்கு இன்னும் தன் அற்புதங்களைக் காட்ட மனமுவந்தார். பஞ்ச பூதங்களுக்கும் மிருகங்களுக்கும் மரங்களுக்கும் அதி தேவதைகள் ஜாரதுஷ்டிரனுக்குக் காட்சியளித்து, பல உண்மைகளைப் புகன்றனர். நல்லெண்ணத்திற்கு அதி தேவதையான வஹுமானன் வந்து ஜீவகாருண்யத்தையும்,பிராணிகளிடம் அன்பையும் உபதேசித்தான். நெருப்பிற்கும் நீதிக்கும் தேவதையான ஆசவாஹிஷ்

டன் நெருப்பையும் சூரியனையும் வணங்கும்படி சொல்லிப் போனான். ஜபம் செய்யும்போது எதாயினும் ஒளியுள்ள ஒரு பொருளைப் பார்த்துச் செய்யவேண்டுமென்று ஜாரதுஷ்டிர வேதம் கூறுகிறது. நெருப்பு பரிசுத்தமானதென்று கருதப்படுவதனால் அது தொழத் தக்கது. ராஜரீகத்திற்கும் செல்வத்திற்கும் தேவதையான க்ஷத்ரவைரியன் பல உண்மைகளை அவனுக் கறிவித்தான். பக்திக்கும் அடக்கத்திற்கும் தேவதையான ஸ்பெந்தாஅர்மைதியும்,நீர் தேகபலம் முதலியவற்றின்தேவதையானஹார்வதத்தும்அவனுக்குப் பற்பல குணங்களைப் புகட்டினார்கள். அமேரதத்து என்ற தேவன் ஆத்யாத்ம ஞானத்தை உபதேசித்தான். இவ்விதமாக ஜாரதுஷ்டிரன் கடவுளையும், தேவர்களையும், மோக்ஷத்தையும் நேராகக் கண்டு மனந்தெளிந்து பிரம்மானந்த மடைந்தான். மறுபடி தன் கொள்கைகளைச் சொல்ல எழுந்தான்.

ஆனால் இவையெல்லாம்சாத்தானாகிய அஹரிமானனுக்குப் பொறுக்குமா? தன் தூதரான ஆங்கிரமானியன், பூதி முதலியவர்களை ஏவி ஜாரதுஷ்டிரனோடு வாது செய்து அடக்கிக் கொல்ல முயன்றான். நமது மஹாத்மா "அஹுநராவைரியா" (கடவுளின் மனமே நீதி முறை) என்று ஓதிக்கொண்டு சாத்தான் தலை குனியும்படி அவன் கேள்விகளுக்கு விடையளித்தான்!

ஜாரதுஷ்டிரன்—ஏ உலகை யழிக்கும் பேய்களே! உங்கள் குலங்கள் அழியும்! ஆண்டவனுடைய ஆட்சியே நிலவும்! அஹுரன் படைத்த இவ்வுலகிலிருந்து கொண்டு அதற்கே தீங்கு நினைக்கா நீர்கள்!

அஹரிமானன்:—ஜாரதுஷ்டிரா! நீ எதனால் எங்களை வெல்லுவாய்?

ஜார:—கடவுள் எனக்கு உபதேசித்த மொழிகளாலும் ஆரிய, தர்மத்தினாலும் தெய்வ பக்தியினாலும் வெல்வேன். உலகங்களுக்கெல்லாம் அரசனான அஹுரன் எழைகளுக்கு உதவுகின்றான். அவன் சக்தி எங்கும் பாவி யிருக்கிறது. அவனால் ஏவப்பட்டு உங்கள் நாசத்தினின்று உலகைவிடுவிக்க வந்தேன்.

அஹரி:—ஹே!ஜாரதுஷ்டிரா! உனக்கு வேண்டிய செல்வத்தைத் தருகிறேன்! உலகின் ஆட்சியைத் தருகிறேன். எந்த அரசனுக்கும் அரிய ராஜரீகத்தைத் தருகிறேன். என்னைநேசி! அந்த அஹுரனை மற.

ஜார:—உலகைக் கெடுக்கும் பிசாசுகளே! என் மூச்சை நீங்கள் பிரிக்க முடிந்தாலும் என்னை ஆண்டவனிடமிருந்து பிரிக்க முடியாது. உங்கள் வலையில் நான் சிக்க மாட்டேன், இந்த மண்ணுக்காக விண்ணை மாற்ற மாட்டேன்! செல்லுங்கள்.

இதைக் கேட்டதும், முகம்வாடி அஹரிமானன் ஓடிவிட்டான். அஹரிமானனை இவ்விதம் வென்ற மஹாத்மாவானவன் பின்பும் தன் மதத்தைக் கூவிக்கொண்டு உலகோர் மனதைத் தட்டினான். இன்னும் மக்கள் மனம் திறக்கப்படவில்லை. கடைசியில் மேத்யோமன் என்ற நன்றியுள்ள ஒரே சீடன் அவனை வந்து சேர்ந்தான்.

௬

அப்போது ஈரானிய அரசன் விஷ்தாசுவன் என்பான் தன் பண்டிதர்களின் வலையில் சிக்குண்டிருந்தான். பண்டிதர்கள் புத்தகங்களை விழுங்கி யிருந்தார்களேயன்றி உண்மையை அனுபவித்து அறிந்தவரில்லர். இப் புத்தகப் புலவர் பொறாமையும், வாதமும், மமதையும் முகமனும் மிகுந்து புலனை வென்ற ஒரு தெய்வப் புலவனை அறியாத குருடரானார். ஜாரதுஷ்டிரனைக் குறித்து அரசனிடம் கண்டபடி உருவேற்றினார்கள். அந்த மஹானை ஜாலக்காரனென்றும் சூனியகாரனென்றும் சொல்லி நம்பவைத்தார்கள். அரசன் அவனை ஒரு பயங்கரமான சிறையி லடைத்தான். அவன் சிந்தையைக் கடவுளிடம் வைத்துச் சிறைச்சாலையைத் தவச்சாலையாக எண்ணிக்கொண்டிருந்தான். அந்நாளில் அரசனுடைய அருமையான குதிரை வாதநோயால் கால் முடங்கி வருந்தியது. ஜாரதுஷ்டிரன் ஆண்டவன் பெயரைச் சொல்லிக் குதிரையின் நோயைத் தீர்த்தான். அரசன் இதைக் கண்டு வியந்தான். ஜாரதுஷ்டிரனை நம்பி அடி பணிந்தான். தன் மகன் இஸ்பெந்தியனை மஜ்தாயி மத ஊழியத்திற் களித்தான். தனது பண்டிதரைத் தண்டித்தான். ஜாரதுஷ்டிரனும் அரசனுக்குத் தெய்வலோகக் காட்சியைக் காட்டினான். ஆயிரம் மின்

னல் போன்று தேவதூதர் மூவர் அரசனுக்குக் காட்சி கொடுத்தனர். அரசன் தன் குடும்பத்தோடு ஜாரதுஷ்டிர மதச் சேவையில் ஈடு பட்டான். அரசனின் முதன் மந்திரியான பிரசோஸ்திரன் தன் மகள் ஓவியை ஜாரதுஷ்டிரனுக்கு மூன்றாவது தாரமாகக்கொடுத்தான். முன்பே ஜாரதுஷ்டிரனுக்கு இரண்டு தாரங்களுண்டு. முதல் மனைவிக்கு ஒரு மைந்தனும் மூன்று பெண்களும் இரண்டாவது மனைவிக்கு இரண்டு பிள்ளைகளும் இருந்தனர். இக்குழந்தைகளை ராஜ குடும்பத்திலேயே விவாஹம் செய்து கொடுத்தான்.

இப்போது தான் இதுவரையில் பட்ட பாடுகளின் பலன் கிடைத்தது. அரசனுடன் குடிகளும் ஜாரதுஷ்டிர மதத்தைச் சேர்ந்தனர்.அரசன் சகோதரனான ஜாரிவைரி சிறந்த மத ஊழியம்செய்தான். பாரசீகம் முழுதும் இம்மதம் பரவிற்று. பிற நாடுகளினின்றும் பல அறிஞர்கள் வந்து சேர்ந்தனர். யூதர் பலர் பணிந்தனர். தீயர் அடங்கினர்.ஜாரதுஷ்டிரன் தன் மதத்தை தைரியமாக உபதேசித்தான். குருடு, ஊமை, செவிடு, முதலியவற்றைத் தீர்த்தான். பிணியாளரைப் பரிவுடன் நோய்தீர்த்தான். அக்கினி ஆலயங்கள் பல கட்டுவித்தான். தானே அவ்வாலயங்களுக்குப் பூஜகனாக அமர்ந்தான். இவ்வளவு செய்தினும் இன்னும் தன் மதத்திற்கு சத்துருக்களிருப்பதை யறிந்து அவர்களை அடக்க மிருக பலம் வேண்டும் என்பதை யுணர்ந்தான். முகம்மது நபியைப்போலவே வாட்படையின் வலுவால் மதத்தை நிலைநிறுத்த முயன்றான். தன்சமூகத்தை அந்தணர், யுத்தவீரர், தொழிலாளிகளென மூன்று பிரிவுகளாகப் பிரித்தான். யுத்த வீரரைக் கவனமாகப் பழக்கினான். தர்மத்திற்காக யுத்தம் புரிய அரசனும் ஜாரிவைரியும் இன்னும் ஆயிரக்கணக்கான வீரரும் முன் வந்தனர்.

௭

ஆங்கிரமானியன், துரானிய அரசனான அரஜாரசுவனுக்குள் புகுந்து கடுங்கோபத்துடன் ஜாரதுஷ்டிரனை குருவாக ஏற்ற விஷ்தாசுவனை எதிர்த்தான். விஷ்தாசுவனும் வீரசிகாமணியான ஜாரிவைரியும், சிம்மம்போலப் போர் புரிந்தனர். இவர்களை எதிர்த்து ஓய்ந்த துரானிய மன்னன் ஒரு மந்திரவாதிக்குத் தன் மகளைத் தருவதாக வாக்களித்து ஜாரிவைரியை ஒரு விஷ அம்பினால் கொல்லுவித்தான். தான் கொன்ற மதயானைகளுக்கிடையே உறங்கும் சிம்மம்போல் வீரத்தினமான ஜாரிவைரி யுத்தகளத்தில் விழுந்து கிடந்தான். உடனே அவன் மைந்தனான பாஸ்த்வரன் யுத்தகளத்தில்பாய்ந்து அந்த மந்திரவாதியைக் கொன்று துரானிய மன்னனையும் ஒடுக்கி வெற்றிகொண்டான். பகைவர் அடங்கினர்.

சில ஆண்டுகள் சென்றன. துரானிய மன்னன் மறுபடி பெரிய படையுடன் ஜாரதுஷ்டிரனைத் தாக்கினான். அந்தத் துரானியன் ஜாரதுஷ்டிரரின் இரத்தம் நதியாக ஓடும்படி செய்தான். ஆலயங்களையும் இடித்தான். அவஸ்த ஜெந்த வேதத்தைக் கொளுத்தினான். அங்கு தொழுதுகொண் டிருக்கும் அன்பரைக் கொன்றான். அன்பர் தங்கள் இறுதி மூச்சுப்போகும் வரை அஹுரனையே ஜபித்து இறந்தார்கள். சாவுக்கு அஞ்சாது உறுதியுடன் நின்றார். எங்கும் கொலையும் சாவும், இரத்த வெள்ளமுமாயிற்று. உலகம் இருள் மூண்டது! அந்தோ! அரஜாசுவனுடைய படை ஒரு அக்னி ஆலயத்தை வளைத்துக்கொண்டது. அதற்குள், கையில் ஜபமாலையுடன் ரக்ஷகனான ஜாரதுஷ்டிரன் மதோபதேசம் செய்துகொண் டிருந்தான். கோபாவேசத்துடன் வரும்பகைவருக்கு ஆங்கிரமானியன்இந்தமஹாத்மாவைக்காட்டிக்கொடுத்தான்.துர்பாதரன்என்னும்துரானியன் மனந்துணிந்து தன் வாளால் ஜாரதுஷ்டிரனைத் தாக்கினான்.ஜாரதுஷ்டிரன் தலையில் வாள்பட்டுக் கீழே விழுந்தான்.ஆனால் விழுமுன்அவன் ஜபமாலையைப்பகைவன் மீதெறிந்தான். அதனின்று தீ கிளம்பிப் பகைவனை அழித்தது. ஜாரதுஷ்டிரனின் ஆத்மவொளி அஹுரனிடம் போய்ச் சேர்ந்தது. தான் வந்த வினையைச் செய்து தன் கூட்டைவிடுத்துத் தனது எஎ-வது வயதில் ஜாரதுஷ்டிரன் ஆண்டவனிடம் போய்ச் சேர்ந்தான்.

ஆ! இப்படிப்பட்ட மஹானுடைய சரிதை இவ்வளவு பயங்கரமாகவா முடியவேண்டும்! பெரிய மஹான்களின் வாழ்க்கை நாடகத்தைச் சோகரசத்திலேயே முடிப்பது உலகின் இயல்பு. ஸாக்ராத்தை விஷம் வைத்துக் கொன்ற உலகன்றோ இது?

ஜாராதுஷ்டிரனையும் வாளால் சிதைத்தது. இப்படிச் சிதைத்தாற்போல் ஒரு ஆத்மவீரனுடைய சக்தி முடிவடைந்து விடாது. மதத்திற்காகத் தம் உயிரைக் கொடுப்பவர்களின் இரத்தத்துளியை உண்டு அம் மதம் கொழுத்து வளரும் என்பது உண்மை. ஏ உலகே, உன் சதியாலோசனையால் சத்தியத்தை, அழிக்க முடியாது. நீ சிலுவையில் விட்ட ஏசுநாதனை இப்போது பலகோடி கிறிஸ்தவர் தொழுகின்றனர். நீ அவமதித்த ஸொக்ராத்தனை இப்போது மக்கள் மதிக்கின்றனர். உலகே, உனக்கு எப்போது புத்தி வரப் போகிறது? எப்போது மஹான்களை அவர்களுடைய ஆயுள் நாளிலேயே மதிப்புடன் நடத்தக் கற்றுக்கொள்ளப் போகிறாய்? தன் ரக்ஷகனை இழந்த ஈரானியா குருடன் கண் பெற்றிழந்தது போல் தவித்தது. ஆயினும் தனது ஆருயிர் ஆசானைக் கொன்ற பகைவனைச் சிதைக்கக் கங்கணம் கட்டிக் கொண்டது. வீராவேசத்தோடு தாக்கித் தூரானியரை முறியடித்துத் தன் மதப்பகைவரை அழித்தது. ஜாராதுஷ்டிரன் மாப்பிள்ளையான ஜமாசுவன் குருபீடம் வகித்து ரக்ஷகனின் திருவாக்குகளைச் சேகரித்து அவஸ்தா, ஜெந்தா என்னும் இரண்டு வேதபுத்தகங்களை ஆக்கினான். முதன் மந்திரி ஜாராதுஷ்டிர மதோபதேசங்களை எங்கும் பரப்பினான். ஜாராதுஷ்டிர மதம் தன் தலைவனைப் பலிவாங்கி, பிறகு பலமாய் ஊன்றிக் கொண்டது. அதுவே பாரசீகத்திற்கு ராஜமதமாயிற்று. பிற்காலத்தில் கிரேக்கர் ரோமர் முகம்மதியர் முதலியோரின் படையெடுப்பால் இம் மதம் சற்றுச் சோர்ந்தது. ஜாராதுஷ்டிரருக்கு அன்பும் சமாசமுமே தன் மதத்தின் அடிப்படையாயுள்ள பாரததேவி இடங்கொடுத்துக் காத்தாள். பாரத மாதாவின் மடியில் இருந்து முகம்மதிய, புத்த, ஜைனப் பிள்ளைகளுடன் ஜாராதுஷ்டிர மைந்தரும் மகிழ்ந்து இன்றும் விளையாடுகின்றனர்.

யோக சாதனம்

[०]

(உத்தரயோகி அரவிந்த கோஷ் எழுதியதை க அமுதன் மொழிபெயர்த்தது)

ஆராய்ந்தறிதல், ஞாபக சக்தி, கற்பனா சக்தி முதலியவைகளின் இயக்கங்களுக்கு நாம் நம்முள் எவ்வளவிற்கு இடந்தருகிறோமோ, அவ்வளவிற்கே புத்தியை நிர்மலமாக்குவதற்கும் நமது உயர்தரத் திறன்களை வளரச் செய்வதற்கும் நமக்கு எளிதாக இருக்கும். ஆனால் நாம் வேறொரு விதத்தில் நமது சிந்தனாசக்தியை வழக்கமாக இயங்கச் செய்கிறோம். அதாவது சிந்தனாசக்தியை நாம் மனமென்னும் கருவி வழியாக இயங்க நம்முள் இடந்தருகிறோம். மனம் ஒரு எதற்கும் கருவியேயாகும். கண், காது, முதலியவைகளின் மீது விழும் பிரதிமைகளை மனது பெற்று ஏற்கின்றது; பிறகு அவைகளை அது ஐரோப்பியர்களால் பேர்ஸேப்த் என்று சொல்லப்படுகிற புலப்பாடுகளாக மாற்றுகின்றது. புலப்பாடுகள் என்பதற்குப் புலன்களால் உணர்ந்தவைகள் என்பது பொருள். மேலும், விக்ஞானத்தினின்று சித்தத்தின் வழியே கீழ் நோக்கி வரும் கருத்துக்கள், பிரதிமைகள் முதலியவற்றையும் மனம் ஏற்றுக்கொள்ளுகின்றது. இவைகள் இவ்வழியே வரும்பொழுது நினைப்புகளாக மாறுகின்றன; நினைவுகள் கருதப்பட்டவைகள். உதாரணமாக, மனம் ஒரு புஸ்தகத்தின் பிரதிமையை அல்லது உருவத்தைப் பார்த்துவிட்டு "ஒரு புஸ்தகம்" என்று சொல்லும்போது, அதற்கு ஒரு புலப்பாடு எட்டியுள்ளதென்பதும், அது அப் புலப்பாட்டின் பெயரைக்குறித்து நினைத்ததென்பதும் தெளிவு; இவ்வித சிந்தனைக்கு புலப்பாட்டு நினைப்பு அல்லது புலனுணர்ச்சிக்குரிய எண்ணமெனப் பெயர். அதுவே, "புஸ்தகத்தில் பாஷை அடக்கம்" என்று சொல்லும்பொழுது, இது முன் சொல்லியதைவிட ஒதுங்கிய நினைப்பாகும்; அது அறிவினாலாகிய எண்ணமாகும்; இதை அறிநினைப்பென்று சொல்லலாம். ஒன்று புலன்களுக்கெட்டியதைச் சொல்லில் அமைக்கின்றது; மற்றொன்று கருத்திற்கெட்டியதைச் சொல்லில் அமைக்கின்றது. புலப்பாட்டு நினைப்பும் அறிநினைப்பும் ஒன்று சேரும்பொழுது நம்மிடத்துக் கிரகண சக்தி அல்லது அறியுமாற்றல் தோன்றுகின்றது. புலப்பாடு நினைப்புகளையும் அறி நினைப்புகளையும் அடுக்கினதிலிருந்து புதிய அரிய கருத்துக்களைப் பெறலாமென்றும் இவ்வாறு பெறுவதற்கே தர்க்கமெனப் பெயரென்றும் ஐரோப்பியர்கள் கூறுகிறார்கள். புலப்பாட்டு நினைப்புகளை ஒன்று கூட்டி எண்ணங்களாக மாற்றிய காலத்து உண்டாவதே அறிநினைப்புகளென்றும் பலர் நம்புகிறார்கள். இவ்வாறு பார்க்கும்பொழுது, கேவலம் புலனுணர்ச்சிகளைச் சொல்லில் அமைப்பதினாலேயே எண்ணங்கள் தோன்றிவிடுகிறதென நினைக்க வேண்டியதாகிறது. எனக்குள்ளாக நான் கந்தர்வர்களை உருவகப் படுத்திக்கொள்ளும் பொழுது என்ன செய்கிறேனென்று சற்றுக் கவனிப்போம். நான் கேவலம் சாதாரண மனித உருவங்களுக்குப் பறவைகளின் இறக்கைகளைச் சேர்த்துக்கொண்டு அவைகளைக் கந்தருவர்களின் உருவங்களென எண்ணுகிறேன். புண்ணியம், தைரியம் முதலியவைகளைப்பற்றிப் பேசும்பொழுதுகூட நான் என்ன செய்ய நேரிடுகிறதென்று சற்று ஆராய்வோம். புண்ணியம், தைரியம் முதலியவைகள் கேவலம் பல வேறுவகைப்பட்ட உணர்ச்சி, செயல் முதலியவைகளின் வகுப்புப் பெயர்களாகவே என தகத்தில் தோன்றி எழுகின்றன. மனத்தினின்று யோசிக்கும் வரை மேற்சொல்லிய கருத்துகளெல்லாம் உண்மையாகக் காணப்படும். மனது உணர்ச்சிக் கருவி; அது நினைக்குங் கருவியாகமாட்டாது. எண்ணங்கள் புத்தியினின்று சித்தத்திற்கு செல்லுங் கருவாயில் மனதினால் பிடிபடுகின்றன. அவைகள் மனதின் கையினால் அகப்பட்ட உடனே உணர்ச்சிப் பொருளாக மாறிவிடுகின்றன.

மனம் உணர்ச்சிக் கண்ணால் எண்ணங்களை மதித்துப் பார்க்கின்றது. விலங்குகள் மனத்தால் யோசனை செய்கின்றன. வடிவம், ஓசை, மோப்பம், தீண்டல், சுவை முதலியவைகள் கலவாத எதைப்பற்றியும் விலங்குகளால் நினைக்க முடியாது. விலங்குகள் உணர்ச்சிகளால் கட்டுப்பட்டவை. இது காரணம் பற்றியே மிருகங்களின் புத்தி உறங்கி வாழ்கிறது; இயங்கும் பொழுதுகூட, அவைகளின் புத்தி திரைக்குப் பின்னின்றே இயங்குகின்றது.

ஆனால் மனிதனால் புலன்களுக்கெட்டாதவைகளையும் அறிய முடியும்—புத்தி க்ராஹ்யம் அதீந்த்ரியம். யோக சக்தி வளர வளர, நீ இந்த உண்மையின் எண்மானத்தை நாள்தோறும் பெறுவாய். தான் இதற்கு முன் பார்த்து அல்லது அறிந்திராத ஒரு விஷயத்தின் உண்மையை மனிதன் தன் புத்தியினால் அறியலாம் என்பதொன்றே பௌதிக வாதத்தை வேரறுக்கப் போதுமானது.

பௌதிக அல்லது லோகாயத சித்தாந்தம் மனதைச் சேர்ந்தது; மனதிலிருந்து நோக்கும் வரை அது உண்மையே. மனம் இந்திரியங்களை ஒவ்வி நடக்கின்றது. அது தன்னை வந்தடையும் உணர்ச்சிகளினின்று ஓயாது புலப்பாட்டு நினைப்புகளையும் அறிநினைப்புகளையும் உண்டாக்கிக் கொண்டேயிருக்கின்றது. இக் கருத்துக்களைச் சில சமயங்களில் வெளியினின்றும், சில சமயங்

களில் சித்தத்தின் சாந்தமான நிலையினின்றும், சில சமயங்களில் புத்தியினின்றும் மனம் பெறுகின்றது. ஆனால் மேற்சொல்லிய அனைத்தையும் மனமானது புத்தியின் மேல் சுமத்துகின்றது. மனது தன்னுடைய இந்திரியங்களால் ஒத்துக்கொள்ள முடியாத ஒவ்வொன்றையும் சோதனை செய்து பார்க்கின்றது. "அது நான் பார்த்த விஷயம், இது நான் கேட்ட விஷயம், ஆகவே உண்மையாக இருக்கவேண்டும்," என்பதே மனம் செய்யும் விசாரம். இக்காரணம் பற்றியே நன்று வளர்ந்து தேறாத புத்தியை யுடையவர்கள் தாங்கள் பார்த்ததை அல்லது படித்ததை வெகு முக்கியமானதாகக் கருதி நம்புகிறார்கள். "நான் அதைப் புஸ்தகத்தில் பார்த்திருக்கிறேன்," என்று சொல்லிப் படித்தவன் தர்க்கத்தை முடித்து விட்டதாக நினைக்கிறான்.

மனதை என்ன செய்கிறது? அதைச் சாந்தம் செய்ய வேண்டுமென்று யோகி சொல்லுகிறான். அது சலித்துக்கொண்டிருக்கும் வரை, ஞானத்தைப் பெறுவது முடியாத காரியம். அப்பொழுது அரைகுறை ஞானமே உண்டாகும். சாந்தமான மனது ஒரு யோகிக்கு அவசியமென்பது வாஸ்தவமே. ஆனால் இந்திரியங்களை என்ன செய்வது? மனதில் ஏற்படும் நினைப்புக்களை உன்னால் விலக்க முடியலாம்; ஆனால் புலப்பாடுகளை வைத்துக்கொண்டு என்ன செய்வது? ஸமாதியில் இருக்கும் நேரத்தைத் தவிர மற்ற வேளைகளில் எப்படி பார்க்காமலும் கேட்காமலும் உன்னால் இருக்க முடியும்? இது காரணம் பற்றியே வேதாந்திகள் ஸமாதியை அவ்வளவு முக்கியமாகக் கருதுகிறார்கள். ஸமாதி நிலை ஒன்றிலேதான் மனிதன் இந்திரிய வாயிலாக வரும் புலப்பாடுகளின் முற்றுகையினின்றும் விடுதலை பெறுகிறான்.

ஆனால் ஸமாதி நிலையில் இருக்கும் காலத்தில் மட்டிலுமே உன்னால் ஞானத்தை அடைய முடியுமாயின் நீ ஒரு துறவியாகவோ அல்லது ஏகாங்கியாகவோ ஆவது அவசியமாகின்றது; அதாவது வாழ்க்கையை வெறுக்கவோ அல்லது துறக்கவோ வேண்டியதாகின்றது. இதனால் பகவானுடைய பிளவற்ற ஜகத்தின் ஐக்கியத்தை இயற்கைக்கு விரோதமாக இரண்டாகத் துண்டிக்க நேரிடுகிறது. தாந்திரிக மார்க்கத்தார்களுக்கு இவ்வாறு செய்தல் அவசிய மென்பதும் ஸமாதி ஒரு பெருங் கருவி யென்பதும் தெரியும்; ஆனால் ஸமாதி ஒன்றே கருவியென்று அவர்கள் நினைப்பது கிடையாது. தான் உறங்கும் நேரம், பேசும் நேரம், நடக்கும் நேரம், உண்ணும் நேரம் முதலிய காலங்களிலும் மற்றும்தான் எது செய்யும் நேரத்திலும் ஞானத்தைப் பெறுமாறு தாந்திரிக ஸாதனை செய்பவன் தன்னுடைய அந்தக்கரணத்தைச் சீர்ப் படுத்திக் கொள்கிறான். எப்படி? மனதின் நினைப்பியக்கத்தைச் சாந்தப்படுத்துவது மட்டிலுமல்லாமல், அதனுடைய புலப்பாட்டியக்கத்தையும் புத்தியின் இருப்பிடத்துக்கு ஏற்றி விடுகிறான்.

அதாவது, கேட்பது, பார்ப்பது முதலியவைகளை மனதின் புலன்களால் செய்யாது புத்தியிலுள்ள இந்திரியத்தால் செய்யத் தொடங்குகிறான். இப்படிச் செய்வதனால் உன்னிடத்து ஒரு பெருத்த வித்தியாசம் ஏற்படுவதை நீ காண்பாய். நீ முன்னைவிட நன்றாகவும், திட்பமாகவும், சீராகவும், நேராகவும், சரியாகவும், பார்ப்பது மட்டிலுமல்லாது, நிற பேதங்கள், உருவ பேதங்கள், சப்த பேதங்கள் முதலியவைகளை இதற்கு முன்னிருந்ததைவிடப் பெரிதும் பக்குவமடைந்த ரீதியில் நீ இப்பொழுது சுவைப்பாய். இதல்லாது ஒரு பொருளை உணர்ந்த நேரத்திலேயே, நீ அதனுடைய குணத்தையும், உள் இரகசியத்தையும், இயலையும் அறிய மாட்டுவாய். யோகத்தில் ப்ராகாம்ய சக்தி என்று சொல்லப்படுவதும் இதுவே; அதாவது இந்திரியங்களின் பரிபூரண

வ்ருத்தி பெற்ற இயக்கம்—பூரண வ்ருத்தியுடன் இயங்கக் கூடிய சக்தி.

ஆகையினால் நீ யோகத்தில் ஸித்தியை அடைந்ததும் உன்னை மனது தொந்தரை செய்யாது. அது கீழ்த்தரவிதத்தில் பார்ப்பதை நிறுத்திவிடும். புத்தியினின்று சித்தத்திற்குப் போவதற்கான வழியாக அது மாறிவிடும். இதைப் பல வழிகளில் செய்து முடிக்கலாம்; ஆனால் மனிதனுடைய நினைப்பியக்கத்தைச் சாந்தஞ் செய்வது கூடுமாயினும் அதனுடைய கீழ்த்தர இயக்கமாகிய புலப் பார்வைகளைச் சீக்கிரத்தில் விலகச் செய்வது அரிது. தவவுறுதியினால் ஒரே சமயத்தில் ஞானத்தை எழுப்பவும், மனதைச் சாந்தப்படுத்தவும் செய்ய முடியுமானால் உத்தமமாகும். இப்படிச் செய்வதனால் இரண்டு நன்மைகள் ஏற்படும். சாதாரண மார்க்கத்தில் செய்வதுபோல் நீ மனதைக் காலி செய்ய வேண்டியிருக்காது. இது மிக்க கஷ்டமான தவம்: ஆனால் நிரம்ப வன்மையை அளிக்கக் கூடியது. நான் சொல்லும் வழி சுலபமானது; விசார புத்தியை மேல்தர புத்தியினாலும், மனதின் அறி நினைப்பையும் புலப்பாட்டு நினைப்பையும் ப்ராகாம்ய இயக்கத்தினாலும் மாற்றிவிட வேண்டியதைத் தவிர, நீ வேறொன்றும் செய்யவேண்டியதில்லை; இதைச் செய்வது முதற் சொன்னதைவிட—அதாவது மனதைக் காலி செய்வதைவிட—மிக்க சுலபம், அவ்வளவு கஷ்டமாக இராது. நீ ஸுஷுப்தியில் இல்லாதவரை, உன்னால் புலன்களை உபயோகிக்காமல் இருக்க முடியாது—நினைப்பியக்கத்தை மட்டிலுமே உன்னால் நிறுத்தக் கூடுமாயிருக்கும். ஆகவே உன்னால் மனதைக் காலி செய்ய முடியாது. முதன் முதலாக ஞானத்தை எழுப்பாது, நீ எவ்வளவு இந்த ஓய்வற்ற இந்திரிய சலனத்தின் கட்டுகளினின்று விடுபடப் போகிறாய்? சாதாரண புலப்பாடுகளை ஆடவிடாது நிறுத்துவதற்கு முன்னதாக நாம் பிராகாம்ய சக்தியைப் பெற்றாக வேண்டும்.

முதலில் தபஸ் சக்தியை வளரச் செய்தல்; பிறகு தபஸ் சக்தியினால் ஞானத்தை எழுப்பல்; தபஸ் சக்தியினால் மனதையும் கீழ்த்தர புத்தியையும் சாந்தியைப் பெறுமாறு செய்தல்; மேற்சொன்ன இரண்டிலும் ஞானத்தை நிலைக்க வைத்தல். இதுவே தாந்திரிக மார்க்க ஸாதனையின் மூன்றாவது படி.

சங்கீதம்

நாதப் பிரம்மமும் உபாசனையும்

(ஸ்ரீமான் ரா. முத்தையர் எழுதுவது)

நாதம் என்பது சிருஷ்டிகாலத்தில் தெளிவான இயக்கத்தை யடைந்த பிரம்மத்தின் பெயர். உபாசனையாவது எக்காலத்திலும், எந்த அவஸ்தையிலும், சரீரத்தினாலும் மனதினாலும் வாக்கினாலும் திட்டமாகப் பக்கத்திலேயே ஸேவை செய்து, புத்தியினால் சமீபத்திலே போய்த் தேவதாரூபமாக இருக்கச் செய்யும் அவஸ்தையே யாகும். இவ்விரண்டு விஷயங்களையும் குறித்துச் சிறிது சுருக்கமாக எழுதுவோம்.

ஆதியில் பிரளயத்தில் உலகம் நீரினுள் அடங்க, நீர் தீயி லொடுங்க, அக்னி வாயுவில் அடங்க, வாயு ஆகாசத்திலொடுங்க, ஆகாசமானது அவ்யக்தமான குண்டலி சக்தியில் சேர, அக் குண்டலி சக்தி பண்பில்லாத பிரம்மத்தில் ஒடுங்க, சில காலம் கழித்து ஊழ் வினையினால் பிரம்மத்திலிருந்து பிரம்மத்தினது எண்ணத்தினாலும் இச்சையினாலும் பார்வையினாலும் அரூபமாகிய மாயையானது நாதரூபமாகத் தோன்றியது. ஆதலால் நாதமே உலக உற்பத்திக்குக் காரணமாக இருக்கிறது என்று ஆன்றோர் கூறியிருக்கிறார்கள். இந்த நாதபிந்துவானது ஸ்தூல, ஸூக்ஷ்ம, பரா என்ற மூன்று பேதங்களை யடைகிறது.

நமது முன்னோர் இவ்விதம் வாசாமகோசரமான பிரம்மாண்டத்தைப் பரிசீலனை செய்வதை விட்டு "அண்டத்திற்கொத்தது பிண்டத்திற்கும்" என்றபடி பிண்டமாகிய நமது உடலையே விசாரணை செய்திருக்கிறார்கள். மேற் சொன்னபடி பிந்து இன்றி உலகம் இல்லாதது போல, பஞ்ச பூதங்களின் காரணமாகிய உடலில் பிரம்மம் உறையும் இடமாகிய 'பிரம்மரந்திர' யில் (பிரமத்தின் முடிச்சில்) நின்று எழுந்து எவரையும் களிப்படையச் செய்யும் நாதமின்றி ஜீவனும் இல்லையாம். இத்தியாதி காரணங்களாலே "ஜமித்யே காக்ஷரம் ப்ரஹ்ம" என்கிறபடி நாதமே பிரம்மம் என்று [illegible]. நாத பிரம்மத்தின் லக்ஷணங்களைக் குறித்துச் ஸார்க்க ஸம்ஹிதை விசாலாக்ஷிக் காண்டம் ௪-வது அத்தியாயத்திலும் பாணினீய மகாபாஷ்யத்திலும் விரிவாகக் கூறும்— அவையவற்றிலும் ஆங்காங்கு சிறிது குறித்துப் போகிறார்கள்.

மரத்தினது ஆகிருதி வித்தில் அடங்கியிருத்தல் போல உலகத்தினுடைய பீஜமான நாதமானது அக்ஷர ரூபமாகவும், "ஓங்கார ப்ரபவா: ஸ்வரா:" என்கிறபடி ஸ்வர ரூபமாகவும் விளங்குகிறது. ஆதலால் நாதவித்தையாகிற சங்கீதத்தை அறிய வேண்டுமெனின் முதலில் நாதத்தை யறியவேண்டும். என்னையெனின், "ச்ருதி மாதா, லய: பிதா" என்கிறபடி சங்கீதத்திற்கு ச்ருதியும் லயமும் தாயாகவும் தகப்பனாகவும் இருக்கின்றன. லயத்திற்கு ஆதாரமாயிருக்கிற ச்ருதியாகிற தாயை யறிந்த பின்னரே தந்தையாகிற லயமறியப்படுமாதலால் நாதத்தை முதலில் அறியவேண்டும். நாதத்தை யறிந்தாலன்றி ச்ருதியை அறிய முடியாது. அன்றியும்,

ந நாதேன வினா கீதம்—ந நாதேன வினா ஸ்வரம்
ந நாதேன வினா ராகம்—தஸ்மாத் நாதாத்மகம் ஜகத்,

என்கிறபடி கீதம், ஸ்வரம், ராகம் ஆகிய இவைகள் நாதமின்றி இயலாவாம். ஆதலால் உடலுக்கு உயிர் ஆதாரமானது போல சங்கீதத்திற்கு நாதம் இன்றி யமையாததாம்.

இந்தச் சப்த ரூபமான நாதபிரம்மத்திற்கு வியாகரண நூல்கள் முகமாகவும், மீமாம்ஸா சாஸ்திரங்கள் கைகளாகவும், சோதிட நூற்கள் கண்களாகவும்; கந்தர்வ சாஸ்திரம்(சங்கீதம்) நாக்காகவும், வைசேடிக சாஸ்திரம் மனதாகவும், சாங்கிய நூல்கள் புத்தியாகவும், தர்க்க நூல்கள் அகங்காரமாகவும், வேதாந்தசாஸ்திரம் சித்தமாகவும் இருக்கிறதென்றும், வேதரூபமான உடலுக்குச் சந்தஸ் கால்களாகவும், கல்பம் கைகளாகவும், ஜோதிடம கண்களாகவும், நிருக்தம் காதுகளாகவும், சிக்ஷை மூக்காகவும், வியாகரணம் முகமாகவும் இருக்கின்றனவென்றும் இவைகளை இலக்கணங்களோடு தெள்ளறத் தெரிகிறவன் பிரம்ம லோகத்தில் விளங்குகிறான் என்றும் ஆன்றோர் நூல்களில் சொல்கின்றனர்.

இங்ஙனமாகிய பல கலைகளிலும் வைத்து செவிக்கு இன்பம் பயக்கும் ஓசையோடு

மனத்திற்குக் களிப்பைக் கொடுக்கும். பொருளோடும், கேட்போரும் இம்மை மறுமை ஆனந்தமுறும் பயனோடு கூடின நாதவித்தையே தலைமை பெற்று விளங்குவதாம். அஃதன்றி நிலவுலகில் தலைமை அறிவோடு உலவும் ஆன்மாக்கள், எல்லாம் வல்ல இறைவனது நாதபிரம்மம் காரணபிரம்மம் என்னும் இரண்டு குணங்களையும் அறியவேண்டுமென்றும் வேதாந்த சாஸ்திரம் கூறுகின்றது.

சங்கீதமாகிற நாதவித்தையையுபாசித்துப்பலனடையக் கோருகிற ஒவ்வொருவரும் "நாத வித்யா மர்மம்புது தெலிஸி" என்கிறபடி நாத வித்யாமர்மத்தை தெள்ளறத் தெரியவேண்டும் "ஓங்கார ப்ரபவா வேதா:" என்கிறபடி மும்மூர்த்திகளின் வடிவமாகவிருக்கிற ஓங்காரநாதத்திலிருந்தே வேதங்கள் உண்டாயின. வேதத்திலிருந்தே ஸ்வரங்கள் உண்டாயின. ஆதலால் ஸ்வரமூலமாக நாதத்தை அடையலாகுமெனப் பெரியோர் கூறுவர்.

இந்த விதமான ஆன்ற அரும் பெருமையான நாதத்தை,

"மணிக்கடல் யானை வளர்குழல் மேகம்
மணிவண்டு தும்பி வளை பேரிகை யாழ்
தணிக்கெழு நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்கவொண்ணாதே,"

என்கிறபடி மிகுந்த ஆசையோடும் பொறுமையோடும் நுட்பமாக உற்று ஆராய்ந்து பார்ப்பவர்க்கே யன்றி ஏனையோர்க்குச் சிறிதும் பயனைக் கொடுக்காதென்பர்.

எவனுடைய மனது அரூபமான ஆத்மாவினிடம் செல்லாதோ—சமாதி முயற்சியை யடையமாட்டாதோ— அவன் நாதபிரம்ம உபாசனை செய்யவேண்டும். அஃதன்றி வேதத்தின் முறைமைக்கு மாறுபடாமல் ஆத்மாவினிடம் மனதைச் செலுத்தி ஸாமவேத கீதத்தினாலே மனதை நிலைநிறுத்தி உபாசிக்கப் பிறகு நாத ரூபத்தைவிட்டு பரப்ரம்மத்தையடைகிறான் என்று யாக்ஞவல்கிய ஸ்மிருதியில் கூறப்படுகிறது. இவ்வாறு உபாசித்தல் மிக அருந்தலும் மிகவும் சிரமமும் ஆனதினாலே முன்னையதுமூலமாக(சங்கீத மூலமாக)பரப்பிரம்மத்தை அடைதலே மிகவும் நன்றெனவும் சுலபமெனவும் பூர்வாசிரியர்கள் வரையறுத்திருக்கின்றனர்.

தேகாரோக்கியம் வேண்டுபவன் மகாதேவனையும், கீத வித்தை வேண்டுபவன் கலைமகளையும், சுகத்தைத்தேடுகிறவன் நாதத்தையும் உபாசிக்கக் கடவன் என, பாரதத்தில் சொல்லுகிறபடி தனது வேண்டுகோளுக்குத் தக்கபடி எதை எந்த உருவமாக உபாசிக்கிறானோ அந்த உருவத்தினாலே அதற்குத் தகுந்த பலனை யடைந்து இன்புறுகிறான். ஆனதினாலே நாதத்தைப் பரப்பிரம்மமாக நினைத்து நியாஸங்கள் பூர்வமான ஒழுங்குகளுடன் உபாசித்தால் நித்தியானந்தத்தை யனுபவிக்கலாகும்.

வாக்கிய ரூபமான சப்தங்களுக்கும் வாச்சிய ரூபமான பொருள்களுக்கும் பேதமில்லை. வாச்சிய நற்குண உருவமுள்ள தேவதைகளை உபாஸிப்பது போல; வாசக ரூபமான மந்திரங்களை உபாஸிக்கலாகும். நாதமானது வர்ண ரூபமாகவும், அவைகள் சேர்ந்த பத ரூபமாகவும், அவைகள் சேர்ந்த மந்திர ரூபமாகவும் விளங்குகிறது. மரத்தின் சாரம் விதையில் அடங்கியிருத்தல் போல உலகப் பொருட் பயன்கள் முழுதும் அக்ஷரங்களில் அடங்கியிருத்தலினால் மந்திரத்தை உபாசனைக்குத் தொடங்கு முன்னதியாக வாதி சம்வாதி அனுவாதி ஸ்வரச்சேர்க்கை அக்ஷரங்களை அறிந்து, மாத்ருகா சக்தியை அக்ஷரரூபமாகச் சரீரத்தில் நியாசம் செய்து,

பிறகு மந்திர தேவதையை நினைந்துக்கொண்டு மந்திரத்தை ஜபம் செய்யத் தொடங்கினுல் மனது ஒருவழிப்பட்டு நிர்மலமாய் நிற்க, சித்தி யடைந்து பூர்ண பலனைப்பெறலாம் என்று ஆன்ருேர் நுணிவர்.

மூவகைப்பட்டு, எட்டு அங்கங்கள் அடங்கி, எழுத்து வரையறைக் குட்பட்டுத்தகுதியறிந்து ஓதப்படுவது மந்திர மென்றும், எந்த தேவதைக்கு எந்தெந்த அநுஷ்டாங்கள் என்றும், என்ன மந்திர மென்றும், என்ன பலன் எவ்விதம் கைகூடுமென்றும், தெய்வத்தினது தன்மை நிறம் முதலியவைகளையும் அறிந்து அதற்குத் தக்கபடி மந்திர தந்திர பூஜாமுறைப்படி பூஜை செய்ய வேண்டும்.

ஸாமவேதத்திலிருந்து சங்கீதம் எடுக்கப்பட்டது என்று சொல்லப்பட்டது. எவ்வாறு, எப்படி என்று பார்ப்போம். வேதத்தில் வர்ணங்கள் ஸ்வரம், காலம், இடம், முயற்சி, அநுபாதானம் என ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதமான பகுப்புக்களின் முதன்மையான ஸாமவேதத்தின் ஸ்வரங்களான உதாத்த அநுதாத்த ஸ்வரித ஸ்வரங்களிலிருந்து இசைக்குரிய ஸ்வரங்கள் ஏழும் உண்டாயின. எங்ஙனமெனில், உதாத்தத்திலிருந்து நிஷாதமும் காந்தாரமும், அநுதாத்தத்திலிருந்து ரிஷபமும் தைவதமும், ஸ்வரிதத்திலிருந்து ஷட்ஜ மத்திபம பஞ்சமங்களும் முறையே உண்டாயின. ஆதலால் வைதிக முறையாக வேத கானங்களைப் பழக முடியாதவன் லௌகிகமாகக் கானஞ் செய்து இசை நூல்களை அப்பியசித்தால் மனது ஒன்றுபட்டு மனோபாவ மடைகிருன்.

மேற்சொல்லிய நாதமான சரீரம், வீணை புல்லாங்குழல் ஆகிய இவைகளிலிருந்து வருகிறபடியால் மூன்று வகைப்படுகிறது. அவ்வகை நாதங்களுள் இயல்பாகக் குறைந்த ஓசையோடு முதலில் இயல்பாக எழுகிறது சுருதி என்று சொல்லப்படுகிறது. சுருதிதான் ஸ்வரங்களுக்குப் பற்றுக் கோடாகும். ஹ்ருதயத்தி லிருந்து ஊர்த்துவமாகச் செல்லும் முக்கிய நாடியுடன் சம்பந்தப்பட்ட நாடிகள் இருபத்திரண்டினும் முறையே ஒன்றைவிட ஒன்று உயர்வாகப் பிறக்கிற ஓசையையே துவாவிம்ச சுருதி என்று சொல்லப்படுகிறது. இந்தத் துவாவிம்ச சுருதி விவரணங்கள் இலக்கண பூர்வாசாரியர்களுக்குள்ளே பல ஆக்ஷேப சமாதானங்கள் ஏற்பட்டுள்ளன. துவாவிம்ச சுருதி என்கிற பிரதான ஸ்தாபனத்தை வைத்து ஸ்வர வரலாற்றைக் கவனிப்போம்.

இந்தத் துவாவிம்ச சுருதிகளில் நான்காவது சுருதி ஷட்ஜமும், ஏழாவது சுருதி ரிஷபமும், ஒன்பதாவது காந்தாரமும், பதிமூன்ருவது மத்திமமும், பதினேழாவது பஞ்சமமும் இருபதாவது தைவதமும், இருபத்திரண்டாவது நிஷாதமும் ஆக இருக்கிறது. இவ்வாறே மூன்று ஸ்தாயிக்கும் கொள்ளத்தக்கது. நாத பிரம்மத்தின் பெருமையையும் உபாசனை ஆனந்தத்தின் உயர்வையும் இருபத்திரண்டு சுருதியும் முறை வைப்பு ஆழத்தையும் குறித்து எழுதுதல் ஈண்டு விரிதல் பற்றி விடுக்கப்பட்டது.

மனிதர்களுக்கு இன்றியமையாது வேண்டிய செல்வங்கள் இரண்டு. அவையாவன பொருட் செல்வமும் செவிச் செல்வமுமாம். செவிச் செல்வத்தின் பயனே கேடில் விழுச் செல்வமாகிய கல்வி யென்பர். முன்னைய செல்வம் அழியும் தன்மையுடையது. பின்னைய செல்வம்,

> "செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
> செல்வத்து ளெல்லாம் தலை,"

என்கிறபடி எவ்விடத்தும் எக்காலத்தும் அழிவின்றி விளங்கும். ஏனைய செல்வங்கள் இருந்தும் செவிச் செல்வமாகிய கேள்வி இல்லாவிடத்துச் சுகமும் ஆனந்தமும் ஏற்படாவாம். சான்ருக, கட்புலனும் இடம் பொருள் ஏவலும் அமைந்த ஓர் செல்வன், செவிச் செல்வமாகிய நாதம் கேட்காதபடி செவிடனுக இருந்தானுனல், இசைக்கு இன்றி யமையாத நாதப் பிரம்மத்தையும் பொருளமைந்த ஆன்ருேர் இன்மொழிகளையும் கேட்டு இன்புறும் இன்பத் தன்மைய னுகான். சுகங்களுக் குரிய ஏனையவும் உள்ளக் களிப்பிற்குப் பயன்படாவாயின. ஆதலால் செவிப் புலனுடைய ஒவ்வொருவரும் நாதப் பிரம்மத்தை யறிவதோடு நாத வித்தையிலும் ஆவலுடையவர்களாக இருக்க வேண்டும்.

ஆனந்தரங்கப்பிள்ளையின் தினசரி

——:(*):——

விக்கிரம ௵ சித்திரை ௴ ௨ ஞாயிற்றுக்கிழமை.
௧௭௪௦ ஆண்டு அபிரெல் ௴ ௧௩.

இந்த நாள் காலத்தாலே ஏழு மணிக்கு லேபலேன் என்கிற பிறகாது கப்பல் முன்னே இவடத்திலே யிருந்து கோந்து தே தஸ்தேன், ஆலவரோசு, புசே புலோ பெண்ஜாதி மகளுடைய பிள்ளை இவர்களை எத்திக்கொண்டு மோரிசிலே கொண்டுபோய் விட்டுப் போட்டு, மறுபடி அவடத்திலே யிருந்து இவடத்துக்கு இந்தநாள் சேதி கொண்டு வந்துது. இந்த கப்பலிலே அன்பது வெள்ளிப்பெட்டி வந்ததாய் கேழ்க்கப் பட்டது. இதுக்கு முன்னே காரைக்காலின் பேரிலே இங்கலெசுக்காரன் அமாலமேஸ்தா கோறனேசு என்கிறவன் போயி சண்டைபண்ணச்சே மோரிசிலேயிருந்து கும்பனே நே சேந்தே என்கிற கப்பல் அறுபது வெள்ளிப் பெட்டியும் ஏத்திக் கொண்டு மோரிசிலே யிருந்து இவடத்துக்கு வந்தது. காரைக்கால் துறையண்டே வாச்சே இங்கலெசுக் கப்பல்காரர் கண்டு தொரத்தினதாகவும், அகப்படாமல் மேலாக ஓடிப்போய்விட்டது இன்னவிடமென்று தெரிய வில்லை, அதுவும் எட்டுப்பத்து நாளையிலேயே வந்து சேருமென்று இந்தக் கப்பல்காரன் சொன்னதாய் நம்முடவீட்டுக்குவருகிற ஒப்பிசால்மார் சொன்னுர்கள்.

இந்த கப்பலிலே வந்த கடுதாசி மு. செல்லியும் மு. செலெறியும் பார்த்துக்கொண்டதாய் சேதி கேழ்க்கப் பட்டுது. முசே புலோ பெண்ஜாதி மகளுடைய பிள்ளை, அஞ்சு வயசு பிள்ளை, சிமைக்குப் போனது மோரீசு அண்டை போகச்சே அம்மை கண்டு செத்துப்போச் செங்கிற சமாச்சாரம் வந்ததின் பேரிலே அப்பாவை அனுப்பி, முசே புலோ, அவர் பெண்ஜாதி, அவள் மகள், அவள் புருஷன் குசேசே, இவர்களைப் போயி துக்கவுபசாந்தியாய் விசாரிச்சு வந்தான். நேத்தே தொவக்கி இங்கலெசுக்காரன் கறனல் போட்டு என்கிறவன் வழுதாவூர் கோட்டையின் பேரிலேவந்துஇறங்கி மேராச்சா போடுகிறதுக்கு யெத்தினம் பண்ணுகிறதின் பேரிலே,கோட்டையிலேயிருந்து பிரங்கிபோட்டுக்கொண்டேயிருக்கிருன். இவடத்திலே யிருந்து நம்முடவர்கள் பவுஞ்சு நேத்தே போயி பிரம்பை மேட்டிலே இறங்கினுர்கள். இன்னையத் தினம் மு. செல்லியும் மத்த வெள்ளக்காரரும் ஏத்துக்குப் போயி பிரம்பை மேட்டிலே போயிச் சேர்ந்தார்கள். இன்னு ராத்திரிக்கு இங்கலெசுக்காருடைய பாளையத்தின் பேரிலே போயி விழப் போனுர்களென்ற சேதிகேழ்க்கப்பட்டது.

விக்கிரம ௵ சித்திரை மீ ௯ உ திங்கட்கிழமை

௧௭௯௦ ஆண்டு அப்ரெல் மீ ௧௪ உ

இந்த நாள் கேழ்க்கப்பட்ட சேதி சேத்திய தினம் வந்தலபலேன் என்கிற கப்பலிலே அன்பது பெட்டி வெள்ளி வந்ததென்று எழுதிவிச் சோமே, வெள்ளி வந்ததில்லை. அந்த கப்பலிலே வந்தது இருபத்தைந்து கட்டு சகலாத்தும் முன்னாலே இங்கிலேசுக்காரர் கையிலே பிடிச்சது சிறுது பட்டுநூலும் வெள்ளைக்காரருக்கான உடுப்புகளும் சிறுது மருந்து குண்டும் கோதும்பை சிறுது வந்ததுமாய் கேழ்க்கப் பட்டதேயல்லாமல் வெள்ளி வந்ததில்லை. முன்னே வந்த கும்பனி தேசென்பது என்கிற கப்பலிலே அறுபது பெட்டி வெள்ளி வந்ததென்று சொன்னது அந்தக் கப்பல் வந்தால் தெரியும். இந்த நாள் மு. செல்லி சகலமான பேரும் அறியத்தக்கதாகச் சொன்னது என்னவென்றால், இந்தக் கப்பலிலே தனக்குத்தலவனூயியாரா எழுதியனுப்பிவிச்சது, சீமையிலே பிராஞ்சுக்காரருக்கும் இங்கிலேசுக்காரருக்கும் சண்டை இருக்குதே, சண்டை தீர்ந்து சமாதானமாகிற மட்டுக்கும் அவடத்துக்கு நீ தானே யசமானாய் இரு, என்று எழுதியனுப்பிவிச்சாரென்று சகலமான பேரையும் வச்சுக்கொண்டு சொன்னாரென்கிறதாய் வெள்ளைக்காரர் சொல்லக் கேழ்க்கப்பட்டுது. இதல்லாமல் இந்தக் கப்பலிலே சீமைக் கடுதாசி வந்ததை மு. செல்லி தாம் பார்த்துக் கொள்ளுகிறதைப் பார்த்துக்கொண்டு மத்தக் கடுதாசி அவரவர்க்கு வந்ததைக் குடாமல் கட்டுப் போட்டாரென்கிறதாய் வெள்ளைக்காரர் சொல்லக் கேழ்க்கப்பட்டுது. இங்கிலேசுக்காரர் வழுதாவூரின் பேரிலே மெராச்சா போட்டு சண்டைபோடுகிறதால் மடியாபோட மத்த சாஞ்சாமெல்லாம்(?) வந்தவாசிக்கு எடுத்தனுப்பிவிடுகிறதாய் சேதி கேழ்க்கப்பட்டுது. நம்முடவர்கள் மூவாயிரம் சோல்தாதும் ஆயிரம் குதிரையும் ஆறாயிரம் எழாயிரம் பேர் சிபாயியரும் பிரம்பை மேட்டிலே போயிறங்கியிருக்க. சமீபத்திலே வழுதாவூர்க் கோட்டையின் பேரிலே இங்கிலேசுக்காரர் மெராச்சா போட்டு சண்டை பண்ணச்சே என் பார்த்துக் கொண்டு இருக்கிறார்களென்றால், வழுதாவூர்க் கோட்டையிலே நம்முடவர்கள் இருக்கிறவர்கள் வெள்ளைக்காரர் காபிரியரிலே நூறுபேரும், சிபாயியரிலே நூறு இருநூறு பேரும் இருக்கிறார்கள். இவர்கள் பெலனார், இங்கிலேசுக்காரர் வெகு பலத்துடனே வந்து சண்டை பண்ணுகிறார்கள், அவர்கள் பெலனும் பார்ப்போமென்கிறதாய் நம்முடவர்கள் சண்டைக்குப் போகாமல் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சனங்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இங்கிலேசுக்காரர் ராத்திரி பத்து மணிமட்டுக்கும் கோட்டையின் பேரிலே பீரங்கி கட்டு மறுபடி. சுடாமலிருந்தது ஏதாலே என்றால், அவர்கள் குதிரைக்காரரும் பாருட்(?) முஸ்தீது பண்ணிக்கொண்டு நம்முடவர்கள் பிரம்பை மேட்டிலே இறங்கியிருந்தவர்கள் பேரிலே வந்துவிழுந்ததின் பேரிலே, நம்முடவர்கள் அசந்திருந்தபடியினாலே நம்முடவர்கள் பிறப்பட்டு ஓழுகரை, பெட்டியாம்பாளையம், பாதிரிக்கோயில், நெல்லிதோப்பு இவடங்களிலே வந்துவிட்டார்கள். இங்கிலேசுக்காரர் வந்தவர்கள் பிரம்பைமேட்டிலே யிருந்த சென்று மூன்று குடிசைகளை கொளுத்திப்போட்டு அவடத்திலே நம்முடவர்கள் போட்டு விட்டு வந்த மூட்டை முடிச்சுகள் கொஞ்சநஞ்சமிருந்ததை எடுத்துக் கொண்டு போயிவிட்டார்கள்.

பூர்வீக கடிகாரங்கள்

(ஸ்ரீமான் வெ. சுப்பிரமணிய ஐயர் எழுதியது)

தினமானம் காலத்தை அளவு செய்து அறிந்து கொள்ள, இந்துக்களும் பூர்வீக ரோமர்களும், பிற மேனாட்டினரும், கீழ் நாட்டினரும், அவரவர்களுக்குத் தகுந்தாற்போல், பட்சிகளின் மிருகங்களின் சப்தத்தினின்றும், நக்ஷத்திர சூரிய சந்திராதிகளின் ஓட்டங்களினின்றும், இன்னும் பிற சாதனங்களினின்றும் அறிந்து வந்தார்கள். ஆனால் இக் கால வளவைப் பூர்வீகத்தி லிருந்த பல தேசத்துச் சனங்கள் கணித் தறியச் சில செயற்கைக் கடியாரங்களைச் செய்து வைத்திருந்தார்களென்று சொல்லுவது மிகையாகாது. நாமும் தேசத்தவர்கள் எந்தெந்த விதமான செயற்கைக் கடிகாரங்களைச் செய்து வைத்துக் கால வளவைக் கணித்தார்களென்பது பற்றிச் சிறிது ஆராய்வோம்.

மிகப் புராதன காலத்திலிருந்த பூர்வீகர்கள் ஜலத்தையும், மணலையும் வைத்து ஒரு அளவை ஏற்படுத்தி மணிக் கணக்குகளை யறிந்து வந்தார்கள் என்பதற்குச் சரித்திர பூர்வமான ஆதாரம் கிடைத்திருக்கிறது. ஜலத்தி னளவின்படி ஒரு கடிகார மமைத்துக்கொண்டு பூர்வீகர்கள் காலவளவை ஒருவாறு அறிந்து வந்தார்களாம். இந்த நீரளவைக் கடிகாரத்தைக் கொண்டு கால்மணி அரைமணி முக்கால்மணி போன்றவைகளையும் அவற்றின் உட் பாகங்களின் கணக்கைக் கூடப் பூர்வீகர்கள் அறிந்து வந்தார்கள் என்பது தெரிகின்றது. ஒரு புட்டியி னின்று மற்றொரு புட்டியில் பாயும் நீரின் வேகத்தின் திறவின் பல சாய்வுகளினின்றும் தேவையின் கால வளவைப் பூர்வீகர்கள் நன் கறிந்து வந்தார்கள். பூர்வீகத்தில் நீரினால் இயன்ற செயற்கைக் கடியாரமொன்று கிரேக்க தேசத்தின் பிரதான பட்டணமாகிய ஆதென்ஸ் நகரத்தில் காற்றுக் கோபுரமென்னு மிடத்தில் கால வளவைக் காட்டுமாறு பொருத்தி வைக்கப் பெற்றிருந்ததாகத் தெரிகிறது. அங்கு கூடும் சந்தைகளின் நேரத்தைக் குறிப்பிடும்படியாக அமைக்கப் பெற்றிருந்ததாகச் சொல்லப்படுகிறது. மிகப் புராதன காலத்தில் சீன தேசத்தில்கூடத் தண்ணீர்ச் செயற்கைக் கடிகாரங்கள் இருந்ததாகச் சரித்திர பூர்வமான ஆதாரம் கிடைத்திருக்கிறது. சீன தேசத்தின் பக்கத்திலுள்ள கொரியா தேசத்தில்கூட இதே மாதிரியான செயற்கைத் தண்ணீர்க் கடிகாரமொன்று மிகப் புராதன காலத்திலிருந்தது இன்னும் கெடாமல் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வேலை செய்து கொண்டிருக்கிறதை இப்போதும் பார்க்கலாம். கிறிஸ்து பிறக்க உ௪00 வருஷங்களுக்கு முன்னே வெகு காலமாகக் கொரியா தேசத்திலும் தண்ணீர்க் கடிகாரம் கண்டு பிடிக்கப்பட்டு வேலை செய்து வருவதாகத் தெரிகிறது. அக் காலத்து வழக்கப்படி, கிறிஸ்து பிறக்க ஆயிரத்துநூறு வருடங்களுக்கு முந்தி முதற்கொண்டு, நாளொன்று ௧00 பாகங்களாக பிரிக்கப்பட்டுக் கணக்கிடப்பட்டதாகத் தெரிகிறது. இந்த நூறு பாகங்களில் வெயிற் காலங்களில் பகல் ௬0 பாகமாகவும் இரவு ௪0 பாகமாகவும் மழைக்காலங்களில் இரவு ௬0 பாகமாகவும் பகல் ௪0 பாகமாகவும் கணக்கிடப்பட்டிருந்தது.

இக் காலத்துக்குப் பிற்பட்ட சமயங்களில், தினமானது ௧௨0 பாகங்களாகவும், பிற்பட்டு ௧௪0 பாகங்களாகவும் கடைசியாக ௧00 பாகங்களாகவும் பிரிக்கப்பட்டுக் கணக்கிடப்பட்டு வந்ததாகத் தெரிகிறது.

மத்திய காலங்களில், தண்ணீரினால் இயன்ற செயற்கைக் கடியாரங்களைக் கவனித்து அளவு செய்து காலத்தைக் கணிக்கப் புதியதோர் உத்தியோகம் நிர்மாணமாயிற்று. ௧௪௪௨-வது ஆண்டின் துவக்கத்தில், கொரியா தேசத்திலுள்ள ஒவ்வொரு மாகாணத்திலும் மழை நீரினை அளந்தறிய வருஷமானக் கருவியொன்று ஏற்பாடாயிற்று. ஒவ்வொரு நாளும் ஆங்காங்குப் பெய்யும் மழைக் கணக்கினை ஒவ்வொரு மாகாணத்தாரும் கொரியா அரசனுக்கு அனுப்பும்படி செய்த ஏற்பாட்டின்படி நடை பெறலாயிற்று. மழையினாலேயே தேசத்தில் தானியம் விளைந்து

ஜனங்கள் உயிர் வாழ்வதற்குக் காரணமாயிருந்ததை முன்னிட்டுக் கொரியா அரசன் இந்த ஏற்பாட்டைத் தன் நாட்டில் பரவச் செய்தான். கொரியா தேசத்தின் இராஜதானிப் பட்டணமாகிய ஸியூல் நகரின் பெரியதோர் கண்காட்சிச்சாலையில் இன்னும் மிகவும் நேர்த்தியான வனப்பு செய்து இயன்றதோர், நீரினால் இயங்கிய, செயற்கைக் கடிகாரம் ஒன்று வைக்கப் பட்டிருக்கிறது. இக் கடிகாரம் க௪௩ரு-ஆம் வருஷம் முதற்கொண்டு இக் கண்காட்சிச் சாலையிலிருந்து வருகிறதாம். இக் கடிகாரத்தில் மூன்று புட்டிகள் போல அழகிய வெண்கலத்தால் இயன்ற உருவங்களிருக்கின்றனவாம். அது அழகு பொருந்திய நகாசு வேலைப்பாடுகளும் சித்திர வேலைப்பாடுகளும் அமையப் பெற்றுள்ளதாம். இந்த வெண்கலப் புட்டியின் அடிப்புறத்தின் விஸ்தாரமான குறுக்களவு ௬௮ செண்டிமீதர் முதல் ௮௮ செண்டிமீதர் வரை இருக்கிறது. உயரமான வெண்கலப் புட்டி ௭௰ செண்டிமீதர் அளவுள்ளதாயிருக்கிறது. உள்ளேயுள்ள உருளைகளின் உள் குறுக்களவு ௩௰ செண்டிமீதரும் ஒவ்வொன்றும் ௩௩ செண்டிமீதர் உயரமானதாயுமிருக்கிறதாம். இந்த வெண்கலப் புட்டிகளில் மிகப் பெரியது மிக்க உயரமாயிருக்கிறதாம். இவ்வுயரமான பெரிய வெண்கலப் புட்டியில் போட்டுள்ள ஜலம், அதற் கடுத்தாற்போல் பெரியதாயுள்ள புட்டியிலும் அப்புட்டியிலிருந்து அதன் கீழுள்ள சிறிய புட்டியிலும் பாய்ந்து கால அளவைக் காட்டுமாறு அமைக்கப் பட்டுள்ளதாம். இப்படி உயர்ந்துள்ள பெரிய ஒரு புட்டியிலிருந்து கீழே இரண்டு புட்டிகளிலும் பாயும் நீர் ஒரு பெரிய தட்டில் பாய்ந்து பகல் அளவையும் அதே அளவுள்ள மற்றொரு பெரிய தட்டில் பாயும்போது இரவு காலத்தையும் காட்டும்படி கணக்கிடப் பட்டுள்ளதாம். இந்த நீரினால் இயன்ற செயற்கைக் கடிகாரத்தை அப்போதைப்போது காலை மாலை வேளைகளில் அவ்வக் காலங்களைக் காட்டுமாறு ஒழுங்கு படுத்தி அமைத்துவைக்க உத்தியோகஸ்தரொருவரும் நியமனம் பெற்று வேலை செய்து வந்தாராம். நீர் பகலைக் காட்டுவதற்குப் பாயுமிடத்திலும் இரவைக் காட்டுவதற்குப் பாயுமிடத்திலும் மிதக்கக் கூடிய அளவைக் காட்டும் கருவி யிருந்து காலவளவை ஒழுங்காகக் காட்டுமாறு வைக்கப்பட்டிருந்ததாகச் சரித்திர ஆராய்ச்சியினால் வெளிப்படையாகிறது.

இந்தியாவில் பூர்வீக நாகரீக காலங்களில் ஹிந்துக்கள் காலவளவை நக்ஷத்திர சூரிய சந்திரர்களின் ஓட்டங்களினின்றும் கணக்கிட்டு வந்தார்கள். ஓர் ஜாமத்திற்கு ஜாமம் கத்தும் ஜாமக் கோழியின் சத்தத்தினால் ஜாமக் கணக்கை ஹிந்துக்கள் அறிந்து வந்தார்கள். உதயகாலத்தைப் பறந்து வாழும், கோழி முதலியவைகளின் சிலம்புதல்களினாலும் அறியச் சாதக மேற்படுத்தி வைத்துக் கொண்டிருப்பதோடும், ஏழைச் சாமங்களைக் கூகையின் குழறுதலினாலும், ஆந்தைகளின் சிரிச்சுதல்களினாலும் அறிந்து வந்தார்கள். சூரிய வெளிச்சத்தில் நிழல்களின் அடியை அளந்து வந்த எண்ணமோச் சிலவற்றினுடன் கூட்டியும் கழித்தும் பெருக்கியும் வகுத்தும் காலவளவைகளை உதயாத்பூர்வம் இன்னபடி கணக்கிடவேதென்றும் பூர்வீகர்கள் கண்டு பிடித்திருந்தார்கள்.

ஹிந்துக்களில் ஸ்ரீ சங்கரர், மத்வர், இராமாநுஜர் போன்ற ஆசாரியர்கள் தம் மடத்தில் காலவளவை அறிந்து காரியங்கள் நடக்க வேண்டி, செயற்கைக் கடிகாரங்கள் போற் கூறியபடி, சீன தேசத்தி லுள்ளன போன்றும், கொரியா தேசத்தி லுள்ளன போன்றும், மணலினாலும், நீரினாலும் செய்து வைத்துக் கொண்டிருந்தார்கள் என்பது சரித்திரவாயிலாக அறியக் கிடக்கின்றது. சிருங்கேரி மட ஆம்னாயங்களிலுள்ள ஒரு மடத்தார் மணல் வைத்துக் கால அளவைக் காட்டக் கூடியதோர் காலக்கிரமத்தை அளந்தறியும் கடிகாரமொன்றினை இன்றும் வைத்துக் கொண்டிருப்பதை நாம் அறிவோம். நீரின் சுபாவம் சிறிது கீழ்நோக்கும் தன்மையா யிருப்பதால் எப்போதும் மாறுதலடையாத மணலினை மடத்தார் கால அளவைக் காட்டும் செயற்கைக் கடிகாரத்தில் உபயோகித்து வருவதும் ஒரு யுக்தியேயாகும். ஆனால் செயற்கைக் கடிகாரங்களெல்லாவற்றிற்கும், ஒரு உத்தியோகஸ்தன் உடனிருந்து நடத்த வேண்டியதாயிருக்கிறது. ஆனால் தற்காலத்து நவீன முறை ஐரோப்பிய கடியாரங்களோ வென்றால் மனிதனின் நோக்கத்தைச் சரியான தேவையான நேரத்தில் கலைக்கும்படியாயும், வேறு சில

வேளைகளில் உயர்ந்ததாக சிரமப்பட்ட வேலைகள் செய்து வரும் உத்தியோகஸ்தர் படுக்கை யறையில் ஓசைப்படாமலிருந்து காலம் காட்டும்படியாயும் அமைக்கப்பட்டிருப்பனவற்றைப் பார்த்தால், பூர்வீக கடியாரங்களைப்பற்றி நவநாகரீக மனிதர் மதிப்பாகக் கொள்ள மாட்டார்கள். ஸ்விட்ஸர்லந்து தேசத்தில் தற்போது நவநாகரீகத்து லேற்பட்ட முறையில் செயற்கைக் கடிகார மொன்று, பழைமையாய் இயன்றிருப்பதைத் தொட்டால், மணி இன்னவாயிற்று என்று சொல்லும் படியான திறுவி லமைந்திருக்கிறதாகச் சொல்லப் படுகிறது. மற்றொரு கடிகாரம் அமெரிக்காவில் சில குறிப்பிட்ட காலவளவில் விளக்கேற்றிக் காட்டுகிறதாம். இப்படிப் பல வித யுக்திகளால் இயன்ற கடியாரங்கள் மனித சமூகத்தில்தானே புத்துப்புதியதாய் வருமாறுளும் அறிவுடையோர் பூர்வீகத்தில் கடிகார உற்பத்திக்கு முன்னர் ஏற்பட்ட செயற்கைக் கடியாரங்களைப் பற்றிக் கொண்டாடாமலிருக்க முடியாதென்றே சொல்ல வேண்டும்.

இந்திய மாதரும் முந்திய ஒழுக்கமும்

(பண்டிதை அலம்பிகை அம்மையார் எழுதுவது)

———:(o):———

இந்தியாவின் பண்டைய ஒழுக்கம் இந்திய மாதர்களின் கரத்தே யடங்கி நின்றது. இன்னமும் நிற்கின்றது. ஒழுக்கம் உயிரினும் போற்றற்குரிய தென்பதை மறுப்பாரிலை. ஒழுக்கம் அகவொழுக்கம் புறவொழுக்கம் என இரு வகைப் படுகின்றது. எனினும் இருவகையொழுக்கங்களும் மக்கட் கின்றியமையாப் பயன்தருவனவேயாகும். புறவொழுக்கத்தினால் தேக நலமும் அதன்வழி அறிவின் செம்மையும் மனத்திட்பமும் வளர்ச்சியுறுகின்றன. அகத் தூய்மைக்கும் புறவொழுக்கம் துணை செய்யுமாயினும் அது கல்வியறிவினாலாவது கேள்விச் செல்வத்தினாலாவது முறைபட உரம் பெற்றுச் செழித்தல் வேண்டும். இத்தகைய கல்வி கேள்விகளைக் கற்கத்தக்கவை கேட்கத்தக்கவை யெனக் கொண்டனர் ஆன்றோர். அத்தகைய இனத்திற் கேற்ற வுணர்ச்சியை யெழுப்பும் சாதனங்களைத் தற்காலம் அறவே கைவிடுத்தனர் தேச மக்கள் எனக் கூறுவது பிழையெனின் தக்கோர் பொறை புரிக.

இல்வாழும் மங்கையர் ஒழுங்கு அல்லது நேர்மை என்பதைக் கடைப்பிடித் தொழுகும் இயற்கையறிவின் ஆற்றலைப் பெற்றிருந்தாலொழிய இல் வாழ்வோராகிய சகோதரர்களுக்கு உண்மை யின்பம் எவ்வாறு பொருந்தும்! ஆண் மக்களை அறமுறையில் ஆண்டு வருபவர்களெனக் கூறப்படும் பெண்மக்கள் இருவகை யொழுக்கங்களிலும் பற்றிலாதவர்களாவரேல் அவர்களுடன் இல்லறம் புரியும் ஆண்மக்களின் ஒழுக்கமும் நாளடைவில் மாசுற்றுத் தேய்ந்து மறைந்தொழியுமென்பது அநுபவம். ஒழுக்கப்பற்றில்லாத ஆண் மகனையும் ஒழுக்கப் பற்றுடைய ஆடவி சிறிதளவாவது திருத்த முடியும். மனைவியின் எண்ணத்தினை முற்றிலும் புறக்கணித் தொழுகப் பெரும்பான்மையும் ஆடவனுக் கியலாததே. இம் முறையினையே அவர்கட் குதிக்கும் மக்களும் பின்பற்ற வேண்டியவர்களாகின்றனர். ஆதலின் ஒழுக்கத்திற்கு மூல பலம் பெண்பாலார் கரத்தில் அடங்கியுளதென மேலே கூறினோம்.

அகவொழுக்கமில்லாத புறவொழுக்கம் பாராட்டுவோர் பலருமுளர். இது "வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள் அஞ்சு மகத்தே நகும்" எனும் அருமைத் திருவாக்கின்படி சிறப்புறா தெனினும் இருவகை யொழுக்கமும் கைவிடுவோரிலும் இன்னோர் சிறப்புடையோராவர்.

செய்கைப் பழக்கம் நாளடைவில் மனப்பழக்கமாகவும் மாறுதல் கூடும் அன்றி சந்ததிகளைப் பயிற்றும் உபாய மாகும்.

இத்தகைய உயரிய ஒழுக்கம் தற்காலம் மாறுபட்ட தன்மையில் வளர்வுறுகின்றது. அதாவது ஆடவர்க்குரிய கடமைகளை பெண்மக்களும் அவாவி நிற்க முன் வருதலே யாகும். இவர்கள் பெண்கள் கடமை யெனப் படும் பலவற்றையும் கைவிட வேண்டியவர்களாகின்றனர். அநேகர் ஏற்கெனவே கைவிட்டும் விட்டனர். பலர் கைவிட முயல்கின்றனர். ஆனால் கடவுள் நியதிப்படி மகப் பெறுதல் ஒன்றில் மட்டும் பெண் தன்மையை மாற்ற முடியாதவ ராகின்றனர். மகப் பெறுதல் ஒன்றை யன்றி வளர்க்கும் கடமையையும் பலர் விட்டிருக்கின்றனர். இதனால் அன்பு நிலையே குன்றுத லுண்மை.

கவிச் சக்கரவர்த்தியும் "மாதரார் அற்பி னின்றன அறங்கள்" என பெண் மக்களின் அன்பாகிய அடிப்படையின் மீதிலேயே அறங்கள் தளராது நிற்கின்றன என அயோத்தியை வர்ணித்தார். இன்றொன்று அப் பெரியார் உயிர்த் திருப்பரேல் அயோத்தியில் வாழும் பெண்மக்களை யாதாக வருணிக்க நேருமோ? எவரறிவார்?

இக் காலத்திய அன்னியர் மொழியி லார்வங்கொண்டு ஆடவருடன் அதிகாரப் பதவியை நாடி யமர்ந்து ஆய லவர் போல் உண்டும் உடுத்தும் பருகியும் ஒழுகும் சில மாதரசிகளைக் கண்ணுறின்,

"வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே"

எனக் கவியரசர் இறுமாந்து கூறுவரோ? கூறினும் அவ்வுரைகளை நமது நவ நாகரீக மங்கையர்கள் சிறப்பெனக் கொள்வரோ? அன்றி அவர்களை இத் துறையில் ஊக்கி நின்று களிக்கும் நவீன நாகரீக சோதர கனவான்கள் தான் வெறுப்புறா திருப்பரோ?

அன்பு நிலையும் பொறை மாண்பும் நிறையின் வன்மையுமே இந்திய மாதர்க்கு என்று மழியாப் பெருமையை நல்குவதாகும். ஆண் மக்களின் லௌகிக உணர்ச்சியினால் இந்தியநாடு பழம் பொலிவினை யிழந்தா பாதவியாது. பெண் மக்களும் இப்புதிய லௌகிக உணர்ச்சியிற் சிக்கிப் பண்டைய வொழுங்கினைப் பறக்க விடல் எனும் கொள்கையில் ஈடு படுவரேல், அன்றே பாரத தேசம் பொலிவை யிழக்கும், புகழ் துறக்கும்; சிறுமை யுழக்கும். இத்தகைய விபரீத மாறுதல்கள் விளையா வண்ணம் தெய்வத் திருவருள் தடுத்தாளுமென் பதில் என் போலிய பழம் பண்புடையோர்க்கு நம்பிக்கையே. முயற்சி திருவினையாக்கும் என்ற வாக்கின்படி நமது முயற்சியே அத் திருவருளைப் பெறுவிக்கு மாதலின் இதனைப்பற்றி மீண்டுமொருவரையத் துணிந்த தன்றி அருமையா லன்று.

புகை பரவும் அட்டில் புகாத பெண்மணிகட்கு இல்லற முறை யாது தெரியும்? ஏழைகள் துயரம் எவ்விதம் உணரமுடியும்? ஈகைக் குணத்திற்கு அவகாசமேது? பாலரை வளர்க்கும் பண்பு எங்ஙனம் விளங்கும்? வருத்தம் பொறுத்த லென்பதும் மெய் வருந்திப் பெரியோரையும் உரியோரையும் உபசரிப்ப தென்பதும் காண முடியுமோ?

விரிவஞ்சி விடுக்கின்றேன். இடையில் வருவன யாவும் இடையிலே மறையும் என்பது பண்டை யநுபவப் பழமொழி. ஆதலின் தற்சமயம் அயல் நாட்டவரின் கூட்டுறவினால் நன்மையெனத் தோன்றுவன யாவும் விரைவில் தீமையென விளங்குதல் தெய்வத்தின் கட்டளை யாகும்.

ஆகவே தேசநலநாடும் எனது சகோதரர்களும் சகோதரிகளும் இத்தகைய நவீன முறையை யகற்ற இயன்ற வளவில் ஊக்க முறுமாறு வினயத்துடன் வேண்டுகின்றேன்.

நமது சிற்பச் செல்வம்

—— :[o]: ——

க. திருச்செந்தூர் கோவில்

முருகக் கடவுள் படை வீடுகளுக்குள்ளே முதலதாக விளங்குவது திருச்செந்தூர். கீழ்க் கடலோரத்தில் வீற்றிருக்கும் இவ் வூரும் உக்ர பாண்டியன் கட்டுவித்த முருக வேளின் பிறகு மீண்டும் வந்து இங்கேயே மறுபடியும் பாசறையிருந்தான் என்னும் ஐதிக மிருக்கிறது. கடலோரத்தி லிருக்கும் இத்திருக் கோயிலின் காட்சி நேரே சென்று அநுபவித்தவருக்குத் தான் தெரியும். அதைப் பார்க்கும் போது வாழ்நாளனைத்தையும் அங்கேயே இருந்து தவஞ்



திருச்செந்தூர் கோபுர வாசல்.

கோயிலும் கோடானு கோடி பக்தரை ஆகருஷித்து வருகின்றன. சூரபத்மனோடு போர் நிகழ்ந்த காலத்தில் போருக்கு எழுமுன் முருகன் தனது படையை இங்கேயேதான் கூடச் செய்தான் என்றும், அசுரரை வென்று தேவர் கோனுக்கு மீண்டும் அமராவதியை அளித்த செய்யலாமே என்று நினைக்காத தமிழர் இரார். கடலோரத்தில் மஹிஷாசுர மர்த்தனியின் சிலை ஒன்று அழகாக வெட்டப்பட்டிருக்கிறது. இங்கே கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் முருக வேளின் விக்கிரகம் அபூர்வமான அழகு வாய்ந்ததாக இருக்கிறது.

உ. கன்னியா குமாரி

நீலத் திரைக் கடல் ஓரத்திலே நின்று நித்தம் தவம் செய்கின்ற குமரிதேவியை இவ்வாழ்க்கையில் ஓர் முறையாவது தரிசிக்க வேண்டும் என்கிற அவா இந்தியாவிற் பிறந்த அனைவருக்கும்

காலத்தில் சில வாரங்களாவது இங்கே வந்து தங்கிச் சுகமடைந்து போவர். கடலோரத்தில் கட்டப்பட்டிருக்கிற கன்னியின் மனதைக் கவரும் திருக்கோயிலின் படத்தை இங்குக் காட்டியிருக்கிறோம்.



கன்னியா குமாரியின் பொதுத் தோற்றம்.

இருக்கும். மேல் கடலும் கீழ் கடலும் கூடுகின்ற குமரி முனையின் காட்சி மகா அற்புதமானது. சூரியன் உதயமாகும் போது கடலிலிருந்து எழும் காட்சியும் அஸ்தமிக்கும் போது வீழும் காட்சியும் சொல்லத் தரமன்று. திருவிதாங்கூர் சமஸ்தானத்திலுள்ள தனிகர் வெயிற்

தமிழ் நாட்டாரின் கடல் யாத்திரைப் பெரு முயற்சியை ௨௦௦௦ வருஷங்களாகக் கண்டுகளித்த அம்மை இன்று அவர்களுடைய சோம்பலைக் கண்டு வருந்தி நிற்கிறாள். தமிழர் மறுபடியும் உத்யம வாழ்க்கையில் இறங்கி அவளுக்கு ஆனந்தம் ஊட்டுவார்களா?

கம்ப ராமாயணம்

(ஸ்ரீமான் வ. வெ. ஸுப்ரஹ்மண்ய ஐயர் எழுதுவது)

கிஷ்கிந்தா காண்டத்தை உபாக்கியானம் என்கிற ஜாதியிற் சேர்த்தோம். மேனாட்டு இலக்கணாசிரியர்கள் உபாக்கியானங்களை இரண்டு வகையாய்ப் பிரிக்கிறார்கள். அவைகளில் ஒன்று கதா நாயகர்களில் ஒருவர் மற்றொருவருக்குச் சொல்லுகிற உப கதையாகும். மற்றது கதையின் பாகமாக இருந்தாலும் கதைக்கு இன்றியமையாத பாகமாக இராமலும், எடுத்துவிட்டினால் கதையை ஊனமாக்காமலும், இருக்கும் ஓர் அவயவமாகும். பால காண்டத்தில் வருகிற ரிஷ்ய சிருங்கன் கதையும், க்ஷீராப்தி மதனமும், விசுவாமித்திரன் சொல்லுகிற கதைகளும், விசுவாமித்திரனைப் பற்றி வருகிற கதைகளும் உபகதை உபாக்கியானங்களே. அயோத்தியா காண்டத்தில் வரும் சுரோசனன் கதையும், ஆரணிய காண்டத்தில் வரும் விராதன் கதையும் இலங்கணியின் கதையும், உயுத்த காண்டத்தில் வரும் இரணியன் வதைப் படலமும் அதே வகுப்பைச் சேர்ந்த உபாக்கியானங்களேயாகும். ஆனால் கிஷ்கிந்தா காண்டம் அத்தகைய உபாக்கியானமன்று. அது ஹோமரில் வரும் கப்பல் ஜாபிதாவையும், பால காண்டத்தில் வரும் பூக்கொய் படலம் முதலியவற்றையும் போல, கதையோடு அவயவ ஸம்பந்தம் மிக லேசாக உள்ள உபாக்கியானமாகும்.

உபாக்கியானங்கள் அமைப்பதில் ஹோமரைத்தான்—அவனும் இலியாதைப் பாடுகையில் தான்—மிகச் சாமர்த்தியசாலி என்னலாம். அவன் எழுதிய ஒடிஸியம் என்னும் காவியத்தை உண்மையாக மகா காவியமென்று சொல்லக்கூடாது. அதை அனேக உபாக்கியானங்களின் சேர்க்கையென்று சொல்லுவதே முறையாகும். ஆனால் இலியாதிலுள்ள அவனுடைய உட் கதைகள் சிறியனவாயும் அவயவங்களுக்கு அளவில் பொருத்தமாயும் இருக்கின்றன. கதையும் உபாக்கியானங்களும் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு, கதைக்கு இடைஞ்சற் படுத்தாமல் பெரும்பாலும் எடுக்க முடியாதனவாய் இருக்கின்றன. ராமாயணத்தில் உபாக்கியான அமைப்பு இலியாதின் அமைப்புக்குத் தாழ்ந்ததன்று; இங்கேயும் பாலகாண்டத்திலுள்ள உட் கதைகளை நீக்கிவிட்டுப் பார்த்தால் உபாக்கியானங்களும் மூல கதையும் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு, இணைந்துகொண்டு இருக்கின்றன. இரணியன் கதையைத்தான் கதைக்குக் கேடின்றி எடுத்துவிடக் கூடும். ஆனால் திசை திறந்து அண்டம் கீறிச் சிரித்த செங்கட் சீயத்தின் காம்பீரியம் நிறைந்த உபாக்கியானத்தை—அமைப்பில் பாகவத கதையையும் விஷ்ணு புராண கதையையும் வென்றுவிட்டு, ராமாயணமாகிற வைரமணி மாலையில் இந்திர நீல மணியைப் போல விளங்கும் இந்த அற்புதமான உட்கதையை—யாரே ராமாயணத்தினின்று எடுக்க ஒருப்படுவர்?

ராமாயணத்திலுள்ள பரதன் கதையும் கதைக்கு உபாக்கியான சம்பந்த முள்ளதே. ஏனெனில் கதையின் வஸ்துவாகிய ராவண வதத்திற்குப் பரதன், ராமன் காட்டுக்குச் செல்ல அனிஷ்ட காரணனாக இருப்பதால் தவிர வேறு மாதிரி உதவவில்லை. இருப்பினுங்கூட வால்மீகியும் கம்பனும் பரதனுடைய சிருஷ்டியில் எத்தனை அன்பை, எத்தனை பக்தியை, எத்தனைத் தியாகத்தை, எத்தனை ஆத்ம கண்டனத்தைப் புகுத்தி, பரதனை அனன்னிய சதிருசமான, இணையற்ற, ஆத்ம வீரனாக்கிவிட்டார்கள். நமது ஆங்கில ஆராய்ச்சியில் கூறியிருப்பது போல் பரதனை அறியாதவர்கள் ராமாயணத்தின் அழகில் செம்பாதியை இழந்தவர்களாவார்கள்.

கிஷ்கிந்தா காண்டத்தின் பிரதான பாகமான வாலி வதை ராமாயணத்தின் வஸ்துவுக்கு அவயவ சம்பந்தம் வாய்ந்ததன்று ஆதலால் அதை எடுத்து விட்டினால் கதைக்கு யாதொரு ஊனமும் வாராது. ஆனால் கம்பன் தன் நாடகத் திறமை யனைத்தையும் இந்த வாலி வதைப் படலத்தில் கொட்டி வைத்துவிட்டான். இந்த வாலி

லாத உபாக்கியானத்தை மாத்திரம் எழுதி வைத்து விட்டு வேறொன்றும் எழுதி வையாமல் இறந்திருந்தாற் கூட அறிஞர் அவனை உலகத்து மகா கவிகளின் வர்க்கத்தில் சேர்க்காமல் விடத் துணியார். அக்குணைச் சிறப்பு வாய்ந்தது கம்பனுடைய வாலி வதை உபாக்கியானம்.

ஆனல் ராமாயணத்தின் ரசனை அழகைப் பற்றி மாத்திரம்சொல்ல எடுத்துக்கொண்ட இவ்வாராய்ச்சிவரையில் இவ் உபாக்கியான காண்டத்தின் அழகைப் பற்றியாவது அமைப்பைப் பற்றியாவது விஸ்தாரமாகப் பேசுதல் பொருத்த முடைத்தன் றாகலான் கிஷ்கிந்தா காண்டத்தைப் பற்றி இங்கே சொல்லுவதற்கு மேல் ஒன்றும் சொல்லாமல் நிறுத்திக் கொள்கிறோம். அக் காண்டத்தைப் பற்றித் தனிமையான ஓர் ஆராய்ச்சி எப்பொழுதாவது எழுதி அதன் அழகுகளை எடுத்துக் காட்டுவோம்.

இனிச் சுந்தர காண்டத்தின் அமைப்பை ஆராயப் புகுவோம். அதற்கிப் பெயரை வைத்தது வால்மீகியே யாயிருந்தாலும்,வேறு யாராயிருந்தாலும், பெயர் வைத்தவன் மிகப் பொருத்தமாகவே பெயர் வைத்திருக்கிறான். இதுவே காண்டங்க ளனைத்திலும் பேரழகு வாய்ந்தது. யுத்த காண்டத்தில் காம்பீரியமும் கதையின் ஓட்டமும் அதிகம். ஆரணிய காண்டத்தில் வெவ்வேறுபட்ட சம்பவங்களின் சமன்வயத்தினல் வரும் அழகு பிரதானமாக இருக்கிறது. அயோத்தியா காண்டத்தில் நாயகர்களின் சுக வாழ்வுக்கு நேரும் எதிர் பாராத தடையும் சோக பரம்பரையும், அக் காண்டத்தின் வேகமும் அதற்கு ஓர் தனிச் சுவையைத் தருகின்றன. ஆனல் கவி தன் அருமையை யெல்லாம் தன் சக்தியை யெல்லாம், நான் சிறையிருந்து உலகை விடுவிக்க வந்த எம்பெருமாட்டியான சீதா பிராட்டியின் பெருமைகளை வர்ணிக்கும் இந்தச் சுந்தர காண்டத்திலேயே வரையாமற் செலவு செய்திருக்கிறான். சிறை யிருந்தாளின் ஏற்றத்தைக் கூறுகின்றதுதான், ராமாயணம் என்று ஸ்ரீ பிள்ளை லோகாசாரியார் சொல் லியபடியும், ஸீதாயாச் சரிதம் மஹத் என்றும் வால்மீகி ராமாயணப் பாயிரத்தின் குறிப்புக்கிற்கு இலக்கியமாக விளங்கும் வால்மீகி ராமாயண சுந்தர காண்டத்தையும், அதற்கு நான் தோற்றேனில்லை என்று துவஜம் கட்டி நிற்கும் கம்ப ராமாயணத்தின் சுந்தர காண்டத்தையும் கருதியே யாகும்.

சீதையைத் தேடிக் கண்டு பிடிப்பதற்காக அனுப்பப்பட்ட வானர துதர்களுக்குள்ளே, மகா புத்திமானும், பலவானும், ஸ்வாமி பக்தனும், திறமை சாலியுமான அனுமான் மகேந்திர பர்வதத்தின் மீது நின்று கடலைத் தாவுகிற வர்ணனையோடு சுந்தரகாண்டம்ஆரம்பிக்கிறது. கடலைத் தாவும் வர்ணனையில் வால்மீகி கம்பனை வென்று விடுகிறான். வால்மீகியில் அதிசயோக்திகள்கூட இயற்கைக்குப் பொருந்த, மனக்கண் ணெதிர் கம்பம் செப்பும்படி, இருக்கின்றன. கம்பனில் இந்த வர்ணனை சுவை குறைவாயிருக்கிறது என்றே சொல்ல வேண்டும். அவன் சொல்லுகிற உத்பிரேக்ஷைகள் சமுத்திரத்தின் காம்பீரியத்தையும் அனுமான் தாவுகிற சண்டமாருத வேகத்தையும் மறைத்துவிடுகின்றன. ஆனல் அதற்கு மாறாக, மைநாக பர்வதத்திற்கும் அனுமனுக்கும் நடக்கிற சிறு சம்பாஷணையில் கூட கம்பனுடைய திறன் அதிகமாய் விளங்குகிறது. நீ நான் செய்யும் விருந்தினை ஏற்றுப் போகவேண்டும் என்று மைநாகம் செய்கிற உபசாரத்துக்கு,

> பெருந் தேன் பிழி காலும் நின் அன்பு
> பிணித்த போதே
> இருந்தேன்! நுகர்ந்தேன்! இதன் மேல் இனி
> யாவ தென்றோ? *

என்று அனுமான் சொல்லுகிற பதில் எவ்வளவு ரஸமாக இருக்கிறது! இலங்கினிக்கும் அனுமானுக்கும் நடக்கும் போரும் சம்வாதமும் இன்னும் உயர்ந்த ஸ்தாயியை எட்டுகிறது. சீதா ராவண சம்வாதமும்; ஹனுமத் ஸீதா சம்வாதமும், இன்னும் பிற சம்பாஷணைகளும் நிகழும் போது கம்பன் தன்னிலும் உயர்ந்துகொண்டு விடுகிறான்! இவற்றைப்பற்றி மறுபடியும் பேசுவோம்.

* தேன் பொங்கிப் பொழிவது போன்ற உன் அன்பு என்னைத் தழுவியபோதே உன்னிடத்து நான் இளைப்பாறினவனுகிவிட்டேனன்றோ? நீ கொடுக்கும் அமுதை உண்டவனுகிவிட்டேனன்றோ? இதற்குமேல் நீ செய்யத்தக்கது என்ன உளது.

ஊர் தேடு படலத்தில் கம்பனுடைய செழுமையுள்ள பாவனசக்தி நரை புரண்டோடி இலங்கையை சுவர்க்கத்திற்கும் விழுமியதோர் பூமியாக்கி விடுகிறது. பின்னே வர இருக்கும் சீதையின் சோகத்திற்கும், இலங்கைத் தீயின் ஆவேசத்திற்கும் இது மணியின் ஜ்வலிப்பைத் தூக்கிக் காட்டும் வர்ணத் தகட்டைப் போல அடி நிலமாக விளங்குகிறது. ஆனல் இதிலும் வர்ணனை சற்று விளம்பமாக நடந்து வருகையில் படிப்போருக்கு

> கரியனாய், வெளியனாகி, செய்யனாய்க் காட்டும்
> காண்டற்கு
> அரியனாய், எளியனாய்

நிற்கும் ராம பிரானையும், செவிக்குத் தேன் ஊறுகின்ற ராமனுடைய புகழையும், சிறையின் எய்திய செல்வியின் முகத்தையும் கம்பன் நினைவுறுத்திக்கொண்டே செல்லுகின்றான்.

ஒரு உத்கிருஷ்டமான கவிக்குப் பிறகு இன்னொரு கவி அதே கதையைப் பாடினனுனல், முதல் கவியின் போக்கும் வாக்கும் பின்னவன் காலைச் சுற்றி நிற்கும் சுயத் தளை போலாகிவிடுகின்றன. ஆனல் கம்பன் பூமண்டலத்தை ஓர் தலையால் தாங்கும் ஆயிரந் தலை ஆதிசேஷன் போல வால்மீகியின் கனத்தை அலக்ஷியமாய்த் தாங்கி நடப்பதோடு, அவனது கதையையும் தனக்குற்றேவல் செய்து தன் உத்பிரேக்ஷைகளை அலங்கரிக்கும் மணிப் பூண்களாகச் செய்துவிடுகிறான். தாடகை வதை காலத்திலும், மந்தரை சூழ்ச்சியால் கைகேயியின் மனம் திரிந்த காலத்திலும் வால்மீகி புனைந்து வைத்திருக்கிற கதை முடிவைக் கம்பன் எவ்வாறு கையாளுகிறானென்று கார்த்திகை மாதப் பிரதியில் நாம் காட்டியுள்ளோம். சுந்தரகாண்டத்தில் அந்த வழியை அவன் இன்னும் அழகாகப் பின் பற்றிச் செல்லுகிறான். என் பதை நேயர்களுக்கு இப்பொழுது எடுத்துக் காட்டுவோம்.

சீதையைத் தேடுவதற்காக இலங்கையில் ஒவ்வொரு வீடாக அனுமன் நுழைந்து சென்றார் என்று சொல்லி வரும்போது கூ-வந்த சருக்கத்தில் வால்மீகி பிரஹஸ்தன் வீட்டையும் மகா பார்சுவன் வீட்டையும், கும்பகர்ணன் அரண்மனையையும் இந்திரஜித்தன் அரண்மனையையும் விபீஷணன் மந்திரத்தையும் என்று வேறொரு வர்ணனையு மில்லாமல் ஜாபிதாவாக அடுக்கிக்கொண்டு போகிறான். கம்பன், சுந்தர காண்டத்திப் பிற் பகுதியிலும் யுத்த காண்டத்திலும் வால்மீகி புனைந்திருக்கிற கதையை இங்கேயே குறிப்பித்து தன் வர்ணனைக்கு வேறு படுத்தி வைத்தலால் வரும் அழகைத் தந்து வைத்திருக்கிறான். உதாரணமாக கும்பகர்ணனை அனுமான் கண்டான் என்னும்போது அவன் ஆதிசேஷனைப் போலவும், பாந்த கடலைப்போலவும், உலகத்திலுள்ள இருளெல்லாம் ஓரிடத்தில் செறிந்து நின்றது போலவும், தீவினை யெல்லாம் உடல் பெற்றுத் தோன்றியது போலவும் இருந்தானென்றும் பிறவுமாக வர்ணிக்கிறான். விபீஷணனது அரண்மனையில் அனுமன் பிரவேசித்ததும், அவன் தோற்றத்தினின்று அவனது தன்மையை அனுமன் ஊகித்துக் கிரகித்துக் கொண்டு, அரக்கர் நாட்டில் பகிரங்கமாக வசித்தல் அசாத்திய மென்பது கண்டு, அவர்களைப் போன்றதோர் உடலை எடுத்துக்கொண்டு வசிக்கும் அறத்தைப் போலிருக்கிறான் என்று அவன் நினைந்தான் என்று கவி கூறுகிறான். இந்திரஜித்தனை அனுமன் கண்ணுற்றான் என்பதற்கு முன்னேயே

> இந்திரன் சிறையிருந்த வாயிலின்
> கடை எதிர்த்தான்

என்று ஓர் கட்டியம் கூறிவிட்டு, அவனைக் கண்ணுற்றபோது, ஆச்சரியப்பட்டு,

> வளையும் வாள் எயிற்று அரக்கனே, மணிச்சியான்
> மகனே
> அளையில் வாளரி அனையவன் யாவனே, அறியேன்
> இளைய வீரனும் எந்தலும் இருவரும் பலநாள்
> உளைய உள்ள போர் இவனொடும் உளது, என
> உணர்ந்தான். *

* குகையில் சிங்கம் தூங்குவது போன்று தூங்குகிற இவன் ராவணனேதானே சூலபாணியின் மகனோ முருகக் கடவுளோ, யாவனே, அறிய முடியவில்லை: ஆனல் லக்ஷ்மணனும் ராமனும் பல நாள் தவிக்கும்படி போர் கொடுக்கப்போகிறான் என்பது நிச்சயம்! என்று அனுமன் சொல்லிக்கொண்டான்.

என்றும்,

சிவனை,நான் முகத்து ஒருவனை, திரு நெடு மாலாம்
அவனை அல்லவர் நிகர்ப்பவர் என்பதும் அறிவோ? *

என்றும் நினைப்பதாகக் கூறுகிறான்.

இந்த மேற்கோள்களிலின்று, பிறருடைய கதைகளை சுவீகரித்து அவற்றை முதனூலாசிரியன் போலவே சுதந்திரமாகவும் கம்பீரமாகவும் நடத்திக்கொண்டு போவதில் கம்பன் ஹோமரின் கதைகளைச் சுவீகரித்துக் கையாண்ட எஸ்கிலனுக்கும் ஸோபோகிளனுக்கும் ஓர் படி உயர்ந்தவன் எனவே அறிஞர் கண்டு கொள்வர்.

ஊர் தேடு படலம் போன்ற கட்டங்களில் கவிக்கு நீண்ட உபதேச வர்ணனை மாலையை யாக்கவேண்டிய தவசியமாக இருக்கிறது. ஆனால் இவற்றை வெறும் வர்ணனைகள் மாத்திரம் நிரப்பின் படிப்போருக்குச் சலித்துப் போம். இவற்றோடு பொருந்திய உணர்ச்சிகள் விரவி வருகின்றதே ரசனைக்கு அழகு தரும். இவ் விரகசியம் மகா கவிகளுக்குத்தான் தெரியும். மற்ற கவிகள் யாதொரு உணர்ச்சியும் மெய்ப்பாடும் இல்லாமல் நூற்றுக் கணக்கான விருத்தங்களைப் போட்டு வர்ணனைகளை நிரப்பிவிடுகிறார்கள். அல்லது உட்பிரேகைகளை மழை பொழிவது போலப் பொழிந்து வெள்ளம் வெள்ளமாய்ப் போலி உணர்ச்சிகளைத் தோற்றுவித்து, படிப்போரின் பாவனையை விலக்கிவிட்டுத் திண்டு முண்டாடச் செய்து விடுகிறார்கள். கம்பன் இப் படலத்தில் அனுமன் மனதில் தோற்றுவிக்கிற உணர்ச்சிகள் பொருத்தமாயும் சுபாவிகமாயும் இருக்கின்றன. அவற்றிலும் ஆரோகண அவரோகணத்தை அழகுபட அமைத்து மேளச் செய்வி † ருசியாம விருக்கும்படி செய்து விட்டிருக்கிறான்.

சில உதாரணங்கள் காட்டுவோம். இலங்கையைக் காக்கும் படையை அனுமான் கண்டதும்,

தெய்வர் இவர்! சேமம் இது! சேவகரும் யாரும்
வெவ் அமர் தொடங்கிடின் எனைப் பிறரும் ‡

என்றும்,

கருங் கடல் கடப்பு அரிது, அன்று, நகர் காவல்
பெருங் கடல் கடப்பு அரிது! எண்ணம் இறைபேரின்
அருங் கடன் முடிப்பு அரிது; அர் அமர் கிடைக்கின்
நெருங்கு அமர் கிடக்கும் நெடு நாள்! ¶

என்றும் தனக்குள் சொல்லிக் கொள்கிறான்.

பிறகு மண்டோதரியைச் சீதை யென ஓர் நிமிஷ நேரம் ஐயுற்று நோக்கிய பிறகு,

கான் உயர்ந்த தார் இராமன் மேல் நோக்கிய
காதல் காரிகையார்க்கு
மீன் உயர்த்தவன் மருங்குதான் மீளுமோ
நினைத்தது மிகை

என்று அனுமன் இவ்வாறு ஐயுற்றதே மகா பாபம் எனச் சொல்லிக் கொள்ளுவது எத்தனைச் சிறப்பு வாய்ந்திருக்கின்றது என்று ரவிகருக்கு எடுத்துக்காட்டவும் வேண்டுமோ?

ராவணனுடைய சொந்த அரண்மனைக்குள் பிரவேசிக்கையில் வானம் மின்னலின்றி இடித்ததையும் பூரண மங்கல கலசங்கள் வெடித்ததையும் கண்ட ஆஞ்சநேயன்

செக்கு இன்றனன், நீங்கும் அந்தோ, இந்த
மாநகர்த் திரு என்று.

* சிவனையும் விஷ்ணுவையும் விட்டால் இவருக்கு வேறொருவர் நிகர் ஆவர் என்று சொல்லுவதும் அறிவாகுமா?

† வாத்தியத் தொகுதியில் அனுபவிக்கப் பெறும் பல சப்தங்களும் ஸ்வரங்களும் சம்மேளிப்பதால் வரும் அழகு.

‡ பகைவர் இத்தனைப் பலிஷ்டர்; அவர்களது காவற் படையோ;ராமனும் நமது வானர சேனையும் போர் தொடங்கினால் முடிவு என்ன ஆகுமோ?

¶ இலங்கையின் காவற் படையைத் தாண்டிச் செல்வது கடலைக் கடப்பதை விடக் கடினமான காரியமாயிருக்கிறது; கொஞ்சம் கவனம் தப்பினால் நான் வந்த காரியத்தைச் சாதித்தல் அசாத்தியமாய்விடும். போர் செய்ய நேர்ந்தால் யார் வெல்வர் என்று சொல்ல முடியாதபடி நெருங்கிய போர் நெடுநாள் செய்ய வேண்டி வரும்!

ராவணனைக் கண்ணுற்றதும் அனுமனுக்கு ஆவேசமுண்டாகி அவனைத் தானாற்றலால் இடித்துத் தலை பத்தையும் தகர்க்க எண்ணுகின்றான். ஆனால் உடனே மறுபடியும் யோசித்துப் பார்த்து அது பிழையாகும் என்று தீர்மானித்துத் தன்னைத் தானே அடக்கிக் கொள்கிறான். இதைச் சொல்லும் செய்யுட்கள் கம்பனுடைய பெயர் போன செய்யுட்களின் வகுப்பைச் சேர்ந்தவையாகும்:

ஆலம் பார்த்து உண்பவன் போல் ஆற்றல் அமைந்துளர் எனினும்,

சீலம் பார்க்குரியோர்கள் என்னாது செய்பவோ?

மூலம் பார்க்குறின், உலகை முற்றுவிக்கும் முறை தெரியும்

காலம் பார்த்து, இறை வேலை கடவாத கடல் ஒத்தான்.

இற்றைப் போர்ப் பெருஞ் சீற்றம்
என்னோடு முடிந்திடுக:
கற்றைப் பூங் குழலாளைச்
சிறை வைத்த கண்டகனை
முற்றப் போர் முடித்தது ஒரு
குரங்கு என்றால் முனைவீரன்
கொற்றப் போர்ச் சிலைத் தொழிற்குக்
குறைவு உண்டாம்!" எனக்குறைந்தான்.

ஊர் முழுதும் தேடிய பிறகும் சீதையைக் காணாததால் அனுமனுக்கு உண்டாகும் விஷாதத்தின் வர்ணனை இப் படலத்திற்கு அழகிய முத்தாய்ப்பாக விளங்குகிறது.

சீதையின் நிலைமையையும் எண்ணங்களையும் வர்ணிக்கிற பாகத்தில் கம்பன் தன் கலைத்திறன் அனைத்தையும் கொட்டி விட்டான். சீதையின் தவத்தைக் கண்ணுற்றதும் அனுமன் அடையும் ஆனந்தத்தையும் சொல்லும் வார்த்தைகளையும் வர்ணிக்கிற செய்யுள்களை உயரிய கவிதையின் எல்லை என்றே கூறிவிடலாகும். அந்த ஆனந்தத்தில் அனுமான் 'வீடினது அன்று அறன்,' என்றும் 'கள்ளாவர் ஆரக்கன் கமலக் கண்ணனார் உள் உயிரினை ஒளித்து வைத்தவா!' என்றும், 'ஐயம் இல்! அரவின் நீங்கிய தேவனே அவன்! இவள் கமலச் செல்வியே!' என்றும்

மாசுண்ட மணி அனாள்,வயங்கி வெங் கதிர்த்
தேசுண்ட திங்களும் என்னத் தேய்ந்துளாள்,
காசுண்ட கூந்தலாள் கற்பும் காவலும்
ஏசுண்டது இல்லை,ஆல்! அறத்துக்கு ஈறு உண்டோ!*

என்றும்,

புனைகழல் இராகவன் புயத்தையோ புகழ்
வனிதையர் திலகத்தின் மனத்தின் மாண்பையோ
வினை கழல் அரசரின் வண்மை வீசிடும்
சனகர்தம் குலத்தையோ, யாதைச் சாற்றுகேன்!†

என்றும்,

தேவரும் பிழைத்திலர்! தெய்வ வேதியர்
எவரும் பிழைத்திலர்! அறமும் ஈறு இன்று, ஆல்!
யாவது இங்கு இனிச் செயல் அரியது! ‡

என்றும் கூறிக்கொண்டு ஆடுகிறான், பாடுகிறான், அங்கும் இங்குமாக ஆனந்த வெறிகொண்டு ஓடுகிறான்! இன்னும் அவளது தவத்தைப் பார்த்துவிட்டு அவன் அங்கிருந்த ஆற்றைக்

* அழுக்குண்ட ரத்தினத்தையும் தேய்ந்த சந்திரனையும் போல மலினமான நிலையிலிருக்கிற சீதையின் கற்பும் காவலும் சிறிது கெடாமலிருக்கின்றன. அறம் அழியுமோ?

† இதற்காக, ராகவனுடைய திருமேனி அழகைப் புகழட்டுமா? அல்லது பிராட்டியின் திடச் சித்தத்தையும் சீலத்தையும் புகழவோ? அல்லது அரசரின் வள்ளன்மைக்குப் பெருமை தரும் சனகரின் குலத்தையேதான் புகழவோ? யாதைப் புகழ?

‡ தேவர் மீது இனிப் பழியில்லை—வேதியர் மீதும் பழி யிலது—அறத்தினுக்கு எல்லை இல்லை யென்று ஏற்பட்டுவிட்டது: இனி உலகில் அசாத்யம் என்று எது இருக்கிறது?

கான நோக்கிலன் * அவன் கமலக் கண்களால்

என்கிறான், 'அருமை காத்ததோ? ராவணனுடைய வினைதான் அவளைக் காத்துக் கொடுத்ததோ? அல்லது சீதையது கற்புத்தான் வேறோர் துணைப் பலமின்றி அவளைக் காத்து வைத்ததோ? அருமை! அருமை!! யாரால் இவ்வளவு ஆச்சரியமான தற்காப்புச் சாத்தியம்? என் கம்பருக்கு இச் செய்தியை எத்தனை முறை சொன்னால்தான் என் ஆவல் அடங்கும்? வேறு ஒரு பிராணிக்கு இத்தனை மனோதிடம் இருக்குமோ? இவ்வளவு தவத்தை இவள் ஆற்றும் போது உலகின் கஷ்டங்களெல்லாம் ஒன்றோடு முடிந்து விட்டன! அறத்தினை தீவினை வெல்லுமோ? ஒருநாளும் வெல்லாது' என்று அவன் வாயினின்று பெருகுவதாகக் கூறும் வார்த்தைகள் முத்தாய்ப்புக்கு மேல் முத்தாய்ப்பாக ஏறிக்கொண்டு செல்லுகின்றன, என்று படிப்போருக்கு எடுத்துக் காட்டுவோம்.

சீதையோடு அநுமன் பேசுமுன் வால்மீகி சீதையையும் ராவணனையும் சந்திக்கச் செய்திருக்கும் அமைப்பைக் கம்பன் நீக்கித் தள்ளிவிட்டான். சீதையை ராவணன் தொடுவதானால் அவனையும் தாக்கி இலங்கையையும் அழித்து விடுவேன் என்று அநுமன் சபதம் பிடித்துக் கொள்ளுவதாகக் கூறுவதன் மேன்மை குறிப்பிடத் தக்கது.

உருக்காட்டுப் படலத்தின் அமைப்பில் வெல்வியை எக் கவியும் எக்காலத்திலும் வென்றதில்லை என்றும் வெல்ல முடியாது என்றும் கூறிவிடலாகும். சூடாமணி கொடுக்கு முன் சீதை ராமனுக்கு அனுப்பும் செய்தியும் அநுமனது பதிலும் மிகப் பொருத்தமாக அமைத்துள்ளான். இதனின்று பிணி வீட்டுப் படலம் வரை உள்ள கதை சங்கிலி கோத்தது போல சம்பந்தத்துடன் சம்பவம் அழகுபட ஒட்டிக்கொண்டிருக்கும்படி செல்லுகிறது.

இலங்கையை அநுமன் எரிக்கும் சம்பவத்தில் கடல் தாவு படலத்தில் போல வால்மீகியின் வர்ணனை கம்பனுக்கு விட மிகவும் அழகாக இருக்கிறது. கம்பனது உத்தியோகங்கள் அக் காட்சியின் காம்பீரியத்தைத் திரை போட்டது போல மறைத்து விடுகின்றன. ஆனால் இதிலும் படிப்போருக்கு ராவணனை வினவுறுத்தி,

> "என்று சொல் குரங்கு அன்னது இவ்வுலி உனது இலங்கை
> நின்று வெந்து மாநீறு எழுகின்றது! நெருப்புத்
> தின்று தேக்கிடுகின்றது! தேவர்கள் சிரிப்பார்:
> நன்று, நன்று, போர் வலி" என இராவணன் நக்கான்

என்று கூறிக் கம்பன் தன் அமைப்புத் திறமையை விளக்கி விடுகின்றான்.

சுந்தர காண்டத்தில் ஊர்தேடு படலத்தில் எதிர்பார்க்க வைத்தபடி, கம்பன் தனது கதையினைப் படிப்படியாக ஏற்றிக்கொண்டு சென்று கடைசிப் படலமாகிய திருவடி தொழுத படலத்தில் முத்தாய்ப்பை வைத்து விட்டான். இதில் கூட ஓர் சிறிய வேலை செய்திருக்கிறான். இலங்கையில் நிகழ்ந்தவற்றை விளம்பிய வானர வீரருக்குச் சீதையின் கற்பை வர்ணித்தும் அவள் கொடுத்த சூடாமணியைக் காட்டியும் விட்டு அநுமன் . . .

> ....போரில்
> தீண்டா வாள் அரக்கரோடு
> சிந்தத்தன் செருப்பும் சிந்தி
> மீண்டும் விளம்பான், நான் தன்
> வென்றியை உரைப்பவென்னே! †

அதற்கு வானரர், பாரதக் கதையில் வரும் யுத்தத்தைக் கண்டிராமலே அதைக் கண்டவன் போல வர்ணித்த அரசிய சஞ்சயனைப் போலவும், சோனன் தாயின் இருக்குமிடத்தைத் தேர்ந்த ஹோமரைப் போலவும், தாங்கள் சகலத்தையும் ஊகித்தறிந்து கொண்டதாகக் கூறுகின்றனர்:

* ராமன் சொன்னதைக் கவனிக்கவில்லை.

† தான் அரக்கரோடு போர் செய்து, இலங்கைக்கு நெருப்பு வைத்துத் திரும்பியதை அநுமன் சொல்லவில்லை: தான் காட்டிய பராக்கிரமத்தைப் பற்றித் தானே உரைக்க நாணினான்.

> பொருதமை புண்ணே சொல்ல,
> வென்றமை போர்த்த தன்மை
> உரை செய, ஊர் தீயிட்டது
> ஒன்றும் இரும் புகையே ஓத,
> கருதலர் பெருமை, தேவி
> மீண்டிலார் செயலே காட்ட,
> தெரிதர உணர்ந்தேம்!*
> ....

என்றார்களாம். ஆனால் இந்தச் சமத்கார வர்ணனையன்று கம்பனுக்குச் சிறப்பான பெருமையைத் தருவது. மற்று,

> விற்பெருந் தடந்தோள் வீர!
> வீங்கு நீர் இலங்கை வெற்பின்
> நற்பெருந் தவத்தள் ஆய
> நங்கையைக் கண்டேன் அல்லேன்!
> இற்பிறப்பு என்பது ஒன்றும்,
> இரும் பொறை என்பது ஒன்றும்,
> கற்பு எனும் பெயரது ஒன்றும்
> களிநடம் புரியக் கண்டேன்!

என்பது போன்ற, ரஸவாதிகளுக்கும் அகப்படாத ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கத்துக் கிணையான கம்பீரமான செய்யுள்களும், அவற்றைப் பொருத்த அமைத்தலைக்கும் ரசனைத் திறனுமே கம்பனைப் பிராகிருதமான கவிகளினின்றும், அவன் ஜாதியைச் சேர்ந்த கலைவல்லாரான வால்மீகி, வியாசன், ஹோமர், மில்டன் முதலியோரினின்றும் வேறுபடுத்தித் தனிச் சிறப்புத் தருகின்றன.

கம்பன் வழக்கமாய்க் கதைப் பாங்கை மறப்பதில்லை. ஆனால் அனன்னிய சாத்தியமான பராக்கிரமம் காட்டித் தன் பெருந்தேவி சிறையிருந்த உளவைக் கண்டுபிடித்து வந்த அநுமனுக்கு இவ்விடத்தில் ராமன் ஓர் நன்றிகூற்றுக் கூடக் கூறுவதாகச் சொல்லவில்லை. இருப்பினும் வால்மீகி கூறுவது போல அநுமன் மீது தானும் அங்கதன் மீது லக்ஷ்மணனும் ஏறிச் செல்வோம் என்று ராமனே சொன்னான் என்னாமல், கம்பன், அநுமன் இரண்டு கைகளையும் கூப்பிக் கொண்டு, என்னைக் குரங்கென இகழாமல் என் மீது ஏறி வரத் திருவுளம் பற்ற வேண்டுமென்று சொல்லிய பிறகே ராமன் சிறிய திருவடியின் மீது 'சரணம் வைத்தான்' என்று கதையைப் புனைந்திருப்பதினின்று மிகச் சிறிய விஷயங்களிலும் கூட அவன் தன் அரிய கருத்தைச் செலுத்திக் காவியத்தைத் திறம்பட அமைத்திருக்கிறான் என்று படிப்போர் கண்டுகொள்வர். †

ஆக்ஷேப ஸமாதானங்கள்

கம்ப ராமாயணம்

——(:)——

'பாலபாரதி' பத்திரிகையின் கார்த்திகை சஞ்சிகையிலும் அதற்கு முன்னும், கம்பருடைய ராமாயணத்தின் விசேஷத்தைப் பற்றி ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயர் எழுதி வருவதை ஆவலுடன் படித்தேன். நானும் கம்ப ராமாயணத்தில் ஆஸ்தை யுள்ளவன். அதிக விசுவாசத்துடன் படித்தும் கேட்டும் இருக்கிறேன். வால்மீகி ரிஷியால் இயற்றப்பட்ட காவ்யத்தையும் சிறிது படித்திருக்கிறேன். ஆதலால்தான் இவ்விரண்டு கவி ரத்ந

* உன் உடம்பில் கோரமான காயங்களிருப்பதினின்று போர் செய்தாய் என்றும், நீ இங்கு திரும்பி வந்ததினின்று நீ பகைவரை வென்றாய் என்றும், அதோ வானளாவிச் செல்லுகிறதே புகை—அதினின்று நீ இலங்கைக்குத் தீ வைத்தாய் என்றும், சீதா தேவியை நீ உடன் அழைத்து வாராததினின்று பகைவர் இத்துணைப் பலிஷ்டர் என்றும் உணர்ந்துகொண்டோம்.

† சில பேர் கம்ப ராமாயண ஆராய்ச்சி படிக்கக் கடினமாக இருக்கிறது என்று எழுதுவதால், அடுத்த சஞ்சிகையில் யுத்த காண்ட ரசனையைப்பற்றி வெளிப்படுத்த இருக்கும் ஆராய்ச்சியோடு கம்பராமாயண ஆராய்ச்சியைத் தற்போதைக்கு நிறுத்திக்கொள்ளலாம் என்றிருக்கிறேன். ரசனை ஆராய்ச்சியும் இவ் யுத்த காண்ட ஆராய்ச்சியுடன் ஓர் வாறு முற்றுப்பெறும்.

னங்களின் தாரதம்யத்தை எடுத்துக் காண்பிப்பவர்கள் எழுதியதை கவனிக்க வேண்டும்.

இவ்விரண்டு ஆசாரியர்களின் ஒற்றுமை வேற்றுமையை உணர்வதற்கு, சில விஷயங்கள் முக்கியமாக கவனிக்கப் படவேண்டும்.

௧. ஸ்ரீராம கவியின் காலம் என்ன?
௨. அக்கவி உத்தேசித்த ஜனங்கள் யாவர்கள்?
௩. அவர் வெளியிட்ட சந்தர்ப்பம் என்ன?

இவைகள் இன்றியமையாத குறிப்புகள். இன்னும் அனேக விஷயங்கள் உண்டு. மேற்சொல்லிய முக்கிய கவனிப்புகளுடன் இரண்டு காவியங்களையும் ஆராய்ச்சி செய்தால் நம்முடைய புத்தியினுக்கு தெரிகிறதென்? படும் வெகுவான மேன்மைத் துறைகள் காண்பிக்க இடம் இருக்கமாட்டாது. வால்மீகி முனிவர் இராமனை அதிமுதல் புருஷோத்தமனாக வெளியிட வந்திருக்கிறார். ஸ்ரீ ராமசந்திரன் தன்னை அவதார புருஷனாகச் சொல்ல இஷ்டப்படவில்லை. அதைக் கருத்தில் வைத்துக் கொண்டு அவர் படித்தவர்களுக்கும், பாமர ஜனங்களுக்கும், கவி புலமையிலுள்ள மூன்று வகுத்த பிரமாணங்களுக்கும், சரித்திரமாகப் பல எண்ணங்கொண்டார்.

கம்பர் எழுதிய காலத்தில், ஸ்ரீராமனை மகாவிஷ்ணு என்றும், அவதார புருஷனென்றும், கலி கல்மஷத்தை விலக்கத் தகுந்த தாரகநாமத்தை உடையவனென்றும், அர்ச்சிக்க ஒருவனென்றும் பிரசித்தி யடைந்திருந்தது. இந்நோக்கத்துடன் கம்பராமாயணத்தைப் படித்தால், இம் மஹான்கள் இருவருக்கும் உள்ள தாரதம்யம் நன்கு புலப்படும்.

சந்திகையைப் படிக்குங்கால் கம்பர் வேண்டிய மட்டிலேயும் வால்மீகியை அடிப்பட்டு தழுவியதாக நான் பேசு உணர்ந்தேன். ஒரு உதாரணம் அயோத்தியா காண்டத்தில் கைகேயியுடன் விஸ்தாரமாக வாதம் செய்தது சுவைக்கு இணங்கவில்லையென்றும், லக்ஷ்மணன் ராமனுடன் சென்றதைச் சொல்லுவது ரஸனையை அதிகரிக்கச் செய்கிறதென்றும், அபிப்பிராயப்படுகிறது. லக்ஷ்மணன் இங்கு ராமன் சென்றிருப்பான் என்று சொல்லுவது இவ்விரண்டு ஆசிரியர்களின் கீர்த்தி மங்கிடக் கூடியதாகும். இராமன் அரசு ஆளும் உபாயமாக விருந்த தமையனை விட்டு நீங்கி யிருக்க வல்லவன் அல்ல அவன். அங்கு இருக்குங்கால் சொன்ன உத்திரவை ஆதரிக்க இராமன் தம்பியில்லாமல் போயிருக்க மாட்டானென்பது திண்ணம். கைகேயியுடன் நடந்த வாக்குவாதம் அதி விஸ்தாரமென்று சொன்னதில் வால்மீகியின் கவிசாமர்த்தியத்தை முழுவதும் உணர்ந்ததாகமாட்டாது. இன்னும் எழுதலாம். இருந்தாலும், இனியெனினிப் பத்திரிகையில் என்றால் விசாரிக்கப்பட்ட குறிப்புகளை மனதில் வைத்துக்கொண்டு தாரதம்யத்தைக் காண்பித்தால் என்னைப் போன்றவர்கள் கூட திருப்தியடைவார்கள்.

டி. வை. சேஷகிரி அய்யர்.

மேலே குறிப்பிட்டுள்ள கடிதத்தில் ஸ்ரீ சேஷகிரி ஐயர் தான் வால்மீகியைத் தாழ்த்த விரும்புவதாகக் கூறுகிறார். ஒரு அம்சத்தில் ஒருவர் மேம்பட்டவர் என்று ஒருவன் கூறுவதால் அவன் மற்றவரைத் தாழ்த்தினதாகக் கூறப்பட்ட ஆளின் ஆசிரியனை ஒரு விதத்தில் பழித்து கூறுவதாகும் என்று மனிதர் சொல்லல் அருமை. அது ஆராய்ச்சி முறையையே எதிர்ப்பதாகும். ஆராய்ச்சியில் ஒருவன் கொடுக்கும் அபிப்பிராயம் தவறாகவே இருக்கலாம். ஆனால் அவன் குதர்க்கவாதம் புரியாத வரையில், அவ் அபிப்பிராயத்தை வெளியிட்டது கண்டிக்கப் பெற்ற அநீதியான அமைப்பாகும் என்று சொல்லுவது முறையாகாது.

ஸ்ரீ ஐயர் இவ் விரு கவிகள் எழுதிய காலங்களையும் சந்தர்ப்பங்களையும், அவர் உத்தேசித்த ஜனங்களையும் சொல்லி ஆராய்ச்சியை நடத்தவேண்டும் என்கிறார். காலமும் சந்தர்ப்பங்களும் உத்தேசித்த ஜனங்களும் வேறு வேறு என்பது வெளிப்படை. அதை நான் மறுக்கவில்லை. இவ் ஆசிரியர்களை ஓர் தனி தன் காலத்திலும், இடத்திலும், தான் பிறந்த கட்டத்திலும் அவைக் கூறிய விஷயங்களுக்குப் பொருந்த எழுதி யிருக்கிறாரா இல்லையா என்ற ஆராய்ச்சிதான் பெரும்பாலும் பயன்படும். என் ஆராய்ச்சியில் வால்மீகி எந்

தகைய மனிதன் கம்பன் எத்தகைய மனிதன் என்பது வால்மீகி என்ன போதிக்க வந்தான் கம்பன் என்ன போதிக்க வந்தான் என்பதுதான் விசாரிக்கப் புகவில்லை. மற்று, மகா காவியங்களின் வரிசையில் கம்பராமாயணத்தின் ஸ்தானம் எது என்று நிர்ணயிப்பதே என் நோக்கம் ஆகும். இவ் ஆராய்ச்சியில் வால்மீகி ராமாயணத்தில் எப் பாகத்திலாவது ரசனை முறை கம்ப ராமாயணத்தின் ரசனை முறைக்குத் தாழ்ந்ததாக இருப்பின் எடுத்துக் காட்டவேண்டியது என் கடமையாகும். அதே மாதிரி அதுவோ மற்ற நூல்களோ கம்ப ராமாயணத்தின் எப்பாகத்தையாவது உயர்வு காட்டினால் அதையும் எடுத்துக் காட்ட வேண்டியது எனது கடமை. இந்த ஸ்ரீமான் ஐயர் சொல்லும் கால தேச சந்தர்ப்பத் தொகுதியின் விசாரணை பெரிதும் உதவி புரியாது என்று அஞ்சுகிறேன்.

வால்மீகி ராமனைக் கடவுளாகப் பாவிக்காததால் அவனுடைய ரசனைக்குக் குறைய நியாயமில்லை. கம்பன் ராமனை நாராயண மூர்த்தியின் அவதாரமாகப் பாவித்து எழுதியதால்தான் கம்ப ராமாயணத்தின் ரசனை உயர்ந்திருக்கிறது என்று சொல்லுவது பொருந்தாது. கதையின் ஓட்டத்தையும் சம்பாஷணைகளின் அமைப்பையும் ரஸிகர் இருதயத்துக்குத் திருப்தி அளிக்கும்படி பொருத்தமாகக் கோத்து வைத்து எழுதுவதே ரசனையாகும். (எனது நான்கு வியாசங்களிலும் கூட இவ் இரசனை விசாரணையை முற்றிலும் அடக்க முடியாதபோது இந்த ரசனையைப் பற்றி ஓர் வாக்கியத்தில் தான் எழுதியுள்ளேன் என்று அறிஞர் கருதுவர் என நம்புகிறேன்.) அவ் இரசனைக்கு கம்பராமாயணத்தில் அதிகம் காணப்படுகிறது என்பதே எனது கட்சி. அதனால் வால்மீகியில் இரசனைச்சுவை இல்லவே இல்லை என்று நான் கூறுவதாக ஒருவரும் ஆகாது. மற்று இரசனைச்சுவையில் வால்மீகி ராமாயணம் கம்ப ராமாயணத்தைத் தவிர மற்றெல்லா மகா காவியங்களையும் இதிகாசங்களையும் விட உயர்ந்தது என்பதே எனது தாழ்ந்த அபிப்பிராயம்.

ராம கைகேயி சம்வாதத்தில் கம்ப ராமாயணத்தில் உள்ள நெடிப்பு வால்மீகியில் இல்லையென்றும், இந்த கட்டத்தில் நெடிப்பே ரசனைக்கு அவசியம் என்றும் நான் அபிப்பிராயப்படுகிறேன். இரண்டு நூல்களிலும் இந்த கட்டத்தைப் பொறுமையுடனும் சிறந்த மனதுடனும் படித்துப் பார்த்தால் கம்பனில் காணப்படும் அமைப்பு அதிக சுவையுடைத்து என்று ரசிகருக்குத் தோன்றும் என நம்புகிறேன். இங்கும் வால்மீகியின் ரசனை சுவையற்றது என்பது எனது கருத்தன்று. அவரது அமைப்பைவிடக் கம்பன் இக் கட்டத்தில் செய்துவைத்துள்ள அமைப்பு சிறந்தது என்பது தான் என் அபிப்பிராயம்.

ராமனுக்குப் பட்டாபிஷேகம் இல்லையென்று கைகேயி கூறும் காலத்தில் லக்ஷ்மணன் ராமனோடு இருந்தான் என்ற அமைப்பில் ரசனைக்குற்றம் ஏற்படுகிறது என்று நான் எழுதியதை ஸ்ரீ ஐயர் அவ் இரசனை 'அருவருக்கத்தக்கது' என்று நான் சொல்வதாக வைத்துக்கொண்டு எழுதுகிறார். லக்ஷ்மணன் அச் சமயத்தில் ராமனோடு இருந்தால் அவனுடைய ராஜஸ சுபாவம் உத்தேசித்த கைகேயியைத் தாக்கவோ அவமதித்துப் பேசவோ வேண்டும். வால்மீகி லக்ஷ்மணனுக்குக் கற்பித்திருக்கிற சுபாவப்படி அங்கே அவனை அடக்கச் செய்யவில்லை, எனெனில் ராமனே தீர லக்ஷ்மணன் தாயைத் தாக்கும்படி செய்தல் முறையாகாது. ஆகையால்தான் கம்பன் ராமனை மாத்திரம் தனியாகக் கைகேயியிடம் நிறுத்தியிருக்கிறான். அவ்வாறு செய்திருப்பதால் லக்ஷ்மணனைத் தன் சுபாவத்துக்கு மாறாக நடக்கும்படி செய்யவேண்டிய தவற்றினின்று கம்பன் தப்பித்துக்கொள்ளுகிறான். அந்தச் சமயத்தில் ராமன் கூடச்சென்றால்தான் லக்ஷ்மணனுடைய பிரியா நட்புக்குப் பொருத்தமாயிருக்கும் என்பது அதிசூக்ஷ்ம வாதம் என்பது எனது தாழ்ந்த அபிப்பிராயம்.

வ. வே. ஸு.

ஜகதீச சந்திர வஸு செய்த ஆராய்ச்சிகள்

(பஞ்சாப் வித்யாலயத்தில் நைஷ்டிக்கத்தில் அவர் செய்த பிரசங்கத்தின் மொழிபெயர்ப்பு)

(ஸ்ரீமான் வெ. கா. ராமநாதன் மொழிபெயர்த்தது)

உங்களிடை வந்து பிரஸங்கம் புரியும்படி என்னை அழைத்த காலத்து ஸம்ஸாரமென்னும் ஸாகரத்தில் ஈடுபடவிருக்கும் மாணவர்களுக்கும் வித்தியார்த்திகளுக்கும் புத்திமதி வார்த்தைகள் இரண்டொன்றை எடுத்துக் கூற எனக்கு ஸந்தர்ப்பம் வாய்த்ததை யான் ஒரு பெரும்பேறெனக் கருதி அகமகிழ்கிறேன். நீங்கள் என்னிடம் பாராட்டும் பேரன்புக்கும் பூரண நம்பிக்கைக்கும் விதோ ஒரு சிறு கைம்மாறாக என் அறிவுக் கெட்டியவரையில் சிறந்ததான விஷயத்தை உங்களுக்குத் தெளியக் கூறுவேன். நான் உங்களுக்குக் கூறவிருக்கும் புத்திமதிகள் எளிதில் பின்பற்றக் கூடியன வல்ல. உங்களுடைய பூர்ண பிரயத்னங்களையும் அரும் பெருந்தகைமைகளையும் கொண்டே தான் சாதிக்கற்பாலன. நான் உங்களுக்குச் சுலபமான வழிகளைக் காட்டுவதில்லை. உங்களுடைய போராற்றலைத் துணையாகக் கொண்டு அதிக கஷ்டத்துடனும் சிரமத்துடனும் இயற்றக் கூடிய விஷயங்களை மட்டுமே நீங்கள் உங்கள்வாழ்நாட் கொள்கைகளாகக் கொள்ள வேண்டுமென்று உங்களை நிர்ப்பந்தஞ் செய்ய வந்தவனுமேன் நான். மானவ தரும இயக்கத்தின் சரித்திரத்தில் தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலைமை ஸாமாந்யமான தன்று. உண்மையான மானவ தர்மத்தின் அபிவிருத்தியானது இடைவிடாது சாசுவதமாய் முன்னேற்ற மடைந்து வருதல் இன்றியமையாததாகும். இந்நெருக்கடி உரிய நிலைப் பிரதிநிதிகளாக உரிய தனிப் பெருங் கொள்கையும் எவ்வித இடையூறு வந்தாலும் சலியாது ஏகாக்ர சித்தத்துடன் பின்பற்றிச் செல்லக்கூடிய திட புத்தியையும் ஆற்றலையும் வாய்ந்தவர்கள் தங்கள் பயன் படுத்தவேண்டிய பரமோத்கிருஷ்டமான காலம் இப்போது ஏற்பட்டுள்ளது. நீங்கள் அனைவரும் தத்துவப் பொருளை அல்லது உண்மையை நாடி நிற்றவர்கள். அவ்வித உண்மையைக் கண்டறியுமுன் நீங்கள் படவேண்டிய சிரமத்தையும் செய்யவேண்டிய தியாகத்தையும் பற்றி நான் உங்களுக்கு விரிவாய் எடுத்துரைப்பேன். இந்தப் பரதப் பிராந்தியத்தில் அநேகர் பேர் கைத்தொழில் வித்தை, வழக்க ஒழுக்கங்கள், நாகரிகம் பொக்கிஷங்கள் சுற்று அழியப் பெற்றன. ஆயின், நீங்கள் பண்டைக் காலத்திலைப் புலமை பார்த்தற் குட்டுக் கொண்டு ஓர் மைப்போல கேவலம் முடத்தனமாய் மேற் கொள்ளுதலைத் தவிர்த்தல் வேண்டும். பிரகிருதி அல்லது விவகாரங்கள், வித்தை, மனுஷ்யர்கள் முதலியவற்றின் உள் ஸாரத்தைக் கிரகித்து அறிவை விசாலப்படுத்திக் கொள்ளும் சக்தியுடையவர்களாக விளங்குதல் அவசியம்.

மனிதனுடைய சக்தி: விதியை மதியால் வெல்லலாம்

மனிதனால் ஆகக் கூடாததுவோ அல்லது அவனுக்கு அசாத்தியமானதோ ஆகிய விஷயங்களைப் பற்றியாவது அல்லது பிறராதிகளில் சாதிக்கப்பட்டுள்ள விஷயங்களைக் குறித்தாவது நான் பேசப் போவதில்லை; பாரத கண்டத்திலேயே செய்து முடிக்கக் கூடியனவும் பண்டைக் காலத்தில் இந்நாட்டில் சாதிக்கப்பட்டனவுமான வற்றைப் பற்றியே நான் பிரஸ்தாபிக்கப் போகிறேன். அதாவது விஷயங்கள் எவ்வாறு நன்கு பிறக்கப்படுகின்றன என்பதைப் பற்றி யான்

பேசப் போகிறேனென நீங்கள் நினைப்பது இயற்கையே. அது மட்டுமேயன்றி, ஜட வஸ்துக்களைப் பற்றியும் அவற்றை இயக்கும் பல்வேறு சக்திகளின் குண குணங்களைப் பற்றியும் ஆராய்ச்சி செய்வதிலின்றும், ஜீவனை உடைய வஸ்துக்கள் மேற்கூறிய பல்வேறு சக்திகளால் பாதிக்கப்படுகின்றன என்ற விஷயத்தை ஆலோசிக்கும் நிலைமைக்கு எவ்வாறு நான் வரலாயினேன், அதன் காரணம் யாது என்பதையு மறிய நீங்கள் ஆவலாயிருப்பீர்கள்.

விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சி சம்பந்தமாக அநேக அநுகூலமான காலங்கள் வர்த்தமானங்கள் கிடையாதெனவும் அந்நுறையினராகிய முயற்சிகள் யாவும் பல்வேறு சந்தர்ப்பங்களினால் சோம்பி நிற்கலாகின்றன வென்றும் புகார் அடிக்கடி கிளம்புகின்றது. சந்தர்ப்பாசந்தர்ப்பங்களைக் கண்டு குறை கூறுவது மனிதனுக்கு அழகன்று. எப்படியும் அசந்தர்ப்பங்களை யெல்லாம், அவற்றைப் பார்த்துப் புறங் காட்டாமல் முன் நின்று போருது, அவற்றின் மீது வெற்றி கொள்வதே மனிதனுடைய தருமமாகும். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஹஸ்தினாபுரி ராஜ சபையில் பிறந்த வீர வார்த்தைகளை விரிவாயெடுத்துரைக்கும் மஹா பாரதக் கதை உங்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கலாம். தேர்ப் பாகன் குலத்தில் உதித்தவனெனக் கருதப்பட்ட கர்ணன் அரசிளங் குமாரனும் அர்ஜுனனுடைய வீரத்தைப் பழித்து வாதுக் கழைக்க, அர்ஜுனன் உயர்குடிப் பிறவாத ஈன மகனுடன் அரசிளங் குமாரனொருவன் சண்டை செய்வதென்பது ஒவ்வாத காரியமெனத் துச்சமாய் விடையிறுத்தனன். உடனே கர்ணன், "யாது சொன்னாய் நீ! நானோ என் பிறப்பாளன், பாதக மகன், அனைவருமாவேன். என் கைத் திறத்தால் நானே அந்த உயர் குடிப் பிறப்பைப் பெறுகின்றேன் பார்," என்று சபதங் கூறினன். இக்கதையினின்றே மனிதன் விதியைக்கூட மதியால் வெல்லு, நல் லதிர்ஷ்ட மென்னும் தெய்வ மடந்தை தானே வந்து பணிந்து நின்று தன்னை ஏற்றுக்கொள்ளும்படி சரணாகதி யடையச் செய்யும் ஆற்றலை யுடையானென்னும் நீதி மொழியை முதன் முதல் உறுதிப்படுத்தினான் போலும். நீ அடியோடு அயலார் உதவியை நாடி அவர்களை கதியென நம்பிக் கிடப்பாயாயின், உனது வாழ்வு கேவலம் மானமற்ற பராதீனம்; பதரின் பாலதாகும். வலு, தீரம், உரம், அனைத்துக்கும் போராட்டமே நற்றுணையாகும். உனது கையே உனக்கு உதவுதல் வேண்டும். உன் வலியைக் கொண்டே நீ சேரிய பொருளைக் கைக்கொளல் வேண்டும். அன்னியன் கையை எதிர்பார்த்து நில்லாது, உனது சொந்த ஆற்றலையே துணையாகக்கொண்டு போர் புரியப் புரிய உனது ஆற்றல் அளவு கடந்ததாகி உனக்கு ஜயத்தைப் பயக்கும். விஞ்ஞான சம்பந்தமான துறைகளிற்கூட ஒரு முறை இரு முறை மும்முறை யென்ப பலமுறையும் தோல்வியடைந்தும், மனோ திடத்தைக் கைவிடாது, எத்தகைய ஆபத்துக்களையும் சங்கடங்களையும் பொருட்படுத்தாது, கொண்ட நோக்கமே பெரிதாக நினைத்துப் போராடுகிறவர்களால் தான் சிறந்த உண்மைகள் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன.

ஜயாபஜயம்

விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சி நிலையைக் கொண்டவனுடைய பாதை ராஜ மார்க்க மன்று. அவனுக்குச் சுகங் கிடையாது, நல்லுடை கிடையாது, நல்லுணவு கிடையாது, சதா கஷ்டம்தான், சதா போராட்டந்தான். ஜயத்தையும் அபஜயத்தையும் லாபத்தையும் நஷ்டத்தையும் ஒரு பொருட் பல கிளவிகளெனக் கொண்டு, தன்னுடைய வாழ்க்கையையே மகா பலியாக அவன் தியாகஞ் செய்து விடவேண்டும். எளிதில்

இடைக்கக் கூடிய ஜயமாவது லாபமாவது அல்லது எளிதில் செய்து முடிக்கக் கூடிய தொழிலாவது சுத்த வீரன் மனதுக்குப் பிடிப்பதில்லை. எட்டாத சந்திர பிம்பத்தைப் பிடிக்கப் பந்தாடவெண்ணி அந்த நாட்டத்தில் அவன் படும் அவஸ்தைகளும் அபஜயங்களும் அவன் மனதைக் கவர்வன. அவைகளே அவனுக்கு மகிழ்ச்சிகரமானவை. அபஜயக் கொடியே தன்னுடைய புலப்பட்டுக் கொண்டிருக்கும்படியான சில பிரயத்னங்கள் மாண்டு படுத்ததாகக் கருதப்பட்ட பின்னரும் மறுபடியும் மறுபடியும் அவைகளைப் புத்துயிர் பெற்று எழுந்து நிலவச்செய்யும் அரிய ஆற்றலின் அந்தரங்கம் யாது? அது என்னது? நாம் சற்று நிதானித்துக் கவனிப்போமானால், காரணத்துக்குப் பின் காரியம் எவ்வாறு அவசியம் ஏற்பட்டே யாகவேண்டுமோ, அவ்விதமே யாரும் அபஜயத்தை யடுத்ததுபோல் ஜயமும். நாம் ஜயமென்ப பேரிகை கொட்டி முழக்கும் காரியத்தின் தோற்றம் நெடுங்காலம் கழித்துத் தோன்றுவதன் முன் மறை சக்தியாய் நின்று இயக்க வேண்டிய ஆதி பராசக்தியே யாகும் அபஜயம் என்ற உண்மையை நாம் காதலர மலம் போல காணுவோம்.

விஞ்ஞான சாஸ்திரவுண்மையைக் கண்டறிவதற்கு இன்றியமையாத நிபந்தனைகள்

கலைகளின் ரஸாதத்தைப் பெற்று அறிவை விசாலப் படுத்திக் கொள்வதற்குப் பல்வேறு நிபந்தனைகள் இன்றியமையாதனவாகும். முதல் அவசியகம் அபார கற்பனா சக்தியாகும். விஞ்ஞானத்தில் பிரதி ஆராய்ச்சிப் பிரயத்தனமும் முதல் முதல் அதன் சம்பந்தமான அங்கங்களோடு ஒவ்வொரு அடிப்படையாக வேண்டிய இடமான மனிதனுடைய மனமே பிரதான ஆராய்ச்சிச் சாலையாய் நிற்கிறது. நெஞ்சிய திரையும் தொர்றமுமின்றி, நுதுடன் மாங்காய் விற மாத்திரைக் கொண்டு பரிசோதனைச் செய்யப்படும் ஆராய்ச்சிகள் பயனற்றவாகும். இத்தகைய மனத் தத்துவம் கேவலம் மனக் கோட்டைகள் கட்டும் அபார கற்பனா சக்தியில் அகப்பட்டு உழலுகின்ற தன்மையதாகையால், இந்தியாவில் விஞ்ஞான சாஸ்திர துன்னிய ஆராய்ச்சிக்கிடமே இல்லையென நினைக்கப்பட்டது. ஆனால் மேல் நாட்டைப் பார்க்குங்கால் நம்முன் முரண்படுவனவாய் வகை தொகையற்று ஓரே கந்தர்கோளமாகத் தோற்றும் ஜீவராசியினின்று ஒரு நூதன உள்ளுண்மையையும் ஒழுங்கையும் வகுக்கக் கூடிய இந்த அபார நிர கற்பனா சக்தியை யிந்தனை, நியாயம் என்னும் வழக்கத்தில் ஓர் அளவுக்குள், ஓர் எல்லைக்குள் அடக்கிவைப்பது சாத்தியமான காரியமே. ஒருவன் ஒரு விருக்ஷத்தின் வாழ்க்கையினுடைய அந்தரங்கத்தைக் கண்டறிய வேண்டுமாயின் அவன் அவ்விருக்ஷத்துடன் விருக்ஷத் தோடு விருக்ஷமாய் ஒன்றுபட்டுக் கலந்து நின்று அதனுடைய அருகருதுப்பான உயிர் நிலையின் துடிதுடிப்பைக் கண்டறிதல் வேண்டும். இது கேவலம் முதற் படியேயாகும். அடுத்த படியாக, சிறிதளவும் பிசகுதல் இல்லாத சாஸ்திர பரிசோதனை வெறும் நிச்சயமான வாயிலாகச் சென்று காணக்கூடிய உண்மைகளுடன் அவன் தன் யுக்தியோசனைகளை வெட்டிய விஷயங்களை ஒத்திட்டுப் பார்க்க வேண்டும். இவ்வாறு ஒரு கட்டுக்குள்ளும் எல்லைக்குள்ளும் கட்டுப் படுத்தாமல் போனால் கற்பனா சக்தியானது காடும் மலையும் கால்விட்டோடிக் கடைசியாகப் பித்தனுடைய சித்தாந்தத்துக்கு அருகே சென்றுவிடும். ஒரு யந்திரக் குதிரை செய்து ஒரு வில்லை யழுத்தியவுடன் அது ஆகாயத்தில் வாயுவேகமாய்ப் பறந்து செல்லுமென மனதில் கற்பித்துக் கொண்டால் அவ்வளவு ஸந்தோஷமாயிருந்தபோதிலும் உண்மை யென்றுமாகாதல் மில் தேர்ந்து மாற்றுப் பார்ப்பதே நல்ல பரீக்ஷை

யில்லை யெனில், மனதானது தனது ஸாமான்ய புத்தி நிலையினின்று விலகிக் கடைசியில் உண்மைக்கும் வெறும் தோற்றத்திற்கும் வித்தியாசம் கண்டுபிடிக்க இயலாத பித்தனுடைய நிலை அல்லது மரண நிலைக்கு வந்துவிடுகிறது. பழைய நாட்களில் நமது புத்திமான்கள் அனைவரும் தாங்கள் சொல்வதெல்லாம் சரி யென்ற மூட சித்தாந்தஞ் செய்யாது, அவனவன் புத்திக் கெட்டியவாறு நிர்ப்பந்தமில்லாமல் தாராளமாய்த் தனக்குத்தானே தீர்த்தெரிய ஆராய்ந்தறிந்தான் மையைக் கண்டறியலாமென்ற ஸ்வதந்திர நிலையைப் பெரிதும் அப்பியசித்து வந்ததால் வேதங்கள் கூட உண்மை யெனும் உரைகல் பரீக்ஷையில் பழுது படுமானால் ஒழிக்கப்பட வேண்டுமென்று அவர்கள் பயமில்லாமல் முறையிட்டார்கள். எவ்விஷயமும் பூத பௌதிகத்துக்கு அதீதமான விஷயமன்று. அதிசயமெனவும் மாய வித்தை யெனவும் தோற்றுபவைகளெல்லாம் உண்மையில் தற்போது காரணம் விளங்காமையால் அவ்வாறு அழைக்கப்படுகின்றனவெனவும், விடா முயற்சியால் என்றைக்காவது அவைகள் சம்பந்தமான காரண காரிய தத்துவத்தைக் கண்டறியக் கூடுமென்பது அவர்களது திடநம்பிக்கை. இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் தக்ஷசில வித்தியாலயத்தில், ஜீவகனை அவனுடைய குரு அழைத்து, அக்கம் பக்கங்களிலுள்ள எல்லாச் செடி கொடிகளுடைய குறை குணங்களைக் கண்டறிந்து வாவென ஆக்ஞாபித்தபோது, அக் குருவானவர் பிரத்யக்ஷாநுபவ பூர்வமாய் உண்மையைக் கண்டறியும் இம் மார்க்கத்தைத்தான் அவலம்பித்தனர். பண்டைக் காலத்து நமது வீர பூமியில் கண் மூடி மௌனியாயிருத்தல் போற்றவில்லை. கர்மமார்க்கத்தைத்தான் பெரிதும் சிலாகித்துப் பேசினர்; அமர்க்களத்தில்தான் அஞ்ஞான அந்தகாரத்தை விலக்கிப் பரம் பொருளின் உண்மையை வெளிப் படுத்திய உபதேச மொழி இவ்வுலகத்தவர்க்கு அருளப்பட்டது.

மனதை ஒரு நிலை நிறுத்தல்

உண்மையைக் கண்டுபிடித்தற்கு இரண்டாவதாகிய அவசியகம் நாம் கொண்ட லக்ஷ்யத்தை அல்லது நோக்கத்தை அதே தியானமாய் ஏகாக்ர சித்தத்துடன் பின்பற்றி நிற்பதாகும். இங்குமங்கும் அலை பாய்ந்து கொண்டிருக்கும் மனதையுடையவர்களுக்கும், பேருக்கும் புகழுக்கும் பாடுபடுவார்களுக்கும், கைகொண்ட காரியத்தின் இறுதியைக் காண்பதென்பது இயலாத காரியம். குரு பரீக்ஷார்த்தமாய்ச் சிஷ்யனைப்பார்த்து 'மரத்தின் மீதுள்ள பறவையைக் குறிவைத்தடி,' என்று சொல்லிச் சற்று நேரத்துக் கெல்லாம், "மரத்தையும் பறவையையும் நீ காண்கிறாயா?" எனக் கேட்க, சிஷ்யன் 'ஆசாரியரே நான் குறி வைத்திருக்கும் பக்ஷியின் கண்ணைத் தவிர பிறிதொன்றையும் காண்கிலேன்,'' என்றனன். உடலில் உயிருள்ளளவும் கை விடாது, கொண்ட நோக்கத்தின் மீது கருத்தாயிருந்து, மனதின் முன் நிறுத்திக்கொண்ட பிம்பத்தைக் கண நேரமும் அசைய விடாமல் ஸதா தியானித்துக்கொண்டு, சற்றுநேரமாவது அயர்ந்தாவது இவ்வுலக ஞாபகங்களால் புத்தியைச் சலிக்கவொட்டாமல், மனதில் கொண்ட லக்ஷ்யத்தை உடும்பின்பிடியைப்போலப் பற்றி நிற்கும் வாஸ்தவமான சந்நியாச தருமத்தை நீங்கள் பின் பற்றி நிற்கினும் நிற்கலாம்.

கடைசியாக, ஆராய்ச்சித்துறையில் அபிவிருத்தியடைதற்கு வேண்டிய ஸாதனங்கள் இன்னும் இரண்டு உண்டு. ஒன்று சகலசாமக்கிரியைகளும் உபகரணங்களும் நிறைந்திருக்கும் ஆராய்ச்சிச் சாலை. இரண்டாவது அதி நுட்பமானவையும் அறிவைவும் பிசகுபாதவையுமான ஸாதன கரு

விகளை யூகித்தறிந்து அமைத்துக் கொள்ளும் ஆற்றலும் நைத்திறமும் வேண்டும். முப்பது ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது என்னுடைய ஆராய்ச்சிகள் ஆரம்பித்தகாலத்து, ஆராய்ச்சிச்சாலை யென்னும் நாமதேயத்துக்குக்கூட உரித்தாகும் படியான சரியான ஆராய்ச்சிச்சாலை யென்பதே கிடையாது. புதிய கருவிகள் அமைப்பதென் றாலோ, இந்திய சிற்பிகளுக்கு நூதன நுட்பமான கருவிகளமைப்பதற்குப் போதுமான அறிவும் நைத்திறமும் அடியோடு கிடையாதெனக் கருதப்பட்டது. இவ்விரண்டு குறைகளையுங் கண்டு நான் பின்வாங்கிவிடவில்லை; இக் குறைகளைச் சரியான வகையாய் நீக்கி நிவர்த்தி செய்து கொண்டு காரியத்தை முடித்தே தீருவதெனக் கங்கணம் கட்டிக்கொண்டேன். மனோ திடமும் மன வன்மையும் உண்டானால் கடைசியில் ஜயிக்கக் கூடாத கஷ்டம் ஒன்றுமே கிடையாதென்ற உண்மையை வெகு சீக்கிரத்தில் பிரத்தியக்ஷ பூர்வமாய்க் கண்டறியலானேன.

விடா முயற்சியுடன் உழைக்க உழைக்க, முடிப் பலமாய்த் தாளிடப்பட்டிருந்த கதவுகள் தாமே திறக்கலாயின. முதலில் அசாத்திய மெனத் தோற்றிய விஷயங்கள் எளிதில் சாதிக்கப்படலாயின. சாமானிய தொழிலாளிகள் கூடச் சரியாகப்படி பழக்கப்பட்டபோது நுண்ணிய சிற்பிகளாய் விட்டனர். உலகத்தில் வேறெந்த நாட்டினும் பல முறை பார்த்த பின்னர்கூட அவைகளைப் போன்ற கருவிகளைச்செய்யச் சாத்தியமில்லாதபடி அத்தகையமனது பிரமிக்கத்தக்க நுட்பமும் அதி தீவிர உணர்ச்சியும் பொருந்திய கருவிகளை நமது சிற்பிகள் செய்யலாயினர். என்னுடைய வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட பல் வேறு ஆராய்ச்சித்துறைகளில் பின்னும்ஆராய்ச்சி செய்வதற்கு அவசியமான யாந்தர கருவிகள் இப்போது இந்தியாவிலிருந்தேதான் வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட வேண்டியிருக்கின்றன.

இற்றைக்கு முப்பது வருஷங்களுக்கு முன் னரே மின்சார அலைகள் சம்பந்தமான பல கஷ்டமான விஷயங்கள் என்னுடைய ஆராய்ச்சிக் கிரகத்தில் கண்டுபிடிக்கப்பட்டு விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகங்கள் அனைத்தாலும் பெரிதும் போற்றப்பட்டுக் கொள்ளப்பட்டன.

நான் நிர்மித்த 'காலிஞ் ரிஸீவர்' என்னும் நூதன கருவியினால்தான் இத்தகைய ஆராய்ச்சிகள் செய்வதற்குச் சாத்தியமாயிற்று. கம்பியில்லாத தந்தி முறையில், விஷயங்களை வெகு தூரத்திலிருந்து பிசகாமல் சரியாய் அறிந்து கொள்ள இந்த 'காலிஞ்' கருவிக்கு நுண்ணிய கருவி வேறெதுவுங் கிடையாது. ஆராய்ச்சிச் சாலையில் ஓர் மூலையில் அபலர்கள் கண்ணுக்குத் தென்படாமல் நிச்சப்தமாய், வெகு பொறுமையுடன் கண்டு பிடிக்கப்படும் உண்மைகளின் பலனாக, உலகத்தாருக்கு எவ்வாறு சொல்லுதற் கரிய நன்மை விளைகிறது, அதி உபயோகமான சாதனங்கள் ஏற்படுகின்றன வென்பதைக் கவனியுங்கள்.

பிரபஞ்சம் தலை விரித்தாடும் வெறி யாட் டன்று தாளத்துடனும் ராகத்துடனும் இயங்கும் நடனமே யாகும்

இயற்கையில் நடைபெறும் விஷயங்கள் எவ்வளவு தாறுமாறான போட்டமாகத் தோன்றுகிறது, பாருங்கள்! உயிருள்ள வஸ்துவுக்கும் உயிரில்லாத வஸ்துவுக்கும் தம்முள் உள்ள பேதமும், தாவரங்களுக்கும் பிராணிகளுக்கும் உள்ள வித்தியாசமும் போன்ற கஷ்டமான ஆராய்ச்சி விஷயம் வேறெதுவுங் கிடையாது. விஞ்ஞான சாஸ்திரிகளுக்கு இந்த பேதங்கள் கடக்கமுடியாத பர்வதங்களாய்க் குறுக்கே நிற்கின்றன. இயற்கையில் நடைபெறும் விஷயங்களுள் எவ்வளவு தாரதம்மியங்கள் இருக்கின்றன.

இத்தகைய பேதங்களின் உண்மையை ஊன்றிப் பரிசீலித்து இவை நமக்குள் உள்ள சம்பந்

தத்தைக் கண்டறிந்து ஒன்றுக் கொன்று தொடர்ச்சியுடையதென ஸ்தாபிக்க முடியுமா? நமது பூமியானது வருங்காலத்தில் நமக்கு இப்போது தெரிந்திருக்கும் வகையான உயிர்கள் ஜீவித்திருக்க முடியாத உருக்குத் திரவ பதார்த்தமாயிருந்தது. இவ்வித உயிர் சஞ்சார மின்மையான நிலையிலிருந்து உயிர்கள் எவ்வாறு உதித்தன? பிரம்மாண்டத்தில் உலவும் தூளிகளால் ஜீவவித்து நமது பூமண்டலத்துட் கொண்டு வரப்பட்டதென்பர். அவ்வித சித்தாந்தத்தால் நமது சந்தேகம் எவ்வாறு நிவர்த்தி யாகிறது? பிரம்மாண்டத்துலவும் தூள்களால் வித்துக்கள் கொண்டு வரப்பட்டன என்பதால் நமது சந்தேகம் தெளிந்ததாகாது; ஒரு படிக்குப்பின்னுக்குப் போவதேயாகும்; நமது கேள்விக்குச் சமாதானமாகாது.

பிரகிருதி அல்லது இயற்கை என்பது என்றைக்காவது ஒரு நாள் மானுட ஆராய்ச்சியால் காரண காரியத் தொடர்ச்சியும், ஒழுங்கும் கண்டு பிடிக்க முடியாத சட்டதிட்டமும் பயனுமுடைய பிரபஞ்சமா? மனதைப்பிரமிக்கச்செய்யும்படியான பல்வேறு வகையினவாகி, மாறு பாடுகளுக்கிடையில் அடிப்படையான ஒரே ஒற்றுமையான, இயக்கத்தை இப்பூவுலக நிகழ்ச்சிகளுக்குள் உட்பொருளாகக் காணுவதற்குச் சாதனங்களான நமது புலன்களுக்குள்ள யுக்தி யோசனை, கற்பனையாதி மனோ சக்திகள் வேறெந்த நாட்டினுங் கிடையாது. இவ்வித ஆராய்ச்சியைச் செய்து உண்மையைக் கண்டறிதற்கு நமது பாரத கண்டமே ஏற்ற ஸ்தானமாயிருக்கிறது. கம்பியில்லாத தந்தி முறையில் சங்கதிகளைக் கேட்கும் ரிஸீவர் என்னும் யந்திரத்துடன் வேலை செய்து கொண்டிருக்கையில்தான், இவ்வித பிரபஞ்சத் தொடர்ச்சியின் உண்மை என் மனதுக்குள் உதயமாயிற்று. சங்கதிகளைக் கேட்கும் குணம் அந்த யந்திரத்தில் படிப்படியாய் பலவீன மடைந்து

கடைசியில் அடியோடு போய்விட்டது. படிப்படியாய்க் குறைந்து வந்ததை உணர்த்திய கோடும், சிரமம் அதிகரிக்க அதிகரிக்க நமது சரீர பலம் குறைந்து வருவதை உணர்த்தும் கோடும் ஒரே வித போக்கை யுடையன வாயிருந்தன. சற்றே யந்திரத்துக்கு ஓய்வு கொடுத்து மறுபடியும் இயக்கத் தொடங்கியவுடன் அதனுடைய கிரகண சக்தி அதிகரித்து, மறுபடியும் வெகு நேரம் ஓயாமல் வேலை செய்ததால் குறைவதாயிற்று. பல நாட்கள் ஓய்வு ஏற்படுமாயின், அதன் சக்தி இன்னும் அதிகமாய் விருத்தியடையுமென்று நினைத்துப் பரீக்ஷித்ததில், நெடுங்காலம் வேலை செய்யாது சோம்பியிருந்தமையால் அது மந்தமடைந்ததைக் காண எனக்கு அதி ஆச்சரியமாக விருந்தது. அவ்விதமாய் ஏற்பட்ட மந்த நிலையை அபூத சகாயத்திருவதை அல்லது மின் சார அதிர்ச்சியினாலாவதுதான் மாற்றி ஊக்கமிலைக்குக்கொண்டு வர முடிந்தது.

இந்நில ரவையன முறைகளால் அதனுடைய ஊக்கம் அளவுக்கு மிஞ்சி அதிகரிப்பதையும் சில விஷ வஸ்துக்களால் அடியோடு அந்த சக்தி நசித்து விடுவதையும் கண்டேன். உயிருள்ள பிராணிகளுக்கும் உயிரில்லா வஸ்துக்களுக்கும் இடையேயுள்ள எல்லைக்கல் அடியோடுமறைந்து, அவைகளுக்குள் உண்டான பொதுப்படையான குணங்கள் புலப்படுவதைக் காண நான் அதிக ஆச்சரிய மடைந்தேன். ஜட வஸ்துக்கள், செயலற்ற வஸ்துக்கள் என்பது பொய்யென நிரூபிக்கப்படலாயிற்று. இவ்வாறு பிரதி வஸ்துக்களினுள்ளேயும் உயிருக்குரிய சின்னங்கள் மறைந்து நின்று அவ்வுயிர் பின்னும் மலர்ச்சியடைவதற்கு வேண்டிய ஜீவ சக்தியுடன் கூடி விளங்குகின்றன.

செடிகளின் வாழ்க்கை ரகஸியம்

ஜட வஸ்துக்களுக்கும் பிராணிகளுக்கு மிடையில் உள்ள வெளியில் பலகோடி வகையினவாகிய

பட்சிகள், செடிகொடி முதலாதி உயிர்கள் உண்டு. ... களை மின்றி உணர்ச்சியுமின்றி இருப்பதாகத் தோற்றும் செடி கொடிகளினுடைய உயிர் நிலை அமைப்பிற்கும், அடிக்கடி அங்கங்களுடன் கூடி ஸ்பரிசமாதி உணர்ச்சிகளுக் கேற்ப விகற்பங்கள் காண்பித்து ஒரு நிலையில் நில்லாது சதா சலித்து அலைந்து கொண்டே யிருக்கும் புழு, பறவை, மிருகங்களாதி ஜீவன்களுக்கும் எவ்வித ஒற்றுமையும் இருக்க முடியுமென்று விஞ்ஞான நிபுணர்கள் நம்புவதில்லை.

இன்னொருசாரார் யாதொரு சாதனமும் ஆதாரமுமின்றிக் கேவலம் புத்தியூகத்தினால் மாத்திரமே செடி கொடிகளுக்கு மானுட குணங்கள் யாவும் உண்டெனச் சாதிப்பர். ஆனால் இவ்வாறு கற்பனா சக்தி விசேஷத்தால் சாதிப்பதென்பது விஞ்ஞான சாஸ்திர உண்மையாகாது. புழு பூச்சி ஜீவன்களுக்கும் புல்பூண்டு முதலிய ஜீவன்களுக்கும் யாதாவது ஒற்றுமையுளதாயின், அவ்வித ஒற்றுமையை இருவகை உயிர்களுக்கும் உயிர் நிலை, உயிர் இயக்கம் முதலியன ஒருவகைத்தே என்று பிரத்தியக்ஷபூர்வமாய்க் ... அநுமிக்கக் கூடும். ஆனால் நமது விஞ்ஞான சாஸ்திர ஞானம் விருத்தியடைவதற்கு நமது ஐம்புலன்களின் ஆற்றல் பூரண ஆற்றலாயிராமை ஒரு பெரிய தடையாகும். நாம் காதால் கேட்பது வெகு கொஞ்சமே; அநேக ஒலிகள் நமது காதுகளுக்குக் கேட்பதில்லை. நமது கண்ணுக்குக் கோசரமாகும் வஸ்துக்களும் வெகு சிலவே; ... யில் உலவும் ஒளிக் கதிர்க் கூட்டங்களுள் பலவும் மானுடக் கண்களுக்குப் புலப்படுவன ஒரு வகைக் கதிர்கள் மட்டுமேயாகும். பார்க்கப் போகுமிடத்து பல்வேறு ஒளிக் கதிர்களின் கூட்டங்கள் நிரம்பிய ஒளிக்கடலில் நாம் முக்காலும் முழுவதும் ... விசும் பார்வை யிழந்த குருடர்களாய்த் தவிக்கிறோம். கற்றது கைம்மண்ணளவேனும் நாம் கல்லாத ... ஒப்பிட்டுப் பார்த்தால் காணாதன உலகளவாகும். இப் புலன்களின் உணர்ச்சிகளைக் கொண்டு, மனிதனானவன் ... கொண்டு, ஒரு தரித்திர ... கொண்டு மனதுக்கு எட்டாத சமுத்திரத்தைக் குருடனைப் போலக் கடந்து விடலாமென மனப்பால் குடிக்கிறான். நமது ஆராய்ச்சி அதி வேகமாய் விருத்தியடையாததற்குக் காரணம் யாதெனில் செடி கொடிகளின் உயிர் இயக்கமானது நமது கண்களுக்குப் புலப்படுதலில்லா, மாத்திரமன்றி அந்தரங்கமான உட் பாகத்தில் நடைபெறுகிறதேயாம். (தொடரும்

உபகாரசிந்தையின் அளவே ஒருவன் உயிர் வாழ்பவனாகக் கருதப்படுவான். —காலைல்.

* * *

எனக்குக் கேடு விளைவிப்பவன் என்னையன்றி வேறெவனும் இலன். என் குற்றமே எனக்குத் துன்பம் விளைவிப்பது. —பெர்நார்டு முனி.

* * *

தான தருமங்கள் செய்வதை மானமாகக் கொண்டு நிறுத்தி வையாதே. நிறுத்தி வைப்பவன் உண்மையில் தன் பொருளையன்றிப் பிறர் பொருளையே தானம் செய்பவனாவான். —(...)

குரு கோவிந்த சிங்கன்:

அவன் தவமும் சோதனையும்.

—(0)—

[ராஜகோபாலன் கடிதங்களில் இதுவரை நாம் வெளிப்படுத்தியவற்றிற்கு மேல் வரும் கடிதங்கள் சாதாரண சம்பந்தமாயும் பொது விஷயங்கள் சம்பந்தமாயும் இருக்கின்றன. ஆகையால் அவற்றிற்கு ராஜகோபாலன் கடிதங்கள் என்ற தலைப்புப் பெயர் கொடுக்காமல், அவற்றில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்களுக்குரிய பெயரையே தலைப்புப் பெயராகக் கொடுத்து அவற்றை வெளிப்படுத்த இருக்கிறோம். தன் சம்பந்தமாக அவன் எழுதியிருக்கிற கடிதங்களை வெளிப்படுத்துகிற காலத்தில் மாத்திரம் ராஜகோபாலன் கடிதங்கள் என்ற தலைப்பை அச்சிடுவோம்.]

பஞ்சாப் நாட்டிலே யமுனா நதிக்கும் ஸட்லெஜ் நதிக்கும் இடையேயுள்ள பெருங் காடுகளுள் ஒன்றில் இன்று ஒரு பெரிய யாகம் நடக்கிறது. சென்ற ஒரு மாத காலமாக இந்த யாகத்தைப் பார்க்கவும், அதில் கலந்து கொள்ளவும் சீக்கியக் கூட்டங்கள்* வந்த வண்ணமாக இருக்கின்றன. முப்பது காதம் நாற்பது காதம் தூரத்திலிருந்து கூட மனிதர் சிரமம் பாராமல், அடுத்த கிராமத்தில் நடக்கும் உற்சவம் பார்க்கப் போவது போலவே, வந்து குழுமுகிறார்கள். எங்கு பார்த்தாலும் கோலாகலம், பெருங்கூச்சல் எதிரொலிப்பு, பரபரப்பு நிறைந்துகொண்டிருக்கிறது. நவயுகம் ஒன்று பிறக்கப் போகிறது—நமது இன்னல்கள் தீரும் காலம் வந்து விட்டது—தலைகள் ஓங்கி, ஒளியற்ற வாழ்வு முடிந்து, சாந்தமான, நிறைவுள்ள, புகழ் ததும்பிய வாழ்வு புலரப் போகிறது—என்ற உணர்ச்சிகள் மனிதர் இதயத்தில், மலர்களினுள்ளே தேன் வண்டுகள் சுழலுவது போலச் சுழன்று கொண்டிருக்கின்றன.

ஓர் கூட்டத்தார் யாக குண்டம் வெட்டுகிறார்கள். வந்து குவிகிற கூட்டத்தினருக்கு ஒரு குடிசைகள் பர்ணசாலைகள் கட்டுகின்றனர். அம்பாரம் அம்பாரமாக ஆகார சாமக்கிரிகள் சேகரிக்கப்படுகின்றன. விறகு போர் போராக அடுக்கப்படுகிறது. யாகம் நடக்க இருக்கிற வெளியைப் பலர் சுத்தப்புரவு செய்கிறார்கள். ஓர் ஏழையானவன் தன் ஒரே குழந்தைக்கு விவாகஞ்செய்வதாயிருந்தால் எவ்வளவு சிரத்தையுடன் வேலைபார்ப்பானோ அவ்வளவு சிரத்தையுடன் ஒவ்வொருவனும் இவ் யாகத்தை நடத்தி முடிப்பதற்காக வேலை பார்க்கிறான். ஒவ்வொருவனும் தன்னோடு வேலை செய்கிறவனிடம் அன்போடு பேசுகிறான். சீக்கியர்கள் அனைவரும் பரஸ்பரம் மன வேறுபாடின்றி உதவி செய்துகொள்ளுகிறார்கள்.

ஹரி நாம சங்கீர்த்தனம் அக் காடு எங்கும் எதிரொலிக்கிறது. 'அகால புருஷனுக்கு ஜயம்!' 'நமது குருவினுக்கு வெற்றி!' 'நமது தர்மம் வெல்க!' 'ஜய சண்டி!' என்ற கோஷங்கள் ஜனங்கள் வேலை செய்யும் இடங்களில் கூடக் கேட்கிறது. தெய்வ லோகத்தில்கூட இத்தனை ஒற்றுமை இத்தனை பக்தி, இத்தனை ஆனந்தம் இருக்குமோ என்பது சந்தேகமாக இருக்கிறது.

இத்தனை கோலாகலத்திற்கும், இத்தனை பரபரப்புக்கும், இதனைப் பெரு முயற்சிக்கும் காரணம் என்ன? இந்த யாகம் எதற்காக நடைபெறுகிறது? இந்த யாகத்தை நடத்தும் யஜமானன் யார்?

அநேக சீக்கியர்களுக்கு உபதேசம் செய்து கொண்டு, அக்கினி ஜுவாலையைப்போலத் தன்னைச்

* சீக்கியர்: சிக்கியர் என்று சொல்லப்படுபவர்.

காண்போர்க்குப் பிரமாண்டமாய்த் தோன்றி விஸ்வரூப விஸ்தரிக்கின்றனனோ, அவன் தான் இந்த யாகத்திற்கு யஜமானன். அவனது கண்களில் தீப்பொறி பறக்கின்றது. அவனது குரல் பேசுகிற விஷயங்களுக்குப் பொருந்த அமர்க்களம், எடுத்தும், தழுதழுத்தும், கம்பீரமாயும் மாறி மாறிக் கேட்கிறது. கேட்போர் அவனது வாயிலிருந்து வரும் மதுர வாணியிலேயே அமிழ்ந்து நிற்பது போலக் காணப் படுகிறார்கள். அவனுடைய ஒவ்வொரு வார்த்தையும் அவர்களுடைய இதயத்தில் ஊடுருவிச் சென்று அவர்களுக்குத் தெய்வ பக்தியையும், தர்ம விசுவாசத்தையும் ஊட்டுகின்றன.

அவன் தான் குரு கோவிந்தன் என்பான்!

அவனுக்கு முன் ஒன்பது குருக்கள் பஞ்சநாட்டிலுள்ள ஜனங்களுக்குத் தர்மோபதேசம் செய்து, அவர்களுக்குச் சிஷ்யர்—சீக்கியர்—என்ற நாமம் சூட்டி, அவர்களை ஓர் கோஷ்டியாக அமைத்திருந்தார்கள். நானகன் என்கிற மகான் இவர்களின் முதல் குரு. இந்துக்கள் ஞானத்தையும், பக்தியையும் விட்டுவிட்டு உயிர்ப் பலிகளிலேயே உழன்றுகொண்டிருப்பதைக் கண்டும், முஸ்லிம்கள் தங்கள் குருநாதனை முகம்மது நபி—ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்*— உபதேசித்த தர்மம், நியம ஒழுக்கம், எளிய வாழ்க்கை முதலியவைகளைக் கைநழுவ விட்டுப் படாடோபம், ஆசாரம், வெறிகொண்ட முதலிய பிற குணங்கள் நிரம்பியவர்களாயும், மசூதிகளில் சென்று ஆடம்பரமாகத் தொழுவதில் தவிர தெய்வ பக்தி இல்லாதவர்களாயும் இருப்பதைப் பார்த்தும், இவ் இரு வகுப்பினரும் பரஸ்பரம் துவேஷம் பாராட்டிக்கொண்டு, ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டு வருவதைக் கண்டு இரங்கியும், இந்துமதப் பிரபுவான நானக தேவன் கடவுள் ஒருவன் உண்டென்றும், அவனுக்கு மனிதராய்ப் பிறந்தவர் ஒவ்வொருவரும் புத்திரர்களானதால் ஜாதி மத வேறுபாடுகளை லக்ஷியம் செய்யாமல் மனிதர் ஒருவரை ஒருவர் சகோதரர்களாகப் பாவித்து நடக்க வேண்டும் என்றும், சகல ஜீவனும் அன்புமே தவிர மற்ற கர்மங்களெல்லாம் வீண் என்றும் போதிக்கத் தலைப்பட்டான். பெரும்பாலோர் அவனைப் பரிகசித்தார்கள். ஆனால் முஸ்லிம்களுக்குள்ளும் இந்துக்களுக்குள்ளும் கட்டமற்ற இதயமுள்ளவர்கள், ஞானிகள், உண்மையான பக்தி நிரம்பியவர்கள் அவனுக்குச் சிஷ்யரானார்கள். அவன் காலத்தில் நூறு சிஷ்யர்கள் கூடச் சேரவில்லை. அவனுக்குப் பின் சேர்ந்தவர்கள் கணக்கில்லாத பேர்கள் போன்ற இதய முன்னவர்கள்—தூய எண்ணமுள்ளவர்கள்—தெய்வ வாழ்க்கை வாழ வேண்டும் என்று போராட நிரம்பியவர்கள். ஆகவே அவனது காலத்திற்குப் பிறகு அந்தச் சிஷ்யர் குழாம், அவனுடைய பீடத்தில் அமர்ந்த அவனுடைய சிஷ்யனான அங்கதன் என்பவன் காலத்தில் அவனுடைய உபதேசத்தை மனதிற் கொண்டு அதை வாழ்ந்து வாழ்ந்து வந்தார்கள். அங்கதனுக்குப் பிறகு அமரதாஸ் என்பவன் குரு பீடத்தமர்ந்தான். இவன் தில் உபதேசத்தை விட்டும் பொழுது தேசமெங்கிலுமுள்ள அம்பு காரனைப் பற்றி மாம்பிள்ளையான ராமதாஸனைப் பீடத்தில் அமர்த்திவிட்டு இறந்தான். ராமதாஸன் காலத்திலிருந்து குருஸ்தானம் அவன் குடும்பத்தின் வழியே பரம்பரையாக இறங்கி வந்தது.†

கோவிந்தனுடைய பிதாவான தேக பஹாதூர் மகா தேசாபிமானி, மகா பக்தன், மகா வீரன். அவனுக்குத் தன் பிதாவான ஹரிகோவிந்தனிடமிருந்த பக்திக்கு அளவில்லை. ஹரிகோவிந்தனே சீக்கியரை க்ஷத்திரியராக்க முதல் முதல் பிரயத்தனப்பட்டவன். தேக பஹாதூர் தன் பிதாவின் வாட்களை அணியும் யோக்கியதை தனக்கு இல்லை என்று அவ் வாட்களைப் பய பக்தியுடன் வேறாக வைத்துப் பூஜை செய்தான். எங்கு பார்த்தாலும் குழப்பமாக இருந்த அக் காலத்தில் தேகபகதூர் சிஷ்ய வர்க்கத்தைச் சேர்த்துக்கொண்டு ஜனங்களை இம்சிக்கிற அரசாங்க உத்தியோகஸ்தரைத் தாக்கி ஜனங்களை ரக்ஷித்து வந்தான்.

அக் காலத்தில் ஔரங்கஜேப் டில்லி சக்கரவர்த்தியாக இருந்தான். இந்துக்களனைவரையும் முகம்மதியராக்க வேண்டும் என்கிறதே ஔரங்கஜேபின் பேராவலாக இருந்தது. அதைத் தவிர இந்துஸ்தானத்திலுள்ள சகல சுதந்திர அரசாங்கங்களையும் தனக்குப் பணிந்த அரசாங்கங்களாக்க வேண்டும் என்கிற அகாதமான ஆசை அவனுக்கு அளவு கடந்திருந்தது. இதனால் அவன் பிதாவும், அவனுக்கு முந்திய முகம்மதிய ராஜ்யங்களையும் தாக்கினான். தர்மாவேசம் நிரம்பி, தர்ம சுதந்திரத்தையும் ராஜீய சுதந்திரத்தையும் ஒருங்கே சம்பாதிக்க வேண்டும் என்று நிச்சயம் கொண்டு சிவாஜியின் தலைமையின் கீழ் நின்ற மகாராஷ்டிரர்களோடு அவன் இடைவிடாது போர் செய்து வந்தான். அக்பர் காலத்திலும், ஜஹாங்கீர், ஷாஜஹான் காலங்களிலும் வளர்ந்து வந்த இந்து முஸ்லிம் ஐக்கியம் இவன் காலத்தில் துண்டிக்கப் போய்விட்டது. அவனுடைய உத்தியோகஸ்தரும் மாகாணாதிபதிகளும் ராஜீய விவகாரங்களிலும் ஆட்சிமுறையிலுமே கூடச் சமயத் துவேஷத்தைப் புகுத்திப் பிரஜைகளை அல்லற்படுத்தலாயினர். சகல சமயங்களையும், தனக்குள் அடக்கிக்கொண்டு, சகல மார்க்கங்களையும் சமாசமாகப் பாவித்துக் கொண்டு தவத்தையும், பக்தியையும், ஒழுக்கத்தையும் மகடவுளை வழிபடும் பிரதானமான மார்க்கங்களாகத் தேர்ந்துகொண்டு சாந்தமான வாழ்க்கை வாழ விரும்பிய இந்துக்கள் ஆதாரைக் குழந்தைகள் போல ஆகிவிட்டார்கள். இஸ்லாம் என்ற பெயரை மாத்திரம் வைத்துக்கொண்டு ஏகாதிபத்திய அதிகாரிகள் சகல தர்மங்களுக்கும், அவர்கள் வழிபட்ட அந்த இஸ்லாம் தர்மத்துக்குமே கூட, வெறுப்பாக உள்ள கொடுமைகளை இழைத்து வந்தார்கள். இந்து ஜனங்கள் சகித்துச் சகித்துப் பார்த்துக் கடைசியில் தாங்கமாட்டாமல் எல்லா இடங்களிலும் அரசாங்கத்துக்கு விரோதமாகக் கிளம்பிவிட்டார்கள். கங்கை யமுனைச் சமவெளியில் சத்தியநாராயணர் என்ற சன்னியாசிக் கூட்டம் ஆயுதபாணிகளாகக் கிளம்பினார்கள். ரஜபுத்திரர்கள் மேற்கே அரசாங்கத்துக்கு விரோதமாகக் கொடி உயர்த்தினார்கள். மகாராஷ்டிரக் கனல் காட்டுத்தீ போல விந்திய மலைக்குத் தெற்கே பரவிற்று. சீக்கியர்களும் வடமேற்கே போர்க்கோலம் பூண்டு ஔரங்கஜேபின் தானிதார்களையும், அவர்களுக்கு உதவ வரும் படைகளையும் தாக்கி வந்தார்கள்.

ஆனால் ஔரங்கஜேபு மகா தீரன்; மகா சாமர்த்தியசாலி; ராஜ தந்திர நிபுணன்; ராஜரீக காரியத்திலும், தான் சமயம் என்று நினைத்த விஷயத்திலும் சிறிதும் சோம்பலில்லாதவன். அட்டிப் பேர்களுடைய வேலைகளை ஏக காலத்தில் பார்க்கக் கூடிய அவ்வளவு திறமை அவனுக்கு உண்டு. அங்கங்கே கிளம்பின கலகங்களைச் சாமர்த்தியத்தாலும் படைப் பலத்தாலும் அவன் அடக்கியே வந்தான். சீஷர்கள் நாளுக்கு நாள் பலிஷ்டர்களாவதைக் கண்டு அவர்களுக்கு விரோதமாக ஓர் வலிய படையை அனுப்பி வைத்தான். அப் படை சீஷர்களை முறியடித்துத் தேக பஹாதூரையும் சிறை செய்தது.

* அவனுக்குக் கடவுள் சாந்தி உண்டாகுக என்பது பொருள். நபி நாயகத்தின் பெயரைச் சொல்லும் போதெல்லாம் முஸ்லிம்கள் இந்த வாழ்த்தைச் சொல்லாமல் விடுவதில்லை.

† ராமதாஸனுக்குப் பிறகு அவன் குமாரன் அர்ஜுனன் குரு பீடத் தமர்ந்தான். அர்ஜுனனுக்குப் பிறகு அவன் பௌத்திர ஹரிராயி நாலிடம், அவனுக்குப்பிறகு அவனுடைய ஹரிகிருஷ்ணன் என்னும் ... குருக்களானார்கள். ஹரிகிருஷ்ணன் ஒப்பற வாலிபனாய் மாம்பை ... இறந்துவிட்டான். மரணத்தறுவாயில், புத்தகம் வைத்துவிட்டு ... தேடி இந்தச் சிஷ்யனைத் தமக்குக் குருவாய் ... ஹரிகோவிந்தனுடைய குமாரனுக்குச் சிஷ்ய பட்டாபிஷேகம் ... தேக பஹாதூர் குருவாக அபிஷேகம் செய்துவைத்தார்கள்.

தேக பஹதூர் தன் பத்தினியிடத்தும் மகன் கோவிந்தனிடத்தும் விடை பெற்றுக்கொள்ளுவதற்காக அவர்களுடன் சில வார்த்தைகள் பேச வேண்டும் என்று ஔரங்கசீப் சேனாபதியிடம் அனுமதி கேட்டான். அவனும் அதற்குச் சம்மதித்தான். வீரபத்தினியான கூஜரி தேவி புருஷனை இழக்கப் போகிறோமே என்று துக்கக் கடலில் ஆழ்ந்தாலும், அவன் உயிரினும் இனிய தர்மத்துக்காகவன்றோ தன் உயிரைப் பலி கொடுக்கிறான் என்ற எண்ணத்தினால் தேறி, வீரத் தமிழ்ப்பெண்டிர் போல அவனுக்கு விடை கொடுத்தாள்.

அப்பொழுது கோவிந்தனுக்குப் பதினைந்தே வயதாயிற்று. ஆனால் அவன் ஜன்மமுதல் தேக பஹதூரால் அறவாழ்க்கைக்கென வளர்க்கப்பட்ட தவப்புதல்வன். ஆகையால் அவன் தகப்பனுடைய வீரத்தையும் கலங்காமையையும் சிறிய வயதிலேயே வரித்துப் பெற்றுவிட்டான். தேக பஹதூரும் அவனை அழைத்து, முன்னாளில் ஹமில்கார் என்னும் கார்த்தேஜிய வீரன் தான் சாகும்பொழுது ஏழு வயதுள்ள தன் மகனைத் தன்னிடமழைத்துப் பிரமாணம் செய்யச் சொல்லியது போல, தர்மத்தை அழித்துப் பிரஜைகளை இம்சித்து வரும் ஔரங்கசீபின் அரசாங்கத்தோடு வெற்றி கிடைக்கும் வரையில் இடைவிடாது போர் செய்து தர்மஸ்தாபனம் செய்கிறேன் என்று பிரமாணம் செய் என்று கேட்டான். கோவிந்தன் சிறிதேனும் சந்தேகமில்லாமல், "அவ்வாறே செய்கிறேன் தந்தையே; தங்களை அந்தக் கொடுங்கோலன் கொல்லத்தான் போகிறான்; ஆனால் அறம் வெல்லும், பாவம் தோற்கும்! நான் என் பலத்தை வளர்த்துக்கொண்டு முகலாயர்களுடன் போர் செய்து தர்ம ராஜ்யத்தை ஸ்தாபிப்பேன்: பாரத தேசத்தில் தர்ம ஸம்ஸ்தாபனம் செய்வதைத் தவிர வேறு கடமை எனக்கில்லை என்று கூறித் தந்தையை உவகையுறும்படி செய்தான். அதர்மமும் கொடுங்கோலும் நாட்டில் இல்லாமற் போகும்படி அதற்கு முயல்வேன். தங்கள் ஆசீர்வாதத்தை எனக்குத் தந்தருள வேண்டும்!" என்று சொல்லி வணங்கினான். தர்மத்துக்காகத் தன்னையே பலிதானமாகக் கொடுக்கத் துணிந்த தேக பஹதூரின் முகத்தில் களிப்புக் குறி தோன்றிற்று. பாதத்தில் வீழ்ந்த தனயனை எடுத்து மார்புறத் தழுவி, "மகனே, நானகதேவனின் சக்தியும், அர்ஜுன தேவனுடைய வீரமும் என் தந்தை ஹரிகோவிந்தனுடைய சௌரியமும் உன்னுள்ளே ஒருங்கே சேர்ந்து அரும்பியிருப்பதைக் காண்கிறேன். இத் தெய்வ குணங்கள் அதி சீக்கிரம் மலருக! அவை இப்பழம் பாரத நாட்டில் அறத்தை நிலைநாட்டி, மறத்தினை அழித்தொழிக்கப் பயன் படுக! ஒன்று மாத்திரம் உன்னை வேண்டுகிறேன். என் உடலை முகலாயர் வசம் விட்டுவிடாதே. எப்படியாகிலும் அதைக் கொண்டுவந்து தக்கபடி ஈமக்கிரியைகள் செய்துவிடு!" என்று கூறி முடித்தான். கோவிந்தன் கண்களிலும், கூஜரி தேவி கண்களிலும், கண்ணீர் மல்கிப் பெருகிற்று. ஆனால் தர்மயுகத்தின் தொடக்கத்தில் நாங்கள் நிற்கிறோம் என்கிற உணர்ச்சி அவர்கள் இதயத்தை மறுபடியும் இரும்பாக்கியது. ஆகையால் துக்கத்தை யெல்லாம் அடக்கி வைத்துக்கொண்டு அவர்கள் குருவை ஆலிங்கனம் செய்துகொண்டு அவனைப் பிரிய உடன்பட்டார்கள்.

தேக பஹதூர் ஔரங்கசீபின் தர்பார் சென்றான். அங்கே ஔரங்கசீப் அவனை இஸ்லாம் மதத்தைத் தழுவச் சொன்னான். தேகபஹதூர் "என் உடம்பைத் துண்டு துண்டாக்கினாலும் என்னுடைய சமயத்தை விட்டு இஸ்லாம் சமயத்தை அங்கீகரிப்பேனா" என்று கர்வத்தோடு மறுமொழி சொன்னான். கடைசியாக ராஜாக்கினைப்படி தேக பஹதூரைச் சிரச்சேதம் செய்து விட்டார்கள்.

சிஷியர் கோவிந்தனைக் குரு பீடத்தில் ஏற்றி வைத்தார்கள். கோவிந்தனுடைய முதற் கடமை தன் பிதாவின் சரீரத்தை மீட்டு வந்து அவனுக்குத் தகனக்கிரியைகளெல்லாம் செய்து முடிப்பதாயிற்று. ஏழைச் சிஷியர்கள் தைரியமாகக் கொலைக்களம் சென்று ஆத்ம ஹத்திகள் வரை அரிய தியாகங்கள் செய்து, தேகனுடைய உடலை மீட்டு வந்தார்கள். கோவிந்தன் பிதாவுக்குச் செய்யவேண்டிய கடன்களை முடித்துவிட்டு, முகலாய அரசாங்கத்தை வீழ்த்தும் உபாயத்தை ஆராய்வதற்காகச் சிஷியர்களுடன் ஆரணியத்துக்குள்ளே சென்று விட்டான்.

கோவிந்தன் பதினைந்து வயது பாலன். அவன் தலையில் தகப்பனுடைய கொலையைப் பழிவாங்கும் பாரமும் பாரத நாட்டினின்று கொடுங்கோலரசை ஓட்டும் பாரமும் விழுந்தன. இந்தக் கடமைகளை நிறைவேற்றும் ஆற்றலைச் சம்பாதிப்பதற்காக அவன் இருபது வருஷ காலம் காடுகளில் சஞ்சரித்துக்கொண்டு கல்வி கற்றும் கடுந் தவம் புரிந்தும் வந்தான். தேக பஹதூரின் ஆசீர்வாதம் அவனுக்குப் பரிபூரணமாகப் பலித்தது. நானக தேவனுடைய பக்தியும் நிஷ்டா சக்தியும் அவனுக்குச் சித்தித்தன. ஆயுதப் பயிற்சியில் தனக்கு யாரும் இணையில்லை என்று சொல்லும்படி ஒவ்வோர் ஆயுதத்தையும் கையாளுவதில் அவன் நிபுணனாகிவிட்டான். அவன் விடும் அம்பு ஒன்றே கால் மைல் தூரம் செல்லும் என்று சிஷியர் வியப்புடனும் பெருமையுடனும் சொல்லுகிறார்கள். குதிரைகளைப் பழக்குவதிலும் குதிரை மீது சலியாமல் சவாரி செய்வதிலும் அவனுக்கு இணை அவன்தான். அவன் முக்கியமாக வழிபட்ட உபாசனா மூர்த்தி சர்வலோக சரண்யையும், 'இஷ்ட காம்யார்த்தப் பிரதாயினியுமான சண்டி தேவியாவள். அவன் ஸம்ஸ்கிருத பாஷையிலும் பாரஸி பாஷையிலும் ஹிந்தியிலும் மகா பண்டிதனாகி ஹிந்தியில் மகா கவியாகவும் ஆகிவிட்டான். அவனது சண்டி ஸ்தோத்திரம் உயிரற்றவருக்கும் உயிர் கொடுக்கும் வன்மை வாய்ந்தது. தனது ஆத்ம சரித்திரத்தைக் காவியமாகச் செய்து, அதற்கு விசித்திர நாடகம் என்று பெயர் கொடுத்து, எழுத எழுத அதைப்படித்துத் தன் சிஷியர்களுக்கு வீராவேசத்தையும் தர்மாவேசத்தையும் அவன் கிளப்பி வந்தான். அவனுக்குத் தைரியம் கொடுக்க ஔரங்கசீபை ஆறு போர்களில் வென்று சத்திரபதி என்னும் மகுடம் சூடிய சிவாஜியின் உதாரணமும், சிவாஜி இறந்த பிறகும் மகா ராஷ்டிரரின் தீரத்தைக் குன்றவிடாமல் பாதுகாத்த ராஜாராமன், தாராபாயி இவர்களுடைய உதாரணமும் விளங்கின. தவம் செய்யச் செய்ய, உபாசனை புரியப் புரிய, அவனுடைய தைரியமும் நம்பிக்கையும் வளர்ந்தன. "அர்ஜுனன் வில்லாளரானார்க்கெல்லாம் முதல்வனான இரகசியத்தை எனக்குக் கற்பிக்க வேண்டும், அன்னையே" என்று மகா காளியை வேண்டி வேண்டியே அவனது வில் திறமும் போர்த் திறமும் வளர்ந்தன.

கற்கவேண்டிய வெல்லாம் கற்ற பிறகு ஆற்ற வேண்டிய தவங்களை யெல்லாம் ஆற்றிய பிறகு, குருகோவிந்தராய் தனது முப்பத்தைந்தாவது வயதில் மகா காளியின் பிரசாதத்தைப் பெறுவதற்காக ஓர் மகா யாகம் செய்ய யத்தனித்தான். அந்த யாகம்தான் நாம் இச் சரித்திரத் துவக்கத்தில் வர்ணித்த யாகமாகும்.

யாக தினம் கடைசியில் விடிந்தது. வந்த ஜனங்களெல்லாம் யாககுண்டத்தைச் சுற்றிச் சூழ உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். பண்டிதர்கள் சர்வ சக்தியை நோக்கி ஆகுதி கொடுத்த வண்ணமாக இருக்கிறார்கள். குரு கோவிந்தன் உயர்வான ஸ்தானத்தில் உட்கார்ந்து கொண்டு சக்தியைத் தியானித்த, அவனுடைய அருளை

வேண்டிய வண்ணமாக யிருக்கிறன். பார்ப்போர் கண்ணுக்கு அவனே சக்தியமயமாக விளங்குகிறான். அருகில் ஏற ஏற, அர்த்த புஷ்டியான மந்திரங்களின் உச்சாரணம் கேரவிக்கக் கேரவிக்க கோவிந்தன் சமாதியை அடைந்து விட்டான். எல்லோரும் இமை கொட்டாமல் பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். கடைசியில் குருவானவன் சமாதியி லின்று விழித்து, "மகா சக்தியின் அருள் கிடைத்துவிட்டது! இவ்வாளில் அவள் 'சாந்நித்தியமாக நிற்கிறேன்' என்று எனக்கு வாக்குக் கொடுத்துவிட்டாள்! சிஷியர்களே, இனிப் பயத்தை விடுங்கள்! அதர்மம் உடைகிறது! தர்மம் தலைதூக்கிவிட்டது! உங்களுடைய தியாகம்தான் பாக்கி, என்னுடைய தியாகம்தான் குறை; இவைகளை நாங் கொடுப்பினும் காளி நமக்கு வெற்றியைத் தந்திடுவாள் பாரத நாட்டைக் காத்திடுவாள்! தர்மத்தை இப் புண்ணிய பூமியில் மறுபடியும் நிலைநாட்டி விடுவாள்!" என்று கம்பீரமான ஸ்வரத்தில் பேசினான்.

ஜனங்களது அச்சமும் ஐயமும் பறந் தோடிப் போயின. அவர்களுக்குத் தைரியமும் நம்பிக்கையும் ஒருங்கே பிறந்தன. ஆனந்தக் கூத்தாடினார்கள். பரவச மானார்கள். சத் ஸ்ரீ அகால்! என்று சிங்க நாதம் செய்தார்கள்.

குரு கோவிந்தன் ஜனங்களது உற்சாகத்தைக் கண்டு உள்ளம் பூரித்தான். ஆனால் இவர்களுள் எத்தனை பேர் கடைசிவரையில் தியாக மூர்த்திகளாக இருந்து, கலக்கம் வந்த காலத்தும், தோல்வி வந்த காலத்தும் தாங்கி நின்று, வெற்றியைக் காணு மளவும் பின் வாங்காமற் போர் புரிவார்கள் என்ற ஐயம் அவன் களிப்பைச் சற்றுக் குறைத்தது. ஆகையால் அவர்களுடைய தருதியை அடுத்த நாள் சோதித்த பிறகுதான் தான் அவர்களது தைரியத்திலும் உற்சாகத்திலும் பூரண நம்பிக்கை வைக்க முடியு மென்று சொல்லி அவர்களைத் தன் கூடாரத்தி னருகே அடுத்த நாள் வந்து கூட ஆக்ஞாபித்துவிட்டு எல்லோரையும் விடை கொடுத்தனுப்பிவிட்டான்.

அடுத்த நாள் மறுபடியும் ஜனங்கள் கூடினார்கள். ஆனால் இப்பொழுது உற்சாகத்தின் கிளர்ச்சியில்லை. எல்லோரும் குரு மஹாராஜன் என்ன சோதனை செய்யப் போகிறானோ, அந்தச் சோதனையில் நாம் தேறுவோமோ, என்று பயமும் ஐயமும் நிரம்பியவர்களாக உட்கார்ந்துகொண் டிருக்கிறார்கள். எல்லோரும் வெகு நேரம் காத்திருக்கவில்லை. கோவிந்த குரு உயிர் பெற்று இலங்கும் அக்னி ஜ்வாலையைப் போல நடந்து வந்து பீடத்தில உட்கார்ந்து, பாரத நாட்டின் நிலைமையைப் பற்றி உருக்கமாக, ஆவேசத்தோடு, உபன்னியாசம் செய்தான். முகலாயரின் ஆளுகையின் கீழ் ஏழைகள் படுகிற பாட்டையும், ஹிந்து தர்மம் வீழ்ந்திருக்கிற வீழ்ச்சியையும், ஹிந்து ஜனங்களின் சிறுமையையும் வர்ணிக்க வர்ணிக்க ஜனங்கள் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டார்கள். கடைசியில் எழுந்திருந்து நின்று கொண்டு, "சிஷ்யர்களே! இந்த நிலைமையை மாற்ற வேண்டும்! உங்கள் குருமகாராஜாவான பாகவ தோத்தமனை தேக பலத்தால் சிரச் சேதம் செய்யத் துணிந்த அரசாங்கத்தை வேரறுத்து விடவேண்டும்! மஹா காளி நமக்குச் சக்தியும் பலமும் தருகிறேன் என்று வாக்களித்து விட்டாள்; ஆனால் அவளுடைய அருளுக்கு நாம் பாத்திர மாகவேண்டுமானால் நம்முட் பலர் தங்கள் உயிரைத் தியாகம் செய்து விட ஆயத்தமாக இருந்தல் வேண்டும்; சண்டி தேவி இரத்த பலி கேட்கிறாள்: உங்களுள் யார் பலியாக முன் வருகிறீர்கள்?" என்று குரு கோவிந்தன் ஆவேசத்தோடு கேட்கிறான். யாரும் வாய் திறக்கவில்லை, எல்லோரும் தரையைப் பார்த்துக்கொண்டும், ஒருவன் முகத்தை

ஒருவன் பார்த்துக்கொண்டும் பேசாமல் மௌனம் சாதிக்கிறார்கள். அஷ்ட சம்ஹாரம் செய்ய எழுந்திருக்கிற கல்கியைப் போலச் சிவந்த கண்களுடனே குரு கோவிந்தன் "இத்தனை ஆயிரம் ஜனங்களுக்குள்ளே, பாரத நாட்டுக்குச் சற்று முன்னேதான் பரிந்து கொண்டழுத இந்த அன்பர் கூட்டத்திலுள்ளே, பாரத பூமியின் மீது சண்டி தேவியின் அருள் பிறப்பதற்காகத் தன் உயிரைப் பலி கொடுக்கும் புண்ணியவன் ஒருவன் கூட இல்லையா?" என்று ஆயாசத்துடன் கேட்டான். அப் பொழுதும் நிச்சப்தம். ஓர் ஊசி தரையில் விழுந்தால் கூட அவ்வொசை வெகு தூரம் கேட்டிருக்கும். சிஷியர் கூட்டத்தில் ஒருவனேனும் எழுந்திருக்கவில்லை— குருவின் முகம் கண்டு கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. "சரி, நம்மால் ஒன்றும் சாத்தியமில்லை: ஹிந்து ஜாதி கரையேறுவதற்காகத் தன் உயிரைப் பலி தானமாகக் கொடுக்கக்கூடிய மகா பிரபு இக் காலத்தில் — இக் கூட்டத்தில் — ஒருவனும் இல்லை போலும் மகா சக்தியினிடம் என்னை ஒப்பித்துவிட்டு நானே பலியாகிறேன்! பாரத பூமியே! சிஷிய ஜனங்களே! ஹிந்து ஜாதியே! உங்கள் இதயத்துக்குள் சௌரியத்தை உண்டாக்கத் தகுந்த ஆற்றல் படைத்த குரு இனி பேணும் உங்களுக்குள் தோன்றட்டும்! நான் உங்களிடம் விடை பெற்றுக்கொள்கிறேன்!" என்று சொல்லிக்கொண்டு கோவிந்தன் மேடையினின்று இறங்கக் காலடி எடுத்துவைத்தான். அச் சமயத்தில் கந்தை உடுத்திக் கொண்டிருந்த ஒருவன் எழுந்திருந்து முன் வந்து, "சுவாமி!, மகா பிரபு! தேவரீர் செல்ல வேண்டாம்: அடியேன் ஓர் ஷைழக்கத்திரி:* என் பெயர் தயாராம்: என் தேகம் சண்டி தேவிக்கு உகந்ததானால் அதை இப்பொழுதே பலியாகக் கொடுக்க நான் ஆயத்தமாக இருக்கிறேன்," என்று கூறிக் கை கூப்பிக் கொண்டு நின்றான். கூடியிருந்த சிஷியர்கள் அவனுடைய தியாகத்தைக் கண்டு வியந்து கொண்டும், தங்களுக்கு அவனுடைய தீரமும் தியாகமும் வாய்க்கவில்லையே என்று நாணிக்கொண்டும், இந்த அற்ப மனிதனைக் குரு ஏற்றுக் கொள்ளமாட்டான் என்று தமக்குள் சொல்லிக் கொண்டும், இன்னும் பல் வேறுபட்ட மெய்ப்பாடுகள் நிரம்பிய சித்தத்தோடு, மேடை மீது மேலே என்ன நிகழப் போகிறது என்று கவனிக்கலானார்கள். கோவிந்த ராயி ஆனந்த பரவசமாயினான். அங்கு கூடியிருந்தவர்களில் ஒருவனேனும் தன் உயிரைத் திரணமாக நினைந்தானே என்று களிப்படைந்தான். ஏழை யென்று எல்லோராலும் இகழப்பட்ட ஓர் மனிதனே இத் தகைய தியாகத்துக்கு முதன் முதல் உடன் பட்டான் என்று தெரிந்து அவனுக்கு ஏழைகளிடத்தில் இருந்த அன்பையும் நம்பிக்கையையும் நூறு மடங்கு பெருகச் செய்தது. "மகனே! இங்கு கூடியிருக்கிற அனைவரிலும் நீயே உயர்ந்தவன் என்று உனது தியாகமும் தீட சித்தமும் உலகினுக்குக் காட்டிவிட்டது. உனது ஆக்கம் உன் தியாகத்திலுங்கும் உயர்வைத் தந்து விட்டது. உன் மகா புனிதமான உடலை மகா காளிக்கு அர்ப்பணம் செய்! என்னுடன் வா!" என்று சொல்லிக்கொண்டு குரு அவனை அழைத்துக்கொண்டு கூடாரத்திற்குள் சென்றான்.

இந்தத் தியாகமும் குருவின் நிஷ்களங்கமான வார்த்தைகளும், தாங்கள் மேலானவர்கள் என்ற அபிமானமும் அகங்காரமும் நிறைந்திருந்த ஜனங்களுடைய கண்ணைத் திறந்துவிட்டன. பிறப்பன்று மேன்மையைத் தருவது, செல்வமன்று பெருமையைத் தருவது, மற்று, தியாகமும் தன் னடக்கமும் தீரமும்தான் மனிதனை உயர்த்துகின்றன, என்ற உணர்ச்சி அவர்கள் மனதில் அரும்பலாயிற்று. அதற்குள்ளும் கோவிந்த குரு சக்தி வெறி கொண்டவன்

* க்ஷத்திரியர்கள் இழிவாகப் பாவிக்கிற ஓர் ஜாதி.

போல இரத்தம் ஒழுகும் வாளை ஏந்திக்கொண்டு பாசறை புறநின்று வந்து மேடை மீது மறுபடி ஏறி, "மகா காளிக்கு இந்தப் பலி போதாது: தங்கள் உடலைப் பலியாகக் கொடுக்கத் தயாராக உள்ள இன்னும் நால்வர் வேண்டும்: யார் வருகிறீர்கள்?" என்று கேட்டான். அவையில் மறுபடியும் மௌனமே. ஆனால் சற்று நேரத்துக் கெல்லாம் தாறுப்தாஸ் என்கிற பஞ்சாபு நாட்டு நாவிதன் வந்து தன்னை ஸ்வீகரித்துக்கொண்டு பலி கொடுக்க வேண்டுமென்று சொன்னான். அவன் வந்து நின்ற கையோடு இன்னொருவனும் எழுந்து முன் வந்து, "அடியேன் ஓர் ஏழைப் பிராமணன், தக்ஷிண தேசத்தான்: என் பெயர் தர்மன்: நான் தீர்த்த யாத்திரை செய்வதற்காக என் நாட்டை விட்டுப் புறப்பட்டவன்: நம் நாடு தற்போதிருக்கிற மகா கோரமான நிலைமையில் ஆயிரம் காசி யாத்திரைகளை விட, நம் ஜாதிக்குப் பலமும் வெற்றியும் வருவதற்காகத் தங்கள் ஆக்ஞையைப் பூர்த்தி செய்து சண்டி தேவிக்கு இவ் வுடலை அர்ப்பணம் செய்வதே மேலான தர்மம் என்று தேவரீருடைய திருவாக்கும், இந்தப் புண்ய புருஷர்களுடைய அரும் பெருந் தியாகமும் எனக்கு அறிவுறுத்திவிட்டன. அடியேனையும் ஸ்வீகரித்துக் கொள்ளத் திருவுளம் கொள்ள வேண்டும்!" என்று கூறினான். அதற்குக் குரு, "புத்திரர்களே, நீங்கள் புண்ணிய சீலர்கள்! உங்களுடைய புகழ் இந்தப் பூமண்டலம் உள்ளளவும் ஒளி வீசிக்கொண்டிருக்கப்போகிறது. செல்லுங்கள் பாசறைக்குள்ளே!" என்று சொல்லி அவர்களையும் அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

சற்று நேரமாயிற்று. மறுபடியும் உருவிய வாளுடன் பெருகிய இரத்தமுமாக வெளி வந்து இன்னும் யார் வருகிறீர்கள் என்று குரு கேட்டான்.

மனிதனுக்குப் புகழும் கீர்த்தியும் இனிதாக இருக்கிறது. தியாகத்தின் ஒளியை மனிதன் நன்கு உணருகிறான். தான் தியாகியாக விளங்க வேண்டும் என்று அடிக்கடி தீர்மானித்துக்கொள்ளுகிறான். ஆனால் தியாகம் அழைக்கிற காலத்தில் தன் இரத்தத்தைக் கொடுக்கவேண்டிய சமயம் வந்துவிட்ட காலத்தில், சுக சௌக்கியங்களை விட வேண்டிய நேரம் வரும்போது, பஞ்ச பூதங்கள் பின் வாங்குகின்றன. உடலும் மனமும் தவிக்கின்றன. "இந்த முறை என்னை மன்னித்து விடேன்! அடுத்த முறை பின் வாங்காமல், மறு வார்த்தை பேசாமல் தீக்கனல் நெருப்பில் வேண்டுமானாலும் வீழ்கிறேன்," என்று சொல்லிக் கெஞ்சுகின்றன. என்னே மனிதனுடைய பலவீனம்!

ஜனங்கள் மீண்டும் மௌனக் கடலிலேயே ஆழ்ந்தனர்.

அதைக்கண்டு "இத்தனை ஆண் பிள்ளைகள் கூடியிருக்கின்றீர்களே, இத்தனை சிஷ்யர் கூடியிருக்கின்றீர்களே, இத்தனை பிராமணரும் க்ஷத்திரியரும் இங்கு உட்கார்ந்திருக்கிறீர்களே, உங்கள் வீரமும் பெருமையும் ஓய்ந்து போயிற்றோ? அறமும் தியாகமும் நம் நாட்டை விட்டே போய்விட்டனவோ!" என்று குரு உரமாக வினவினான்.

ஆனால் பெரியோரெல்லாம் பெரியோர் அல்லர்! சிறியோரெல்லாம் சிறியோர் அல்லர்! "நாங்கள் சூத்திரர்கள்: இருப்பினும் தேவரீர் திருவுளமானால் வருகிறோம்: எங்கள் தியாகத்தைச் சண்டி தேவி ஏற்றுக் கொள்ளட்டும்!" என்று சொல்லிக்கொண்டு ஹிம்மதன் என்னும் ஜகந்நாத க்ஷேத்திரத்து வியாபாரியும் மோஹனன் என்னும் ஹஸ்தினாபுரத்து ஜாட்டனும்* ஒருவன்

* வேளாளன்

பின் ஒருவனாக முன் வந்தார்கள். குரு அவர்களையும் அதே மாதிரி அழைத்துக்கொண்டு உள்ளே சென்றுவிட்டு, இரத்தம் கசியும் வாளோடு திரும்பி வந்து, "குழந்தைகளே உங்களுக்குள் நின்று தோன்றிய இவ் வைந்து மகா புருஷர்களுடைய வீரமும் தியாகமும் நமக்கு என்றும் அழியாத உதாரணமாக இருக்கப் போகிறது! சண்டிதேவி திருப்தி யடைந்துவிட்டாள்! இனிச் சென்று நாளை இங்கேயே கூடலாம்!" என்று சொல்லி விடை கொடுத்தனுப்பிவிட்டு மறுபடியும் கூடாரத்தினுட் பிரவேசித்தான்.

உயிர்ப் பலி கொடுக்க முன் வந்த ஐவரையும் குரு காளிக்குப் பலிதானமாக வெட்டிவிட்டான் என்றே சிஷ்யர் நம்பியிருந்தார்கள். வந்த இவ் வைவரும் குரு தங்களைப் பலி பீடத்தில் வைத்து வாளால் வெட்டிக் காளிக்குப் பலி கொடுக்கப் போகிறான் என்று நம்பித்தான் முன் வந்தார்கள். ஆனால் குருவின் உத்தேசம் அவ்வாறு இல்லை. தன் சிஷ்யர்களுக்குள் அச்சமின்றித் தம் இரத்தத்தைக் கொடுக்க ஆயத்தமாக ஓர் ஐவரேனும் இருக்கிறார்களா என்று பார்ப்பதே அவன் கருத்து. ஆகையால் தியாகிகள் வர வர அவர்களை ஒவ்வொருவராகக் கூடாரத்தினுள் கொண்டுபோய் ஓர் இடத்தில் இருத்திவைத்துவிட்டு, ஓர் ஆட்டையே பலி கொடுத்து, அந்தப் பலி கொடுத்த வாளுடனேயேதான் அவையில் வந்து மற்றொரை அழைத்தான். ஆகவே சிஷ்யர் குழாம் கலைந்த பிறகு கூடாரத்தினுள் குரு சென்றபோது அவ் வைந்து பேர்களும் பய பக்தியுடன் எழுந்து குருவை வணங்கினார்கள். குருவும் அவ் வைவரையும் ஆலிங்கனம் செய்துகொண்டு, "என் குழந்தைகளே! நீங்களே படுகுழியில் வீழ்ந்து தத்தளித்துக் கொண்டிருக்கிற நம் நாட்டையும், நானகனும் அர்ஜுனனும் தேக பஹதூரும் நமக்குக் காட்டியுள்ள சனாதனமான தர்மத்தையும் காக்க வந்த புண்ணிய புருஷர்! நீங்கள் நாம் கால்ஸா— மூல புருஷர் கோஷ்டி; இந்தக் கால்ஸா இனி என்றும் அழியாது. உங்களுடைய உதாரணத்தைக் கண்டு நம் சிஷ்யர் அனைவரும் மகாவீரர் ஆகப் போகிறார்கள்: அவர்களுக்கு இனி ஜாதி கிடையாது, குலம் கிடையாது: நாம் எல்லோரும் இனி சிங்கன் என்கிற பட்டத்தையே வைத்துக் கொள்வோம்: அகால புருஷனுக்கு நிவேதனம் செய்துவிட்டுப் பிரசாதத்தை நம் கால்ஸாவின் சன்னிதியில் எவன் பயபக்தியோடு சாப்பிட்டு நம் தர்மத்தை அங்கீகரிக்கிறானோ அவன் தன் பழைய ஜாதியை நீங்கிச் சிங்கனாகிவிடுகிறான். நம் சிங்க கோஷ்டி முகலாயரை வென்று அறத்தை நிலைநாட்டப்போகிறது: வாரீர் முதன் முதலாக நம் புதிய சம்ஸ்காரத்தைத் தொடங்குவோம்!" என்று சொல்லிக்கொண்டு, பானகம் செய்து, அதில் தன் வெற்றி வாளைத் தோய்த்து, அஜனனும், அனந்தனும், அகாலனும் இருக்கும் தனிப் பெருங்கடவுளுக்கு அதை அர்ப்பணம் செய்து, அவ் 'அமிருத'த்தை அச் சிஷ்யர்களுக்கும் கொடுத்தான். அவர்கள் அதைப் பானம் செய்து முதல் கால்ஸா கூட்டம் ஆகிவிட்டார்கள். கோவிந்தனும் அவர்களை அந்த அமிருத பானத்தைத் தனக்குத் தரச் சொல்லித் தானும் அதை அருந்தி, ஐந்து சிஷ்யர் எங்கு கூடியிருந்தாலும் அங்கு தான் உயிரோடிருக்கையிலும் இறந்த பிறகும் சாந்நித்தியமாகவே இருந்து, அவர்கள் மனம் வீரத்தையும் சத்தியத்தையும் தர்மத்தையுமே நாடும்படி செய்வேன் என்று பிரதிக்ஞை செய்தான். தன் பெயரைக் கோவிந்த ராயி என்பதற்குப் பதிலாகக் கோவிந்த சிங்கன் என்று மாற்றி வைத்துக்கொண்டு அவர்களுக்குப் பின் வருமாறு உபதேசம் செய்தான்:

"இனி நீங்கள் எல்லோரும் சிங்கங்களாகி விட்டீர்கள்! எந்தக் குலத்தில் பிறந்தவர்களாக இருந்தாலும் இன்று முதல் நீங்கள் அனைவரும்

க்ஷத்திரியர்கள்: ஆகையால் ஒவ்வொருவனும் சிங்கன் என்ற பெயரைப் பட்டப் பெயராக வைத்துக் கொள்ள வேண்டியது; நீங்கள் எதையும் கண்டு அஞ்சக் கூடாது; உலகம் அனைத்திலும் எல்லையற்ற பரம் பொருள், பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமும் இன்றி, தொட்ட தொட்ட இடம் தோறும் இருந்துகொண்டு, நம்மீது எல்லையற்ற கருணையைப் பொழிந்து கொண்டே நமக்குச் சுகம் என்று தோன்றுமவற்றையும் துக்கம் என்று தோன்றுமவற்றையும் அளித்து கொடுத்துக்கொண்டு வரும்போது நாம் எதற்காகப் பயப்படுவது! உங்களுடைய கர்மங்களை—உங்களுடைய கடமைகளை—தைரியமாக, தீவிரமாக, மறதியின்றி, சோம்பலின்றி முடித்துப் பாரத தேசத்தைச் சுதந்திர நாடாக்கி, அதில் தர்மராஜ்யம் நிலைப்படி செய்வதே உங்கள் கர்த்தவ்யம். அதற்காக நீங்கள் பொன்று பிள்ளைகளையும், குடும்ப சுகங்களையும், தனங்களையும், பூமிகளையும் இழக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். நீங்கள் முகலாயருடன் செய்யப் போகும் போரில் வசைபுறமும், சிறை புகலும், சித்திர வதைகள் செய்யப்படலாம். இக் கஷ்டங்களைச் சந்தோஷத்தோடு நீங்கள் ஏற்றுக் கொண்டால்தான் அகால புருஷனுடைய கிருபை உங்களுக்குச் சித்திக்கும்: தர்மத்துக்காகச் சகலத்தையும் தியாகம் செய்தவர்கள் என்ற புகழ் உங்கள் பெயருக்கு என்றும் தந்தாத ஒளி தந்துகொண்டிருக்கும். இந்தச் சத்தியங்களை மற்றோருக்கும் உபதேசித்து நம் சிஷ்யர் அனைவரையும் அசகாய சூரர்களாக்குங்கள்!”

இந்த உபதேசத்தைப் பெற்றதும் இவ்வைவரும் புதியதோர் தேவ ஜன்மம் எடுத்தது போலாகிவிட்டார்கள். சகத்து இனி எது அசாத்தியம் என நினைக்கத் தலைப்பட்டு விட்டார்கள். அவர்கள் முகத்திலே விளங்கிய அஞ்சாமையும் தியாக ஆவேசமும் கண்டு குரு பரமானந்தப்பட்டான். சண்டியின் அருளால் நாம் ஆரம்பித்த மகத்தான முயற்சி இத்தக் காலமாக வாடியிருந்த பாரதத்தை அழித்து அறத்தை நிலைநாட்டி விடும் என்ற நம்பிக்கையும் தைரியமும் அவனுக்கு ஆயிரம் சிங்கங்களின் சக்தியைத் தந்துவிட்டன.

இந்தக் காளையரின் பலத்தைக் கொண்டு குரு கோவிந்தன் நடத்திய போர்களைப் பற்றிப் பிற்பகுதியை அடுத்த சஞ்சிகையில் வெளியிடத் துணிவோம்.

ஆலோசனா அவலோகனம்

சென்ற மாதத்தில் நடந்த விசேஷமான சம்பவம் வடக்கே யமுனைக் கரையில் மதுரையில் நடந்த தயானந்த உற்சவமாகும். மூன்று லக்ஷம் பேர்களுக்குக் குறையாமல் மார்கழி ௨௰௩ வாரத்தில் மதுரையில் கூடி பகவான் தயானந்தன் பிறந்த நூறாவது வருஷத்தை உற்சவமாகக் கொண்டாடினார்கள். அந்த எழுநாட்களும் ஆரிய சமாஜிகள் தார்மிக பிரசங்கங்கள் செய்து தங்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத புதியவழிகளை ஜனங்கள் ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்று தீர்மானங்கள் மூலமாக வற்புறுத்தினார்கள். மற்றதேசங்களின் பிரதிநிதிகள்கூட இந்தச் சம்மேளனத்தில் வந்து கலந்துகொண்டிருந்தார்கள். ஜப்பானும் இந்தக் கர்மோற்சவத்தில் சேர்ந்துகொண்டு புதிய உண்மைகளைக் கற்பதற்காகவும் கற்பிப்பதற்காகவும் சில பிரதிநிதிகள்

அனுப்பியிருக்கிறது என்றால், இந்த உற்சவம் உலகத்தின் வாழ்க்கையில் எவ்வளவு பெரிய கிளர்ச்சியை உண்டாக்கியிருக்கிறது என்று ஒருவாறு விளங்கும்.

சென்ற தை மீ ‘பாரதி’யில் தயானந்த சரஸ்வதியைப் பற்றி ஓர் வியாசம் வெளி வந்தது. நூறு வருஷங்களுக்கு முன் மோர்வியில் மூல சங்கரன் என்பான் அம்பா சங்கரனுக்குக் குழந்தையாகத் தோன்றிய காலத்தில் அச் சிசு பாரதஜாதியில், தார்மிக உலகத்தில், ஓர் புரட்சி உண்டாக்கப் போகிறது என்று யாரோ சொல்லியிருப்பர்? மூல சங்கரனுடைய இருபதாவது வயதிற்கூட அவனது தகப்பன் அவனது காவி வஸ்திரத்தைக் கிழித்தெறிந்து அவனையும் பலவாறு இம்சித்தான் என்றால் உலகின் கண்ணின்மை ஒருவாறு விளங்கும். ஆனால் மூல சங்கரனிடம் ஓர் பெரிய சிருஷ்டி சக்தி உத்போதன சொரூபத்தைப் பிரதிகலித்துக்கொண்டு தூங்கிக்கொண்டிருந்தது. விரஜானந்தஸ்வாமி அவன் கண்ணைத் திறந்து, பாரத நாட்டில் புதியதோர் ஸ்மிருதியைத் தோற்றுவித்து ஜனங்களை உய்யச் செய்யப் பிரயத்தனப் படும்படி அவனுக்கு ஆணையிட்டான். அந்த ஆணையில் பிறந்தது ஆரிய சமாஜம் என்கிற வன்மை பொருந்திய கூட்டம்.

அது தயானந்த சரஸ்வதி என்ற சன்னியாச நாமம் பூண்ட மூல சங்கரனுடைய தார்மிக திண்மையின் பரிபாகம், விவர்த்தம், வளர்ச்சியே யாகும். அவரிடம் தோன்றிய மூல சக்தி விசிரும்பித்து இன்று லாகூரினின்று வைக்கம் வரையில் பாரத உலகத்தை ஓர் ஆட்டு ஆட்டிக்கொண்டு வருகிறது.

அவர் எழுதிவைத்த சத்தியார்த்தப் பிரகாசம் என்ற ஸ்மிருதியில் கூறிய சில முடிவுகளை நாம் அங்கீகரிப்பது சாத்திய மில்லை. ஆனால் பிரமாணங்கள் என்றும் ஆப்த வாக்கியம் என்றும், சம்பிரதாயம் என்றும் ஐதிகம் என்றும் சொல்லிக்கொண்டு, பிழைபட்ட கொள்கைகளிலேயே விசாரணை செய்யாமல் உழன்றுகொண்டிருத்தல் தவறு என்றும், வேத சாஸ்திர புராணங்களையெல்லாம் நல் லறிவு கொண்டு தர்க்கித்துப் பார்த்து, அவற்றுள் அறிவு அங்கீகரிக்கக் கூடியவற்றையேதான் பிரமாணங்களாகக் கொள்ள வேண்டும் என்றும், நெடு நாளாக வந்த பழக்க வழக்கங்களானாலும் அப் பிரமாணங்களுக் கேற்ப அவற்றை மாற்றிக்கொண்டு அறிவு நல்லவை என்று காட்டுகிற ஒழுக்க முறைகளைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்றும், அவர் இக் காலத்தவர்க்குத் தைரியமாய் எடுத்துக் காட்டியுள்ளார். இதற்காகப் பாரத ஜாதி அவருக்குப் பெரிதும் கடன் பட்டிருக்கிறது.

மனிதனைப் பிறந்து, அறிவை உபயோகித்து, தூய்மையும் வைதிக வாழ்க்கையும் பெற வேண்டும் என்று எவர் எவர் விரும்புகிறார்களோ அவர்கள் எக் குலத்தவராயினும் எந்த ஜாதியினராயினும் வைதிக சம்ஸ்காரம் பெற்று ஆரிய சமாஜத்தில் சேருவதற்குரியர் என்று அவர் வகுத்து வைத்துவிட்டார். ஆகையால் ஆரிய சமாஜிகள், ஆதியில் வழக்கத்தில் கொண்டு வரப் பின் வாங்கியிருந்த போதிலும், சென்ற நாலைந்து வருஷங்களாகத் தீண்டாதவர்கள் என்ற வகுப்பினரையும் கூட உபநயன சம்ஸ்காரங்கள் செய்வித்துத் தங்கள் கோஷ்டியில் சேர்த்துக்கொண்டு வருகிறார்கள். பிற சமயங்களிற் சேர்ந்த பிறகு, மறுபடி ஹிந்து தர்மத்துக்குத் திரும்ப வேண்டுமென்கிற எண்ணம் வந்து விட்டவர்களையும் ஆவலுடனே வரவேற்று ஹிந்து சமாஜத்தில் சேர்த்துத் தந்துவிடுகிறார்கள். சனாதன தார்மிகர் நாட்டில் எங்கும் இவர்களுடைய இந்த உயரிய நோக்கங்களையும் கருத்துக்களையும் நடைகளையும் பின்பற்றி நடந்தால் பாரத ஜாதியில் அவிழ்ந்துபோய்விட்ட கட்டு மறுபடியும் கூடி ஜாதிக்கு வலிமை தந்துவிடும்.

பாலிய விவாகம்

“ஆரிய சமாஜிகளிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது அனேக மிருந்தாலும் இங்கு ஒன்றைப் பற்றி வற்புறுத்துவோம். அவர்கள்தாம் ஹிந்துக்களாய்ப் பிறந்து வேதத்தை அங்கீகரிக்கும் கூட்டத்தாரில் பாலிய விவாகம் தர்ம விரோதம் என்று இக் காலத்தில் முதல் முதல் தைரியமாகச் சொல்லமுன் வந்தவர்கள். விளைந்து தெரியுமுன் பெண்களை விவாகம்செய்து கொடுத்துவிட வேண்டியதென்று ஸ்மிருதிகளில் காணப்படும் வாக்கியங்கள், ஹூணரும் ஆப்கானியரும் துருக்கோமான்களும் மொகலாயரும் நாட்டில் பிரவேசித்த பிறகு எழுதப்பட்டவையாகும். நாட்டில் எங்கு பார்த்தாலும் கலக

யிருக்கும்போது தம்முடைய அன்னியர் பேதைப் பெண்களைப் பலாத்காரம் செய்யப் பின் வாங்காதிருந்த போது, ஆயுதப்பயிற்சியற்றவர்கள் தங்கள் பெண்களைச் சீக்கிரம் விவாகஞ்செய்து கொடுத்துவிட்டுத் தங்கள் உத்தரவாதத்தைக் கழித்துக்கொள்ள ஏற்பாடுசெய்து கொள்வது சகஜமே. இந்தக் கருத்துக்கொண்டேதான் இடைக் காலத்து வித்வான்கள் அஷ்ட வர்ஷா பவேத் கௌரீ என்று தொடக்கத்த சுலோகங்களை ஸ்மிருதிகளோடு சேர்த்திருக்கவேண்டும். ஆனால் நம் நாடு சுவதந்திரமுன்னதாக இருந்த காலத்தில், மனிதர்கள் அறிவின்றிக் குருட்டு வழக்கங்களைப் பின்பற்றப் புகு முன்னர், நம் முன்னோர்கள் மற்ற நாட்டார்களைப் போலவே விவாக விஷயங்களில் நல்லறிவுக் கிணங்க வழிகளை அனுஷ்டித்து வந்தனர். சுசுருத ஸம்ஹிதையில் ஸூத்ர ஸ்தானம் ௩௫: ௬௩, ௬௪ - வது சுலோகங்களில் ௨௫ வயதுக்குட்பட்ட ஓர் வாலிபனுக்கும் ௧௬ வயதுக் குட்பட்ட ஓர் பெண்ணுக்கும் ஸம்யோகம் நேர்ந்தால் அனேகமாய்க் கரு வழிந்து போய்விடும்; கருவழியாமல் குழந்தை பிறந்தால் அக்குழந்தை அற்பாயுளதாய்த்தானிருக்கும்; ஒருகால் அக்குழந்தை பூர்ணாயுள வளர்ந்தாலும் அவன் மிகப் பலவீனனாகவேயிருந்து இறப்பானென்று சொல்லப்பட்டிருக்கிறது. மறுபடியும் ஓர் பெண் ருதுஸ்நானமான பிறகு ௩ வருஷகாலம் காக்கலாம், அதன் பிறகு தனக்குத் தகுமான புருஷனை வரிக்க வேண்டியது என்றும், பெண்கள் இறக்கும் வரையில் விவாகமில்லாதிருப்பினும் தோஷமில்லை, குணஹீனனான புருஷனுக்கு அவளை எக்காரணத்துக்காகிலும் விவாகம் செய்து கொடுக்கக் கூடாது என்றும் கூறுகிறான். ௨௦ வருஷங்களுக்கு முன்னே கூட, பெண்களுக்குச் சிறு வயதில் விவாகமானாலும், அவர்களை விவாகஞ்செய்து கொள்ளுகிற மணப்பிள்ளைகள் குறைந்தது ௩௦ வயது வரை பிரம்மசரியத்தை யநுஷ்டித்த வைதீகர்களே யாவர். ஆகவே அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் ஓர் மட்டுக்குத் தீர்காயுளர்களாகவும் திடகாத்திரர்களாகவும் இருந்தனர். 'பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்க' என்ற ஆசீர்வாதமும் அக் காலத்தில் பயன் படைத்த ஆசிர்வாதமாகவேயிருந்தது. இன்றைக்கோ எல்லாம் மாறுபட்டுப் போய்விட்டது. இந்தியர்களின் சராசரி வயது ௨௩ என்று கணக்கிடப்படுகிறது. ஆனால் இப்படிச் சொல்லி விடுத்தினால் ஜனங்களுக்குத் தங்கள் ஜீவசக்தி எம்மட்டுக்குக் குறைந்திருக்கிறதென்று விளக்கமாகத் தெரிகிறதில்லை. ஆகையால் இவ் விஷயமாகச் சற்று விஸ்தாரமாக எழுதுவோம்.

சென்னை மாகாணத்தைமாத்திரம் கணக்கிற் கெடுத்துக்கொள்வோம். கலி ௫௦௧௩-இல் பிறந்த ௬௦௦௦ ஆண் குழந்தைகளில் ௨௧௬ குழந்தைகள் ஒருவயது முடிவதற்கு முன் இறந்துபோயின. அதேமாதிரி ௬௦௦௦ பெண்குழந்தைகளில் ௨௦௯ குழந்தைகள் இறந்துபோயின. ௫௦௧௬ முதல் ௫௦௧௯ வரையிலுள்ள ௪ வருஷத்து சராசரியைப் பார்த்தாலோ ஒரு வருஷத்தில் பிறந்த ௬௦௦௦ குழந்தைகளில் ௧௬௯ இறந்தன. இவ்விருந்து இறக்கும் குழந்தைகளின் விகிதம் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வந்திருக்கின்றது என்று ஏற்படும். இது கலியின் கோலாகலம் என்று சொல்லி நம்மிற் பலர் மனதைத் தேற்றிக்கொள்வர். ஆனால் அனேக நாடுகளில் இந்த அகால மிருத்யுவைத் தொடர்ந்து குறைந்துகொண்டு வந்திருக்கிறார்கள். கலி ௫௦௦௦-த்திலிருந்து ௧௦ வருஷங்களுக்குள் ஓர் வயதுக்குட்பட்ட குழந்தைகளின் மரண விகிதம், உலாந்தாவில் ௧௭௬-இனின்று ௧௩ ஆகவும், நியூஜிலந்தில் ௮௩-இலிருந்து ௬௪ ஆகவும், ஜெர்மனியில் ௧௩௯-இனின்று ௧௧௬ ஆகவும், சுவேதனில் ௧௩-இலிருந்து ௭௨ ஆகவும், ஸ்விட்ஸர்லாந்தில் ௧௩௩-இலிருந்து ௩௬ ஆகவும், பிரித்தானியாவில் ௧௬௭-இலிருந்து ௬௭ ஆகவும் குறைக்கப்பட்டுப் போயிருக்கிறது. இதினின்று மற்ற நாட்டு ஜனங்கள் தங்கள் குழந்தைகளின் ஆயுளைப்பற்றி எவ்வளவு அக்கறை யெடுத்துக் கொண்டிருக்கிறார்களென்று நாம் அறிந்து கொள்ளலாம்.

விகிதமென்றால் கூட இந்த அகால மிருத்யுவின் அளவு நமக்குச் சரிவர போதமாவதில்லை. நமது நாட்டில் ஏறத்தாழ ௨௦ லக்ஷம் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகள் இறந்துபோகின்றன. இவை தவிரக் குறைந்தது இன்னொரு ௨௦ லக்ஷம் குழந்தைகள் செத்தே பிறக்கின்றன. நினைக்கமனம் நடுக்கும். இந்த அகோரமான கொலைகளுக்குக் காரணம், நாம் சாஸ்திரமென்று கண்ணை மூடிக்கொண்டு நம்பி வரும் பாலிய விவாகமே யாகும். கணக்கைப் படிப்பது படிப்போர்க்குக் கஷ்டமாக இருந்தாலும் இதை நிரூபிப்பதற்கு இன்னும் ஒரு

சிறிய கணக்கு மாத்திரம் சொல்லி நிறுத்துவோம். படிப்போர் மன்னித்திடுக. அஃதாவது சென்ற கலி ௫௦௧௨-ம் வருஷத்தில் ௫ வயதுக்கு மேல் ௧௦ வயதுக்குட்பட்ட ௬௦௦௦ ஆண்பிள்ளைகள் இறந்தால் ௬௨௬௩ பெண்பிள்ளைகளிறந்திருக்கிறார்கள். ஆனால் ௧௦ வயதுக்கு மேல் ௩௦ வயதுக்குள் இறக்கும் ௬௦௦௦ ஆண்பிள்ளைகளுக்கு ௬௨௩௨ பெண்பிள்ளைகள் இறந்து போயிருக்கிறார்கள்! இதினின்று பாலிய விவாகமும் பாலிய பிரசவமும், நாட்டிற்கு எவ்வளவு பெரிய நஷ்டத்தை விளைத்து வருகின்றன வென்று ஒருவாறு தெளியப்படும். தமிழர் என்று விழித்துக் கொள்வார்களோ!

பரஞ்சோதி சுவாமிகள்

சிதம்பரம் பொன்னம்பல சுவாமிகளின் பீடத்தில் ஸ்ரீலஸ்ரீ பரஞ்சோதி சுவாமிகள் அமர்ந்த செய்தி நமக்கு ஆனந்தத்தைத் தருகிறது. மடங்களில் பெரும்பாலவை தேச நலம் அறியாத, தர்மத்தின் உட் கருத்தைத் தெரிந்து கொள்ளாத, மனிதரின் ஆதிக்கத்தின் கீழ் வந்திருக்கிற இந் நாளில், பல தேச சபைக் கூட்டங்களுக்குச் சென்றவரும், பல தேச பக்தரின் நட்பை உடையவரும், கை நூல் வஸ்திராபிவிருத்தியில் பெரிய அபிமானம் வைத்து அதற்காகப் பாடுபட்டு வருபவரும், ஒழுக்கமும் சீலமும் கல்வியும் தயையும் இன்னோரன்ன அரிய உயர் செல்வங்களும் நிரம்பிய சான்றோரான ஸ்ரீமத் பரஞ்சோதி சுவாமிகள் இம் மடத்தில் தலைமை வகித்திருப்பது தமிழ் நாடு செய்த பூஜாபலனே யாகும். மடாதிபத்தியத்தில் அவசியமான சுதந்திரம் அவருக்கும் சீக்கிரம் ஏற்படும் என்றும், அவர் தமது ஆதிபத்தியத்தைத் தமிழரின் ஆத்தியாத்மிக வளர்ச்சிக்கும் லௌகிக வளர்ச்சிக்கும் பயன் படுமாறு செய்வார் என்றும் நம்புகிறோம்.

அங்கும் இங்கும்

இங்கிலாந்தின் கப்பல்களை வெடி மருந்து வைத்து உடைத்துப் போடுவது என்று சதியாலோசனை செய்து வந்த கூட்டத்தாருள் ஓலீரி என்பவனுக்கு ௧௮ மாதமும் மாக் கென் என்பவனுக்கு ௧௬ மாதமும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது என்று சின்னாட்களுக்கு முன் இந்த சமாசாரம் எட்டியது. ஏறத்தாழ அதே காலத்தில் ௩௩-வது அகாலி ஜதைக்கு விருந்து செய்ததற்காக ௯௬ பேர்களுக்கு ஒரு வருஷம் முதல் ௬ மாதம் வரையில் தண்டனையும் ஐம்பது ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. முதற் குறிக்கப்பட்ட ஓலீரியும் மக்கெனவும் இங்கிலாந்தின் தற்காப்புக்கே அழிவுண்டாக்கப் பார்த்தனர். அவர்கள் செய்த சதியை அவர்கள் பூரணமாக நிறைவேற்றியிருந்தால் இங்கிலாந்துக்கு ஜீவாதாரமாக உள்ள பல யுத்தக் கப்பல்கள் உடைந்து போயிருக்கும், இன்று மதிக்கிற அளவைவிடக் கூடக் குறைவாகப் பிரான்ஸும் ஐக்கிய ராஜ்ஜியமும் (அமெரிக்காவும்) இங்கிலாந்தை மதிக்கத் துவக்கிவிட்டிருக்கும். ராஜ தந்திர உலகத்தில் தன் உத்தேசங்களையும் அபிப்பிராயங்களையும் நிலை நாட்டுதல் இங்கிலாந்துக்கு அசாத்தியமாய்ப் போய் விட்டிருக்கும். அது பெல்ஜியம் உலாந்தா முதலியவற்றைப் போல இரண்டாந் தரத்த ராஜ்ஜியமாகி விட்டிருக்கும். அவ்வாறிருந்தும், இத்தனைப் பெரிய கேடு சூழ்ந்த கள்வருக்கு ஒன்றரை வருஷக் காவலே போதிய தண்டனை என்று நீதிபதிகள் தீர்மானித்தனர். மேலே குறித்த இந்தியர்களவு செய்யவில்லை. பல நூற்றுக் கணக்கான மனிதர் சாவதற்கான உபாயங்கள் தேடவில்லை. ஓர் இராஜ்ஜியம் அழியும்படியான அல்லது வலி குன்றும்படியான காரியங்களொன்றும் செய்யவில்லை. வீடுகளுக்குத் தீ வைக்கவில்லை. அகண்ட பாடம் படிப்பதற்காகச் சென்ற தங்க ளினத்தாருக்கு மரியாதை செய்து அவர்களுக்கு அன்ன ஆகாரம் கொடுத்ததே அவர்கள் செய்த பாதகம். அந்தப் பாதகத்துக்கு ௧௨ மீ காவலும் ௬ மீ காவலும் சரியான தண்டனையாக மதிக்கப்பட்டது. இந்தத் தண்டனை ஆங்கிலேய நீதிபதிகளால் விதிக்கப்பட்டிருந்தாலும், இந்திய நீதிபதிகளாலேயே விதிக்கப்பட்டிருந்தாலும், பிரித்திஷ் இலாகாவில் விதிக்கப் பட்டிருந்தாலும், நாபா அதிகாரிகளால் விதிக்கப் பட்டிருந்தாலும், விஷயம் ஒன்றுதான்: அது நம்முடைய அடிமை நிலைமையையே காட்டுகின்றது. அங்கே, இங்கிலாந்தில், கொடிய சதியாலோசனைக்கு ௧௮ மாதம்காவல் தண்டனை; இங்கே, இந்தியாவில், ஓர் கூட்டத்திற்கு அன்னமிட்ட குற்றத்திற்கு ௧௨ மீ தண்டனை. காரணம், அங்கே மனிதன் மனிதனைப் பாவிக்கப் படுகிறான்.

இங்கே இந்தியன் அடிமையாகப் பாவிக்கப் படுகிறான். இவ்விடத்து நீதிபதிகள் ராஜாங்க சம்பந்தமான குற்றங்கள் சாட்டப்பட்ட மனிதர்களைக் காணும் போது இவர்களுக்கு இத்தனை அகங்காரமா என்று தங்களை யறியாமலே நினைக்கத் துவக்கி விடுகிறார்கள். ஆதலினால் நாகரிக நாடுகளில் குற்றமென்று மதிக்கப்படாத செயல்களைக்கூட இவர்கள் குற்றமென்று நினைத்துவிடுவார்கள். சாதாரண குற்றங்களுக்கும் ஓங்கிய தண்டனைகளை விதித்து விடுகிறார்கள். நீதிபதிகள் ஜாதியில் இந்தியராக இருந்தாலோ, தாங்கள் தங்கள் ஜாதியார் புறம் சாயவில்லை என்று காட்டிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணமும், தங்கள் ஐரோப்பிய எஜமானர்களுக்குத் திருப்தி யில்லாமல் போய்விடக் கூடாது என்ற எண்ணமும், அவர்கள் மனதை யாட்டிக் குற்றவாளியாக இல்லாதவனை கூடக் குற்றவாளி என்று தீர்மானிக்கும் இயற்கையைத் தந்துவிடுகிறது. பாரதநாட்டில் மனிதன் மனிதனைப் பாவிக்கப் பட்டாலொழிய அநியாயத் தீர்ப்புகளும், இத்தகைய அநியாய தண்டனைகளும் குறையும் காலத்தை நாம் காண முடியாது.

இங்கிலாந்தின் உத்தரவாதம்

ராஜதந்திர சாஸ்திரத்தின் குசிதரமான வியாக்கியானங்கள் பார்க்கவேண்டுமானால் ஸர் மைக்கேல் ஓதுவையர் போன்ற ஆங்கிலோ இந்திய ஆங்கிலேயரிடம்தான் நாம் செல்ல வேண்டும். இவர்கள் தங்கள் உத்தரவாதத்தை உணருவது போலக் கஸாபியாங்காகூட உணர்ந்திருக்க மாட்டான்! * கடவுள் தங்களிடம் ஒப்புவித்த இந்திய ஜனங்களை யாதொரு ஊறும் இன்றிக் காக்கவேண்டியது தங்களுடைய கடமை யென்று இந்த அதிகாரிகள் மிகச் சிரத்தா விசுவாசத்துடன் உணர்ந்து, இப் பெருங் கடனை நிறைவேற்றும் விஷயத்தில் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். கடவுள் எப்பொழுது இவர்களிடம் இந்தியர்களை ஒப்புவித்துவிட்டாரோ அப்பொழுது அவர் இனிமேல் இந்தியரைப் பற்றிய கவலையே இன்றித் தூங்கப் போய்விடலாம் என்கிறதே இவர்களுடைய மனோபாவம். ஓதுவையரும், வில்லிங்டன் ஹாம் பிரபுவும், இவர்கள் போன்ற கனவான்களும் இருக்கிற போது இந்தியர்களுக்கென்ன பயம்? கடவுள்தான் விசாரப்படுவானேன்? ஆகையால் இந்திய தலைவர் இந்தியாவுக்குச் சுய ராஜ்ஜியம் கேட்டால், இவர்கள், 'இதென்ன அக்கிரமம்? நம்முடைய உத்திரவாதத்தை நிறைவேற்றுவதற்கு இவர்கள் இடையூறாய் வருகின்றார்களே? ௧௮௧௮-ம் வருஷத்து வங்காளத்து ௩-வது திட்டம் முதலிய முறைகளைப்பிரயோகித்து அவ்வாறு கேட்பவரை அடக்கிவிட வேண்டும்,' என்று கர்ஜ்ஜிக்கிறார்கள். இவ்வாறு கர்ஜ்ஜிக்கும் சிங்கங்களுள் ஓதுவையர் அக்ர ஸ்தானம் வகிக்கிறார். இந்தியர்கள் விரும்புகிறபடி சீர்திருத்தங்களை அதிகமாக அமலச் செய்து ஸ்வதந்திர வாஸனை ஏற்பட்டுவிட்டால், இங்கிலாந்தின் மீது பாரமாக அமிழ்த்துகிற சட்ட ரீதியான உத்தர வாதத்தையும் தார்மிகமான உத்தரவாதத்தையும் இங்கிலாந்து நிறைவேற்றுவது அசாத்தியமாகப் போய்விடும் என்றும், சாமர்த்தியமும் மனச் செம்மையுமே உருவாய பிரித்திஷ் உத்தியோகஸ்தர்கள் போதிய அளவுக்கு இந்தியாவில் இருந்தால்தான் அவ் உத்தரவாதத்தை இங்கிலாந்துக்குச் செவ்வனே நிறைவேற்றுதல் சாத்தியமாகும் என்றும் இவர் வாதிக்கிறார். இன்னும் சாமானிய ஜனங்களுக்குச் சம்மதமா சம்மதமில்லையா என்று கேட்காமலே இந்த மாண்டேகு-செம்ஸ்போர்து சீர்திருத்தங்கள் கொடுக்கப்பட்டுப் போயின என்று அவர் துவிக்கிறார். ஆனால் அவரைச் சில கேள்விகள் கேட்க விரும்புகிறோம். கிளைவு முகமது அலியை ஆற்காட்டு நவாபாக ஆக்கி, அவனது ஆளுகைக்கு உட்பட்ட எல்லைக்குள்ளும், அவ் எல்லைக்கு வெளியிலும் வரி வசூலிக்கும் அதிகாரம் கிழக்கு இந்திய சங்கத்துக்குக் கொடுக்கப்பட்டது என்று அவனிடம் கை நாட்டு வாங்கிக்கொண்டபோது தமிழ ஜனங்களின் சம்மதத்தைக் கேட்டுத்தான் வாங்கிக் கொண்டானோ? விராஜாத் தௌலாவை அடித்து, கிளைவின் கழுதை என்று ஆங்கிலரே ஹாஸ்யப் பெயர் வைத்த மீர் ஜாபரை மூர்ஷிதாபாத்துச் சிங்காதனத்தில் ஏற்றி வைத்து அவனிடமிருந்து இருபத்தினான்கு பர்கானுக்கள் என்ற ஜில்லாவைப் பெற்றுக் கொண்ட காலத்திலும், கண் குருடனான ஷா ஆலம் என்கிற பொம்மைச் சக்கரவர்த்தியினிடமிருந்து வங்காள, பஹார, ஒரிஸா மாகாணங்களில் வரி வசூல் செய்யும் திவானி என்னும் அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட காலத்திலும் வங்காள ஜனங்களின் சம்மதத்தைக் கேட்டுத்தான் பெற்றுக்கொண்டானோ? தல்ஹௌஸியானவன் சிங்காதனம் சிங்காதனமாக உடைத்து, கிரீடம் கிரீடமாகத் தகர்த்து, அரண்மனைகளிலுள்ள ஆனை குதிரைகளை விற்றும், ராணிகளுடைய ஆபரணங்களை முதற்கொண்டு ஏலம் போட்டும் அட்டூழியம் செய்து, கிழக்கு இந்திய சங்கத்துக்காக ராஜ்ஜியம் ராஜ்ஜியமாகக் கபளீகரித்த காலத்தில் எந்த ஜனங்களின் அனுமதியைக் கேட்டான்? கிழக்கிந்திய சங்கத்தினிடமிருந்த ஆதிக்கம் விக்தோரியா ராணியிடம் மாற்றப்பட்ட காலத்தும், அவ் இராணி சக்ரவர்த்தினி என்ற படாடோபமான பட்டத்தைத் தரிக்கத் துவக்கின காலத்தில் இந்நாட்டுச் சாமானிய ஜனங்களின் சம்மதம் கேட்கப்பட்டதாகத் தெரியவில்லை. இதெல்லாம் என்ன பைத்தியமாக இருக்கிறது? பலோ ராஜா பவிஷ்யதி (பலவானேதான் ராஜ்ஜியத்தை ஆக்கிரமித்துக் கொள்வான்) என்ற தீர்க்க தரிசனம் நிறைந்த புராண வாக்கின் படிதான் தற்போதைய உலகம் நிலைமாறி நிற்கின்றது. இதை நாம் அறியாமலில்லை. ஓதுவையரும் அறியாமலில்லை. உலகமும் அறியாமலில்லை. ஆகவே தார்மிகமாக நடந்துகொள்ளும் எண்ணம் இல்லாதபோது விஷயத்தை மறைத்து வைத்துப் பேசாமல் உண்மையை ஒட்டியாவது பேசுவதே சுவையுடைத்தாகும்.

பிரித்திஷ் உத்தியோகஸ்தர் போதிய தொகை இல்லாவிடில் இந்தியாவில் நேர்மையான ராஜரீகம் நடைபெறாது என்று ஸர் மைக்கேல் சொல்லுகிறார். பிரித்திஷ் உத்தியோகஸ்தன் என்ற பிராணியைச் சிருஷ்டிக்குமுன் கடவுள் அறிந்தஸ்தானத்தைச் சிருஷ்டித்து வைத்தார் என்று நமக்கு ஞாபகம். பிரித்திஷ் உத்தியோகஸ்தன் வருமுன் தமிழ் மன்னரது ஜன சுதந்திரம் நிரம்பியதும் வன்மை பொருந்தியதுமான ஆட்சி ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு நடை பெற்றது. பிரித்திஷ் உத்தியோகஸ்தன் பிறக்கிறதற்கு இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் சந்திரகுப்த சாணக்கியரது வன்மையுள்ள ஆட்சியும் அசோகனது தர்ம அரசாட்சியும் இந் நாட்டில் விளங்கி நின்றன. பிரித்திஷ் உத்தியோகஸ்தன் தோன்றுவதற்கு வெகு நாட்களுக்கு முன் சந்திரகுப்தனுடைய ஏகாதிபத்தியமும் ஸ்ரீஹர்ஷனுடைய ஏகாதிபத்தியமும் கண்டோர் வியக்கும்படி அறத்தையும் செல்வத்தையும் காத்துக் குடியோம்பின. பிரித்திஷ் உத்தியோகஸ்தன் கால தேவதையின் கர்பபத்தில் இன்னும் அமிழ்ந்து கிடந்திருந்த போதே விஜயநகர ஏகாதிபத்தியமும், பிஜாபூர் முதலிய பாமினி ராஜ்ஜியங்களும், முதலாயர் மராட்டியருடைய சக்தி வாய்ந்த அரசுகளும் பல நூறு வருஷங்கள் நிலை பெற்றன. இவைகளெல்லாம் அழிந்து போய் விட்டனவே என்று ஓதுவையர் கூட்டத்தார் சொல்லலாம். ஆனால் ஆங்கில அரசாங்கம் இந்த தேசத்தில் ஆரம்பித்து இன்னும் எழுபது வருஷங்களாகவில்லை. மேலே நாம் குறிப்பிட்ட ஜாதிகளின் அரசாங்கங்களில் மிக அற்பாயுளதாயுள்ள அரசாங்கம் இருந்த காலம் வரையில் இவ் ஆங்கில உத்தியோகஸ்தர் தங்கள் ஆட்சியை நிலைக்கும்படி வைத்த பிறகுதான் இத்தகைய வார்த்தைகளை அவர்கள் சொல்லுதல் பொருந்தும். அது வரையில் அவ் வார்த்தைகளுக்கு அர்த்தமே யில்லை.

ஓதுவையர் பார்லிமெண்டுதானத்தின் விஷயத்தில் இங்கிலாந்துக்குச் சட்ட ரீதியான உத்தரவாதம் இருக்கிறது என்கிறார். சட்டம் என்பதன் பொருள் என்ன என்பதைப்பற்றி இன்னும் எப்பொழுதாவது பேசுவோம். ஆனால் இங்கு இச் சட்டம் யார் செய்தது என்று கேட்போம். இந்தியர்களே செய்த சட்டமா? அவர்கள் அவ்வாறான சட்டம் செய்ததாகச் சரித்திர ரீதியான சாக்ஷியம் ஒன்றும் காணோம். பிரித்திஷ் ஜனங்கள் செய்த சட்டமா? பிரித்திஷ் ஜனங்களில் ஓர் சாரார்— தற்போது சிறு பகுதியினரே என்று அறிவோம்—பிரித்திஷ் அரசாங்கத்துக்கு இதர நாடுகளை ஆளப் பாக்கிய

* ஓர் கப்பலில் நெருப்பு எரியத் துவக்கிய போது கப்பற் தலைவன் தன் மகனான கஸாபியாங்காவைத் தன் உத்தரவு வரும் வரையில் ஓர் இடத்தில் காவலாக நிற்கவேண்டும் என்று கட்டளையிட்டுவிட்டு நெருப்பை அவிக்கும் காரியத்தில் இறங்கினான். நெருப்பு தைமீறிச்சென்று கப்பற்தலைவனும் மாண்டுபோனான். அதனால் அவனுடைய உத்தரவு வாராதிருக்க, உத்தரவு வரும் வரையில் காவலிடத்தை விட்டு அசையக்கூடாது என்ற ஒரே உறுதியுடன் கஸாபியாங்காவானவன் பொங்கியெழும் நெருப்புக் கடலிடையே அசையாமல் நின்று பிராணனையும் விட்டான். தன் கடமையையும் உத்தரவாதத்தையும் நிறைவேற்ற உயிர் கொடுத்த தீரருள் கஸாபியாங்கா முதன்மை பெற்றவன். அவனது வீரத்தைப் பற்றி தேவி ஹேமன்ஸ் ஓர் அழகிய கவி எழுதியிருக்கிறாள்.

யில்லை என்கிறார்கள். பிரித்திஷ் பார்லிமெந்து இது சம்பந்தமாக ஓர் சட்டம் செய்திருக்கிறது என்பது வாஸ்தவம். பிரித்திஷ் பார்லிமெந்து சில தீர்மானங்களைச் செய்து அது இந்தியாவைக் கட்டுப்படுத்தக் கடவது என்று பொறித்திருக்கும் இந்தச் சட்டம், அதற்கெனச் சம்மதம் தாராத இந்தியரைப் பொறுத்த மட்டில் சட்டமாகுமோ என்று ராஜதந்திர நிபுணர்களை வினவுகிறோம். இங்கிலாந்திலேயே அரசிறை உளதேல் பிரதிநிதி பாத்தியமும் உண்டு என்று ஓர் பழமையான சூத்திரம் உண்டு. அது சமஸ்த ராஜதந்திர நிபுணராலும் இங்கிலாந்தில் தொன்று தொட்டு அங்கீகரிக்கப் பெற்றுவந்த ஓர் தர்மமாகும். வேறோர் நாட்டில் ஓர் சட்டம் நியாயமாக அமுலில் இருக்க வேண்டுமானால், அச் சட்டத்தை விதிக்கும் அதிகாரத்தில் அவ் வேற்று நாட்டார் சம பாகத்தைப் பெற்றிருக்க வேண்டுமென்பதே இதினின்று விளையும் ஓர் பயனாகும். அவ்வாறு பெற்றிரா விடில் அச் 'சட்ட'த்தைப் பலாத்காரத்தால் சுமத்தப் பட்டதோர் சாசனம் என்று வேண்டுமென்றால் சொல்லலாமே யொழிய அப் பிற நாட்டாரை நியாயமாகக் கட்டுப்படுத்தும் சட்டம் என்று சொல்லுதல் தவறாகும். ஆகவே ஓ'ட்வையர் போன்ற 'அதிகார வீரர்'களும் பிரபுக்களும் இங்கிலாந்தின் உத்தரவாதத்தைப் பற்றியும், பொது ஜனங்களின் சம்மதத்தைப் பற்றியும், இந்தியாவைக் காப்பதற்காக ஆங்கில உத்தியோகஸ்தரின் அவசியத்தைப் பற்றியும் பேசாமல் இருப்பது மிகவும் நலமாயிருக்கும் என நம்புகிறோம்.

வரவு செலவு திட்டம்

இந்திய சட்ட சபையிலும் மாகாண சட்ட சபைகளிலும் இந்திய அரசியல் சபையிலும் வரவு செலவு திட்டம் கொண்டு வரப்பட்டு வாதிக்கப்படுகிறது. ஆனால் ஜனங்களின் பிரதிநிதிகளின் அபிப்பிராயப்படி யாதொன்றும் நடக்கப் போவதில்லை என்பது முன் கூட்டியே தீர்ந்த விஷயம். கஜ கர்ணம் செய்து அவர்களுக்கு வெகுமதம் ஏற்பட்டாலும், ராஜப் பிரதிநிதியின் அதிகாரச் சீட்டு (ஸெர்திபிகேத்து) இருக்கவே இருக்கிறது. அதற்கு இன்று பிரதிநிதிகளின் ஏகோபித்த அபிப்பிராயத்தைக்கூட ரத்து செய்யும் ஆற்றல் இருக்கிறது. ஆகையால் இதை நாம் வாதம் என்று சொல்லுவது பொருந்தாது. தில்லி தேவதைகளும் மாகாண தேவதைகளும் வருகிற வருஷத்துக்கு நாடு இத்தனை கோடி ரூபா சேகரித்துத் தர வேண்டும் என்று விதிவிதிக்கும் காலத்தில் பிரதிநிதிகள் பேசும் பேச்சுக்கள் என்று தான் அவற்றை வர்ணிக்கலாம். அவர்கள் அநியாயமான வரி போட்டால் அவர்களது இஷ்டம் அது. சில வரிகளை அவர்கள் விதிக்காமல் அல்லது ஏற்றாமல் இருந்தால் அது அவர்களுடைய தயவே. சில ஜனப்பிரியமான அங்கத்தினர் விரும்பும் மாறுதல்களை வரவு செலவு மந்திரி ஏற்றுக்கொண்டு விட்டாரானால் அது பாரத ஜனங்கள் செய்த பூஜாபலன்! ஜனங்களின் பிரதிநிதிகளின் வார்த்தைக்கு இணங்கி வரியைக் குறைப்பது போல இருக்க வேண்டும் என்றே தன மந்திரியும் தான் விரும்பும் தொகைக்கு மேலிட்ட தொகைகள் கேட்பார். ஆகையால் நமக்கு ஏதோ பாத்தியம் இருப்பது போல இவ் வரவு செலவு திட்டத்தைப் பற்றி ஆழமாக ஆராய நாம் இஷ்டப்படவில்லை. படிப்போருடைய சௌகரியத்துக்காக மாத்திரம் நம்மீது இவ் வருஷத்தில் ஏற இருக்கும் பாரம் ௧௩௩.௯௮ கோடி அதாவது ௧௩௩ கோடியே ௯௮ லக்ஷ ரூபா என்றும், இந்தத் தொகையில் ௫௫.௨௫ கோடி ராணுவச் செலவுக்குப் போகிறதென்றும் குறிப்பிடுகிறோம்.

ஒலிம்பிய விளையாட்டுகள்

ஐரோப்பாவில் நாலு வருஷங்களுக்கொருமுறை பல பல ஊர்களில் நடைபெறும் கண்காட்சி உற்சவ காலங்களில் ஒலிம்பிய விளையாட்டுகள் என்ற ஓர் வித விளையாட்டுகள் நடைபெறும். இவை கிரேஸ் சுதந்திர நாடாக இருந்த காலத்தில், அதாவது சுமார் ௨,௦௦௦ வருஷங்களுக்கு முன்னால், கிரேக்கர்களுக்குள் நடைபெற்ற விளையாட்டுகளின் ஞாபகமும் பிரதிதுவனியுமேயாகும். கிரேக்கர் சரீரப் பயிற்சியினால் சரீரத்தை ஆரோக்கியமுள்ளதாயும் அழகுள்ளதாயும் லாகவமுள்ளதாயும் ஆக்கிக்கொள்ள வேண்டுமென்ற பேரவாக் கொண்டவர்கள். உயிருள்ள ஆடவரையும் பெண் மக்களையும் பார்த்துச் சக்சொரூபமாய்ச் செதுக்கப்பட்ட அவர்களது சலவைக் கற்சிலைகள் சரீரக் கட்டையும்,

ரூபலாவண்யத்தையும் பொறுத்த மட்டில், தங்களுக்கு இணையேதுமில்லை யென நிற்பவைகள். தற்கால ஐரோப்பா சாஸ்திர அறிவிலும் யந்திர சிருஷ்டியிலும் மிகவும் உன்னதமான நிலைமைக்கு வந்திருக்கிறது போலவே, சரீரக்கட்டிலும் லாகவத்திலும், புராதன கிரேஸுக்குத் தான் தாழ்ந்ததில்லை என்று சொல்லிக் கொள்ளும்படி இருக்கவேண்டும் என்று, சென்ற ௨௦ வருஷங்களாக இந்த ஒலிம்பிய லீலைகளை மறுபடியும் ஏற்படுத்தியிருக்கிறது. அந்த லீலைகளில் ஓட்டம், நடை, குதித்தல், தாண்டல், சக்கரமெறிதல் முதலிய பலவித வியாயாமங்களிலும் தேர்ந்தவர்கள், தங்கள் சாமர்த்தியத்தைக் காட்டி முதன்மை பெற முயலுகிறார்கள்.

இம் மாதிரி முயற்சிகளால் ஐரோப்பியரின் தேக பலமும், லாகவமும், ஆயுளும், ஆரோக்கியமும் வளர்ந்து வருகிறது. ஏதாவது ஒரு நாட்டிற்கு இத் தகைய தேகப் பயிற்சியின் அவசியமிருந்தால், அந்த நாடு நம் நாடேயாகும். பீமனும் அர்ஜுனனும், சிவாஜியும் தேசிங்கும் திகழ்ந்த இந் நாட்டில், ஜனங்கள் ஜீவச்சவங்கள் போல இருந்து அற்பாயுளர்களாக மடிகிறார்கள். ௫௦ நிமிஷத்துக்குள் ௧௦ மைல் ஓடியிருக்கும் பின்லாந்து நாட்டு ரித்தோலா என்பவனது சாமர்த்தியத்தையும், ௯௯ கஜ தூரத்துக்கு வேல் எறிந்த அதே தேசத்து மிர்ா என்பவனது சாமர்த்தியத்தையும் இன்னும் இவர்கள் போன்ற மல்லர்களுடைய சாமர்த்தியங்களையும் நோக்கும்போது தற்காலத்து இந்தியர் என்றைக்காவது அத் தகைய சாமர்த்தியத்தைக் காட்ட முடியுமா என்கிற ஐயம் இதைப் படிப்போர் மனத்தில் பிறக்கும்.

ஆனால் உண்மையில் எக் காலத்திலாகட்டும், எத் தேசத்திலாகட்டும், ஓர் மனிதனுக்குச் சாத்தியமாயிருந்தது மனித ஜாதியிலுள்ள ஒவ்வொருவனுக்கும் சாத்தியமே. இன்றைக்கும் வங்காளத்தில், மாணவர்களும், பிறரும் வரப்போகும் ஒலிம்பிய லீலைகளுக்குத் தயார் செய்துகொண்டு வருகிறார்கள். கல்கத்தா வித்யாசாகர் கலாசாலையில் படிக்கும் ருத்ரன் என்னும் மாணவன் ௨ நிமிஷம் ௧௫ விநாடிக்குள் ௭ மைல் தூரம் ஓடி, மோஹன் பாகன் கலாசாலை சிலரையும், தர்ஹம் லாகவ பதாதிப்படையைச் சேர்ந்த வாக்கரையும் வென்று விட்டான். ௯ மைல் ஓட்டத்தில் தர்ஹம் லாகவ பதாதிப் படையைச் சேர்ந்த சிங் என்பவன் ௧௫ விநாடிக்குள் ஓடினான். அவனுக்கடுத்த படியில் மோஹன் பாகன் கலாசாலை பாலசிங்கன் என்னும் மாணவன் ஓடியிருக்கிறான். இத் தகைய இயக்கம் தமிழ் நாட்டில் இதுவரையில் நடைபெறாதது வருந்தத் தக்கதாயிருக்கிறது. தேகப் பயிற்சியை மனிதனுக்கு இன்றியமையாத முயற்சிகளில் ஒன்றாகப் பாவிக்கும் வழக்கம் நம் நாட்டில் இல்லாமற் போய் விட்டது. தேகப் பயிற்சி செய்கிறவர்களையும் மல்லர்களையும் நம் நாட்டில் போக்கிலிகளின் ஜாதியில் சேர்த்து விடுகிறார்கள். அதனாலேயே தமிழ் ஜாதியின் தேக வளர்ச்சியும் தேக வன்மையும் சாமர்த்தியமும் மற்ற ஜாதிகளை விடக் குறைவாக இருக்கிறது. 'ஸெர்க்கஸ்'களுக்குச் சென்றால் மலையாளிகளையும் ஆந்திரர்களையுந்தான் பார்க்கிறோம். கலியாண அர்ஜுனனைப் போன்ற பயில்வான்கள் ஆந்திரர்களுக்குள்ளும் ராஜபுத்திரர்களுக்குள்ளும் தோன்றியிருக்கிறார்கள். தமிழருள் ஒருவனேனும், அத்தகைய சாமர்த்தியம் காட்டி நாம் கண்டதில்லை. இவ் விஷயத்திலும் தமிழர் ஹிந்துஸ்தானத்திலுள்ள மற்ற ஜாதிகளுக்கு தாழாமலிருக்க முயலவேண்டும்

புஸ்தக விமரிசனம்

(க்ருஷி சாஸ்திரம்: ஆசிரியன், திவான் பஹதூர் அரங்காச்சாரியார். பதிப்பாளர், மாக்மிலன் வகையரா சென்னை. விலை அணா க.)

இப் புத்தகம் ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முதற் பகுதியில் விதைகளின் அமைப்பு முளைவகைகளைக் குறித்தும், உ-ம் பகுதியில் பருப்புச் செடிகளின் வகைகளைக் குறித்தும் நவ தானியங்களைக் குறித்தும், ௩-ம் பகுதியில் எண்ணெய்ச் சத்துக்கடங்கிய தானியங்களின் விவரத்தைக் குறித்தும், ௪-ம் பகுதியில் நார் வகைச் செடிகளின் தன்மைகளைக் குறித்தும், ௫-ம் பகுதியில் நமக்கு ஆகாரம் தரக்கூடிய பயிர்களுள் முக்கியமான நெல், சோளம், கேப்பை, தினை, கம்பு, முதலிய பயிர்களின் விவரங்களைக் குறித்தும் விரிவாக விளக்கிக் கூறப்படுகின்றது. ஒவ்வொரு பகுதியிலும் முளை முதலிய தன்மைகளைக் கூறும்போது அவ்வவற்றை எளிதில் விளக்க வேண்டிப் பல படங்களிட்டு விளக்கப் பட்டிருக்கின்றது. கிராமப் பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு முதலில் கற்பிக்க இப் புத்தகம் 'மிகவும்' பயன் படுமென்பதற்குச் சந்தேகமே இல்லை.

(சைவத்தின் சாரம்: ஆசிரியன் திரு. வி. கலியாண சுந்தர முதலியார். பதிப்பாளர், "நவசக்தி" காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை. விலை அணா அ.)

இது சைவ சமயத்தின் உண்மைகளைத் தெள்ளுற ஆராய்ந்து அவைகளிலுள்ள சமரசத்தை விளக்கி அதற்குச் சான்றாகப் பல நூல்களிலிருந்து அரிய பெரிய மேற் கோள்கள் எடுத்துக் காட்டி எழுதப் பட்டிருக்கின்றது. இவ் வாராய்ச்சி நூலைச் செய்து முடித்து ஓர் பெரிய கூட்டத்தில் பிரசங்கித்தவர், எழுதுவதில் புதிய சக்தி வாய்ந்தவரும், 'நவசக்தி' பத்திராதிபருமான திரு வி. கலியாண சுந்தர முதலியாராவர். இந்நூல் நடைமிக்க அழகும், ஆழிய போக்கும் உயரிய பொருளும் உடைத்தாய் நூற்றுக்கு மேற்பட்ட பக்கங்களோடு உயர்ந்த காகிதத்தில் தெளிவாக அச்சிடப் பட்டிருக்கிறது. தவிர சமரசத்தை நிலை நிறுத்தும் பொருட்டுப் பல நூல்களின் மேற்கோள்களன்றி, பல தேசாபிமானிகளின் கருத்துக்களும் இந் நூலில் எழுதப்பட்டிருக்கின்றன. சைவத்தில் அபிமான முள்ளவர்களும் தமிழ் நடைச் சுவையை அனுபவிப்பவர்களும் இப் புத்தகத்தைப் படிப்பார்களாயின் மிக்க சந்தோஷமடைவார்களென்பது திண்ணம்.

([illegible]: என்னும் முகம்மதிய லா: ஆசிரியர், செல்லிக்குப்பம் மௌல்வி மு. அப்துர் ரஹ்மான் சாஹிப். தாருல் இஸ்லாம் காரியாலயம் தபாற் பெட்டி கடு சென்னை. விலை அணா சச.)

இது முகம்மதிய சட்டத்தைத் தெள்ளிதின் கூறுகிறது. ஹிந்தியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப் பெற்றது.

(ஜுனைதா அல்லது பழிக்குப் பழி: ஆசிரியன், பா. தாவுத்ஷா கிடைக்குமிடம், ஷை காரியாலயம்.)

கதை மிகவும் இனிமையாயிருக்கிறது. விலை அணா ச.

([illegible] விலாஸ் தீப் பெட்டி: கிடைக்குமிடம் ட. அ. வ. தீப் பெட்டித் தொழிற் சாலை புனலூர், தென்னிந்தியா.)

இத்தொழிற்சாலையில் செய்யப்பட்ட தீப்பெட்டிகள் வரப் பெற்றோம். அவை காமதேனுவின் படத்தைப் பெட்டியில் தாங்கி நிற்கின்றன. இதன் தோற்றத்திற்காகவே இது எல்லோராலும் ஆதரிக்கத் தக்கது. இதன் விலை பன்னிரண்டுக்கு அணா க. ஒரு குரோஸ் ரூ உ-கஎ.

சிறந்த தமிழ் நூல்கள்!

பாரதநாட்டின் நிலைமை

பொன்விளையும் பூமியெனவும், கற்பக நாடெனவும் புகழ்ப்பெற்று பலவகை ஏற்றமும் இயற்கைவளமும் வாய்ந்த நம் நாடு இக்காலத்தில் சிறப்பும் மேன்மையும் [illegible] விட்டது ஒருபுறமிருக்க, உடுக்கத் துணியும் உண்ண [illegible] வேலையின்றியும் [illegible] படுமோசமான நிலைமை நேர்ந்திருக்கிறது. இத்தகைய இழி நிலைமைக்குக் காரணம் யாதென்பதற்குள்ள விவரங்களையும், இழி நிலையை நீக்கி, முன்போல் உயர் பதம் பெற்று ஒப்புயர்வற்று வாழ்வதற்கான வழிகளையும், இச்சிறு நூலிலே பரக்கக் காணலாம். [illegible] விஷயத்தில் உயர் நிலைமை பெறுதற்கு, செல்வ நிலையில் உயர்நிலை எய்த முனைய வேண்டும். [illegible] தேசச் செல்வ நிலையை [illegible] பெருக்கி செல்வச் சிறப்புற்று சுக வாழ்வு வாழ்வதற்கான காரியங்களில் முனைய வேண்டும் என்பதே இந்நூலின் நோக்கமாகும்.

விலை ரூ. [illegible]—0—0.

மகாத்மா காந்தியின் சிறைச்சாலை அனுபவங்கள்

தென்னாப்பிரிக்காவிலே [illegible] போராட்ட சிறைச்சாலையை தேசாபிமான தவச் சாலையாகக்கொண்டு அரும்பாடுபட்டும் உள்ளம் சலியாது சாத்விக எதிர்ப்பையே சாதனமாகக் கொண்டு, தேசாபிமான தத்துவங்களை மகாத்மா விளக்கிக் கூறியிருக்கும் அரிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. எளிய இனிய நடையில் அவசியம் கருதப்பட்டவாறு எழுதப்பெற்றது.

விலை ரூ. 0—௪—0

சிலப்பதிகாரக் கதை

செந்தமிழ்ப் பெருங்காப்பியம் ஐந்தினுள் ஒன்றாக விளங்கும் சிலப்பதிகாரம் என்னும் பழைய நூல் காவிரிப்பூம்பட்டினத்தை வசித்த கோவலன் அவன் மனைவி கண்ணகி இவர்களின் சரித்திரத்தை விரித்துக் கூறும் அழகிய நூலாகும். அரசர் கடமை நீதி தவறினால் உயிர் வாழார் என்பதையும் பெண்டிர் கற்பின் மேன்மையையும் பற்றித் தெய்வமும் கைதொழுதேத்தும் [illegible] முன்னர் செய்த இருவினையும் [illegible] கூறுகின்றது. [illegible] பெருமையுற்றதின் [illegible] வெளியிட்டனர். [illegible] கள் எழுதியது.

விலை அணா [illegible]

மகாத்மா காந்தியின் இந்திய சுயராஜ்யம்

சுயராஜ்யம் என்பதை நன்கு விளக்கி [illegible]யில் மகாத்மா காந்தி எழுதிய நூலின் மொழி பெயர்ப்பு, நல்ல முறையில் [illegible] போல், நம் தேசத்தில் "[illegible]" என்று தோன்றிய [illegible] மயக்கம் நீக்கி, தெளிவு உண்டாகி, தேசமான உத்யம் உண்டாகும்.

விலை ரூ. 0—௨—0

கிடைக்குமிடம்:-

கணேஷ் கம்பெனி,

89, தம்பு செட்டித் தெரு, சென்னை.

பட்டுப் பீதாம்பர கம்பெனி, காசி.

நாகரிகமான ஜரிகைவேலை செய்த பட்டுச்சேலைகள்,
ரவிக்கைகள், துப்பட்டாக்கள், வெண்பட்டுகள், முதலியன
மிகச் சரசமாகக் கிடைக்கும்.
காஷ்மீர்ச் சால்வைகளும், கம்பளிப் போர்வைகளும், கஸ்தூரி,
கோரோஜனை முதலியனவும், கிடைக்கும்.

முந்துங்கள்! முந்துங்கள்!

SILK PITAMBAR Co.,
BENARES CITY

T. B. T. Malays, French Perfumers,
KALAKKADU POST, TINNEVELLY DIST,

—(o)—

Hair Oil Essence! Cheap Price கூந்தல் தைல வாசனை!

—[o]—

இதனடியில் குறிப்பிட்டிருக்கும் வாசனைகளால் நீங்களே 16- அவுன்ஸ் அளவுள்ள நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், பாதாம் எண்ணெய், ஆலிவ் எண்ணெய் இவைகளில் உயர்ந்த கூந்தல் தைலம் தயார் செய்துகொள்ளலாம். கடைகளில் விற்கப்படும் 2-அவுன்ஸ் புட்டிகளுக்கு ரூ. 1—0—0 கொடுத்து ஏமாற வேண்டாம்.

NAME			PRICE	NAME			PRICE
ரோஸ்	½ oz	Rs.	1—12—0	கஸ்தூரி	½ oz	Rs.	2—0—0
மல்லிகைப்பூ	,,	,,	1—12—0	தாழைப்பூ	,,	,,	1—4—0
[illegible]	,,	,,	1—12—0	தாமரைப்பூ	,,	,,	1—0—0
[illegible]	,,	,,	2—0—0	மகிழம்பூ	,,	,,	2—8—0
சந்தனம்	,,	,,	1—4—0	குங்குமப்பூ	,,	,,	1—0—0
[illegible] ரோஸ்	,,	,,	1—8—0	[illegible]	,,	,,	1—8—0
[illegible]	,,	,,	2—0—0	செண்பகப்பூ	,,	,,	2—8—0
அம்பர்	,,	,,	2—4—0	[illegible]	,,	,,	2—0—0
மருதைப்பூ	,,	,,	1—4—0	பிச்சிப்பூ	,,	,,	1—0—0

முக்கிய குறிப்பு:—எங்களுடைய வாசனைகளில் ஒரே தடவையில் 6-புட்டிகள் வாங்குவோருக்கு ஒரு [illegible]